528

பேட்டை ஆம்பூர்

வாலே பாவா ஸாஹிபவர்களின் குமாரர்

வாலே அப்துல் காதிர் ஸாஹிப்

அவர்களால் கோர்வை செய்யப்பட்ட

ஜைதூன் முஹம்மத் ஹனீப் ஜங்கு.

இதனை

ஷியார் குமாரர்

வாலே அப்துல் வஹ்ஹாப் ஸாஹிப்

அவர்களால் சுத்தப்பிரதியாக்கி

ஷியூர்

பெ. ற. பி. முஹம்மத் ஷரீப் ஸாஹிப்

அவர்களின் முயற்சியால்

ஆம்பூர் தீனியாத் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

முதல் பதிப்பு காபி 1000.

ல்தர் செய்யப்பட்டது.

1930 [அணா 5.

Q7
N30
149640

பேட்டை ஆம்பூர்

வாலே பாவா ஸாஹிபவர்களின் குமாரர்

வாலே அப்துல் காதிர் ஸாஹிப்

அவர்களால் கோர்வை செய்யப்பட்ட

ஜைத்தூன் முஹம்மத் ஹனீப் ஜங்கு.

இதனை

ஷியார் குமாரர்

வாலே அப்துல் வஹ்ஹாப் ஸாஹிப்

அவர்களால் சுத்தப்பிரதியாக்கி

ஷியூர்

பெ. ற. பி. முஹம்மத் ஷரீப் ஸாஹிப்

அவர்களின் முயற்சியால்

ஆம்பூர்
தீனியாத் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

முதல் பதிப்பு காபி 1000.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இதன் விலை] 1930 [அணா 5.

بسم الله الرحمن الرحيم

ஜைத்தூன் முஹம்மத் ஹனீப் ஜங்கு.

அல்லா ஜல்லஷானஹு தன்னை அன்பாய்முன் புகழ்ந்து
அஹ்மது நபிமேல்ஸலவாத்தோதி அதபாய் மனமகிழ்ந்து
அவர்களின் ஆல்கள் அஸ்ஹாபானோர் அடங்கலின் மீதினிலும்
அதுபோல் ஸலவாத்தோதியே யானும் அருள்வதைக் கேளுங்கள்
இஸ்மானபேர்களில் வெகுபேர் இந்த ஜமானுவில்
இராகம்பாட இச்சையை வைத்து இரவும் பகலாக
தேசிங்குராஜன் கதையை படித்து திரிவதால் தெரியாதோர்
ஆமூர் வாலை பாவா ஸாஹிபின் அருமைப் புத்திரனும்
அப்துல் காதிர் ஸாஹிபு மர்ஹூம் ஆலோசனைச் செய்து
இஸ்லாமானோர் தேசிங்கு கதையை எடுக்காதிருந்துவிட
ஹிந்தியிலுள்ள ஜைத்துன்ஜங்கை இதுவே மெட்டாக
அழகாய் பாடி அதுபோலிதற்கும் ஆயுதங்கள் பூட்டி
ஜைத்தூன் கிஸ்ஸாவென்று பேர் வைத்து ஜகத்தில் விளங்குவதை
ஹிந்து முஸ்லிம் இருவகையாரும் இதனைப் பலவாறாய்
மனம்போனப்போல் அச்சுபதித்து மதிப்பை கெடுப்பதினால்
அப்துல் காதிர் குமாரனான அப்துல் வஹ்ஹாபென்போன்
அதுகளைக் கண்டு மனந்தாளாமல் அதிக வருத்தமுற்று
அஸலைப்போலத் திருத்தியபின்பு அப்பெயரை மாற்றி
ஜைத்தூன் முஹம்மது ஹனீபு ஜங்கென ஜாயண்டு பெயர்வைத்து
சுத்தப்பிரதி யாக்கி ரிஜிஸ்தர் செய்து இருப்பதினால்
இனிமேலாக இஸ்லாமானோர் இந்தப்பதிப்பையே
தேடியேவாங்கி தெளிவாய்ப் படித்து தெரியவே எல்லோர்க்கும்

படிப்படியாக செய்திகளெல்லாம் படித்து சொல்வுதோடு
தேசிங்கு கதையைத் தேடவிடாமல் தெளிவாகச்சொல்லி
இஸ்லாமானோர் சண்டையின் ஜறபை எல்லோரும் விளங்க
இதையேவாங்கச் செய்வீரென்று எழுதினேன் நேசர்களே

அலங்காரக்கண்ணி.

முஹம்மது ஹனீபு வேட்டைக்குப் போகுதல்

ஆதிஅனுப்பிய வேதமுறைப்படி அறிந்து சகலோரும்
அணுவளவாகிலும் பிசகில்லாமல் அதபுடனே நடக்க
மானும் புலியும் ஒருதுறை தண்ணீர் மகிழ்வுடனே குடிக்க
பாம்புங்கீரியும் ஓரிடங்கூடி படுத்து நித்திரைசெய்ய
இப்படியரசாய் உமறுகத்தா பிருந்தா ரரசாண்டு
எல்லாதேச இராஜர்களெல்லாம் இவர் கைக்குள்ளாக
அடங்கியொடுங்கி ஆண்டுவருகிற அந்த நாளையிலே
ஒருநாள்முஹம்மது ஹனிபாகாட்டுக்கு உற்ற வேட்டையாட
நாடிதன்கூட நாலுபேர்தன்னை நடந்திட தானழைத்தார்
இரண்டுவீரர்கள் அபுபகர் ஸித்தீக் ஈன்ற பிள்ளைகளாம்
இரண்டுசூரர்கள் உமறுகத்தாபு ஈன்ற பிள்ளைகளாம்
ஆகவேஐந்து பேருங்கூடி ஆலோசனைச் செய்து
காட்டினில் சென்று வேட்டைகளாட கவனித்தன்னேரம்
வேட்டையின் ஆயுத மெடுத்தார் கைகளில் வேண்டுமானதெல்லாம்
பூட்டியே கொண்டார் அஞ்சுபேர்களும் புலிபோல் பரிஏறி
மக்பூலென்னும் குலாமைக்கூட வரும்படியாய்ச் செய்து
மதினமாநகரைவிட்டு வெளியினில் வரவே அன்னேரம்
காற்றைப்போல பறந்தது குதிரைகள் காடுமலைகளெல்லாம்
அப்படி குதிரைகள் பறந்துபோகிற அன்னேர வேளையிலே
செந்தூள்பறந்து தூசியெழும்பிட சூரர்கள் கண்டார்கள்
கருந்தூள் பறந்து தூசியெழும்பிட கண்டாரன்னேரம்
அதிசயமாகவே பார்த்து நிற்கிறார் அஞ்சு ராஜர்களும்
அந்தவேளையி லென்னகாண்கிறார் அஞ்சு ராஜர்களும்
அரசன்மகளார் ஜைத்தூனோடு ஆண்வேடம் பூண்டு
நாற்பது தோழிகள் கூடவிருந்தார் நல்லகுதிரை ஏறி
அப்போது கண்டாள் ஜைத்தூனிந்த அஞ்சுபேரை காட்டில்
மின்னல் மின்னும் போல குதிரையை விட்டாள் ஜைத்தூனும்

காற்றைப்போலவே பறந்தினி வந்தாள் காட்டில் ஜைத்தூனும்
அஞ்சுபேரையும் வளைத்துக்கொண்டாள் ஆங்காரத்தோடு
காகம்பருந்துகள் பறந்திடமுடியா காட்டில் பெரியகாடு
சிங்கம்புலிகளும் திரிகிறதில்லை சேர்ந்த பெரியகாடு
எனக்குசுகலமும் பயந்து ஒளித்திடும் என்றன் சொந்தக்காடு
அந்தக்காட்டினில் தைரியமாக அலைந்து திரிகிறீர்கள்
கொஞ்சமும் எந்தன் பயமில்லாமல் கூடித்திரிகிறீர்கள்
உங்களுயிர்கள் வேண்டுமாயிருந்தால் வரமாட்டீர் இங்கே
முடிவுநாளுங்களுக் காச்சுதுஎன்று மொழிந்தாள் ஜைத்தூனும்
அந்தவார்த்தையைக் காதிலேகேட்டு அரசர் முஹம்மதனிபு
பசுக்கள் புலியை மிரட்டும்வாறாய் பேசுறுயென்முன்னே
கோழிகள்நரியை மிரட்டும்வாறாய் குதிக்கிறு யென்முன்னே
எலிகள்பூனையை மிரட்டும்வாறாய் எதிர்த்தா யென்முன்னே
(நீ) பெண்ணாய்ப்பிறந்தவ ளென்முன்னதிகமா பேசுகிறாய்வீராய்
ஆணுருகொண்டவ ளென்னை நீமிரட்ட ஆகுமாவுன்னாலே
என்றசொல்லை ஜைத்தூன்கேட்டு இருகண் நெருப்பாகி
அந்தவேளையில் ஜைத்தூனுக்கு அதிக கோபமாச்சு
என்னைப்பெண்ணென் றெப்படியறிந்தா யென்றாள் ஜைத்தூனும்
அந்தச்சொல்லைக் காதிலேகேட்டார் முஹம்ம தனிபாவும்
நல்லதுநல்லது சொல்கிறேன்கேளு நான் அறிந்த வயணம்
குதிரையேறிநீ வந்திடும்போது கொங்கை யசையக் கண்டேன்
அங்குபடியினில் பாதங்கள்ரண்டும் அதிர்ந்து ஆடக்கண்டேன்
அந்தவார்த்தைகள் முழுதுங்கேட்டு அப்போ ஜைத்தூனும்
ஆனலாகட்டும் பெண்ணு நானிருந்தால் அதினல் குறைவில்லை
நெஞ்சஞ்சாமல் பேசிடும்வீரா யென்சொல்லைக் கேளு
வாரியடித்தேன் கணக்கில்லாத வலிய வீரர்களை
சூறைகொடுத்தேன் கணக்கில்லாமல் சூர தீரர்களை
மல்லஜட்டிகள் பல்லையிளித்திட மாறிமாறி அடித்தேன்
கணக்கில்லாமல் ராஜர்கள் தலையை கத்தியாலறுத்தேன்
என்னோடெதிர்க்க இந்தவுலகினில் எதிர் ஒருவருண்டோ
இப்படிப்பட்டவள் என்பேருனக்கு என்ன தெரியாதா
சிங்கங்கள் கதறிட வெட்டிகெலித்திடும் ஜைத்தூ னென்பேரு
இராசர்கள் தலையை வெட்டிபிளந்திடும் ஜைத்தூ னென்பேரு
வீரர்கள் தலையை வெட்டிபிளந்திடும் ஜைத்தூ னென்பேரு

ஜட்டிகள் தலையை வெட்டியெறிந்திடும் ஜைத்தூ னென்பேரு
எந்தன் பேரைக்கேட்டால் தண்ணீர் எதுவும் குடிக்காது
என்றன் தகப்பன் இரமெனும்பட்டணம் இருக்கிறான் ராஜாவாய்
அப்படிப்பட்டவன் வயிற்றில் பிறந்த ஆண்சிங்கம் நானே
பதினேழுலட்சம் படைக்கு அதிபதி பார என் தகப்பன்
என்றசொல்லைக் காதிலேகேட்டு இறைபுலி அலிமகனார்
என்பெயருனக்குத் தெரியுமாபெண்ணே யென்றா ரப்போது
பூமியிலுள்ளவை யெல்லாம் நடுங்கும் புலிஅலியின் மகனான்
அல்லாபுலியென பெயர்மிகப்பெற்ற அலியார் பெருமகனான்
ஆதிதூதரின் பேரபிள்ளைநான் ஆண்மை யுள்ளவனான்
உயர்ந்தகுலத்தில் பிறந்தோனானும் என்பேர் முஹம்மதனீப்
வலியில்சண்டையில் தந்திரயுக்தியில் வல்லமை யுள்ளவனான்
என்றவார்த்தையைக் காதிலேகேட்டு எதிர்த்து ஜைத்தூனும்
நல்லது உன்னிட வல்லமையெல்லாம் நானறிவேன் பாரு
இப்போதென்னுடன் சண்டைநீ செய்திடு அலியின் மகனாரே
வல்லமையெல்லாம் என்முன் காட்டிடு அலியின் மகனாரே
என்றவார்த்தையைக் காதிலேகேட்டு ஏகன் அலிமகனார்
சொன்னாரப்போ ஜைத்தூனுக்கு சேதியொன்று கேளு
அடிக்கிறதில்லை முன்னேநாங்கள் ஆங்காரங்கொண்டு
எதிரிஅடித்தபின் நாங்களடிப்பது எங்கள் வழக்கமென்றார்
அந்தச்சொல்லைக் காதிலேகேட்டு அப்போ ஜைத்தூனும்
ஈட்டியையெடுத்து தலைமேல்சுழற்றி எறிந்தாள் அந்நேரம்
கோடையிடியைப் போல்சத்தமு மிட்டுக்குத்தின ளப்போது
முஹம்மதனிபு இடையினில்பட்டது முஹம்ம தனிபாவும்
அந்தக்குத்தினால் சுழன்றுவிழுந்தார் முஹம்ம தனிபாவும்
மூர்ச்சையாய்ப்போனா ரந்தஅடியினால் முஹம்மது ஹனிபாவும்
ஆதியின் கட்டளை யிப்படியிருந்தது முஹம்மது ஹனீபிற்கு
அந்த ஜைத்தூன் பெண்ஷாதியாக ஆதிநாட்டமுண்டு
அதனால் பத்ஹு பெற்றாள் ஜைத்தூன் அந்தவேளையிலே
புலியைப் பசுவும் வெல்வதுமுண்டோ இந்தப் பூமியிலே
பூனையையெலிகள் வெல்வதுமுண்டோ இந்தப் பூமியிலே
நரியைக்கோழிகள் வெல்வதுமுண்டோ இந்தப் பூமியிலே
காயன் நாட்டம்போல் நடந்துமுடிந்தது நாமென்ன செய்வோம்
முஹம்மது ஹனிபை வெல்லமுடியுமா வெட்டால் குத்தாலே

எத்தனைவீரரோ மாண்டாரிவர்கை வாளின் வெட்டாலே
எத்தனைசூரரோ மாண்டாரிவர்கை ஈட்டியின் குத்தாலே
அப்படியிருக்க பெண்ணுலாமா அவரை கெலித்துக்கொள்ள
அந்தவேளையில் அப்படியிருந்தது முஹம்மது ஹனிபாக்கு
மூர்ச்சையாய் விழுந்துகிடந்தார் பூமிமேல் முஹம்மதனிபாவும்
அந்தவேளையில் ஜைத்தூன்கிட்டே அடுத்து நின்றாளாம்
கொஞ்சநேரம் பார்த்து ஜைத்தூன் குதிரை தனைவிட்டு
கீழேயிறங்கி கிட்டேபோனாள் கழுத்தை யறுப்பதற்கு
கத்தியைவாங்கி கையிற்பிடித்து கழுத்தை யறுக்கப்போனாள்
அந்தவேளையி லென்னமாகிடந்தார் முஹம்ம தனிபாவும்
செத்தபிணம்போ லிருந்தாரப்போ தொன்றுந் தெரியாமல்
பேச்சுமூச்சு மில்லாப்போச்சுது முஹம்மது அனிபாக்கு
அப்படியிருக்கக் கண்டு ஜைத்தூன் அந்நேர வேளையிலே
கத்தியையுறையில் போட்டாளப்போ காரியமில்லையென
செத்தபிணத்தை அறுப்பதுநமக்கு சாமார்த்தியமல்ல
அறுத்தால்வீணு கெட்டுபோங்கத்தி ஆகாதென வெண்ணி
நாலுபேர்தன்னைப் பிடித்துக்கொண்டாள் நாலு குதிரையோடு
திரும்பினாள் ஜைத்தூன் தன்னுடசீமைக்கு சீக்கிரமாய் அப்போ
ஓடிஒளித்த அடிமைமக்பூல் உற்றுப்பார்த் திருந்து
முஹம்மது ஹனிபின் கத்தியைப்பார்த்து மூர்ச்சையாகிவிட்டார்
தகப்பனிடத்துக்கு வந்து ஜைத்தூன் சலாஞ்சொல்லி நின்றாள்
மகளைப்பார்த்து சந்தோஷமானான் மன்னன் அந்நேரம்
எந்தன்மகளே வேட்டைக்குப்போய் நீ என்ன கொண்டு வந்தாய்
என்னென்னவேலைகள் முடித்து நீவந்தாய் இப்போது சொல்லு
என்றவுடனேசொன்னாள் ஜைத்தூன் இன்று வேட்டையிலே
முஹம்மதனீபை வாரியடித்தேன் மண்ணுள் தான்போக
நாலுபேர் குதிரையும் பிடித்துநான்வந்தேன் நம்மிட சீமைக்கு
அலியின்பிள்ளையென் றொருவன்வந்தான் ஆங்கா ரங்கொண்டு
அதிககெட்டிக் காரனுமவனும் ஆண்மை யுள்ளவீரன்
கூடவேநாலுபேர் தாங்களுமிருந்தார் குதிரை தானேறி
கொற்றவர் அலியின் பிள்ளையையின்று கொன்று போட்டேனையா
என்றிவள்சொன்ன சொல்லைக்கேட்டு எல்லா மந்திரிகளும்
இந்தப்பேச்சுகள் பொய்யென்றார்கள் ராஜா முன்பாக
முஹம்மது ஹனிபை வெல்வாருண்டோ வெட்டால் குத்தாலே

சீமைகளெங்கும் பேர்மிகப்பெற்றவர் சண்டை செய்வதிலே
ஆண்சிங்கமா முஹம்மது ஹனிபு அலியார் தன்மகனார்
அலியார்பேரைக் கேட்டாலிந்த அண்டம் புவிநடுங்கும்
பொல்லாக்காபிர் தலைகளைவெட்டி பொடிபொடி செய்தஅலி
புத்திரனான் படியால்வெல்வது பொய்யென்று சொன்னார்
அந்தசொற்களை காதிலேகேட்டு அப்பேர் ஜைத்தூனு
மென்மேலாக ஆணையிட்டாள்மெய்யென் ஜைத்தூனு
பின்னுஞ்சொன்னாள் ஜைத்தூன்பேர் பெரியோரே கேளும்
மதீனம்பேர்ய்நான் புலியலியோடு வல்லசண்டை செய்து
அவரைக்கெலித்துநான் வருவேனாகில் ஜைத்தூ னென்பேரு
அப்படிக் கெலிக்காப் போனால்பின்னும் இங்குநான் வரமாட்டேன்
என்பதாய் ஜைத்தூன் அந்தசபைதனில் ஏக்சமர்த்தாக
நானாவிதமா பந்தயஞ் சொல்லி நல்ல ஜைத்தூனும்
அரண்மனைக்குள்போய் புகுந்தாள்ப்பேர் அரசன்மகள் ஜைத்தூன்

இரம்ராஜன் சண்டைக்குவிடுதல்.

அந்தவேளையில் மந்திரிமார்கள் அரசன் தனைப்பார்த்து
எங்கள்சொல்லைக் கேட்டிடவேணும் இந்நேர வேளையிலே
என்றசொல்லைக் காதிலேகேட்டு ராஜனுமப்போது
(ஓ) மந்திரிமார்களே யென்னசொல்கிறீர் மகிழ்வாகச் சொல்லும்
என்றவுடனே மந்திரிமார்கள் எழுந்து சொன்னார்கள்
ராஜாதிராஜர்கள் புகழும்சிங்க ராஜவே கேளு
அறபுதேசத் துள்ளாரிவர்கள் ஆண்மை யறியவேணும்
சிப்பாய்மார்கள் போலவிருக்கிறார் சூரர் நாலுபேரும்
சேவகமார்களை போல்விருக்கிறார் தீரர் நாலுபேரும்
கெட்டிக்காரர்கள் பொலவிருக்கிறார் கிட்டே நாலுபேரும்
இவர்கள்ஏறகுதிரையும் கத்தியும் இன்று கொடுக்கவேணும்
நம்மிடபடைகளை யிங்கேயழைத்து இவர்கள் தன்னோடு
சண்டைக்குவிட்டு வேடிக்கைப்பார்ப்போம் சாமார்த்தியம் தன்னை
இவர்கள் வல்லமை யறிவோமென்றார் எல்லா மந்திரிகளும்
அந்தசொற்களைக் காதிலேகேட்டு அப்போது ராஜன்
மந்திரிமார்கள் சொல்லின்படியே மனது சம்மதித்து
நாலுபேர் தனக்கும் குதிரையும் கத்தியும் கொடுத்தானே ராஜன்
படைகளையெல்லா முன்னேநிறுத்தினான் வேடிக்கை தான்பார்க்க

அந்தவேளையில் ஒன்றுக்கொன்று ஆலோசனைச் செய்தார்
நாலுபேர்களு மொருமனதாக நாடினார் அந்நேரம்
பீஸபீல்செய்வோமாகில் நமக்குப் பெரிய பலனாகும்
கெலிப்போமாகில் பேர்மிகப்பெறுவோம் கெட்டிக்காரரென்று
வெட்டுப்பட்டுப் போவோமாகில் வீடு சுவர்க்கமாகும்
என்று நினைத்து ஏறினார் குதிரை எழுந்து நால்பேரும்
கத்தியையுருவி கையில் பிடித்தார் காபர்கள் தனைவெட்ட
விட்டார் காற்றைப் போலகுதிரைகளை வேடிக்கை தான்காட்ட
புலிகள்போலவே ஆங்காரங்கொண்டு புகுந்தார் படைக்குள்ளே
ஆட்டு குலத்துக்குள் புலிபோல் புகுந்தார் ஆங்காரங்கொண்டு
துண்டு துண்டாய் விழவே வெட்டினார் சூரர் தான்மடிய
குதிரைகள் துண்டாய் விழவே வெட்டினார் குவிய மலைபோல
பிணக்காடாக்கினார் நாலுபேர்களும் பெரிய படையெல்லாம்
செந்தூள் பறந்துபோச்சுது எங்கும் சேனைகள் தெரியாமல்
கருந்தூள் பறந்து மூடிக்கொண்டது கண்களே தெரியாமல்
அந்தவேளையில் என்னசெய்தார் அரசர் நான்குபேரும்
அல்லா தன்னை மனதில் நினைத்து அறுத்தார் காபர்களை
வீச்சுக்கு வீச்சு துண்டு துண்டாய் விழுகுதே பிணங்கள்
தயிரின் குடம்போல் மூளைகள் சிதறி தரையில் விழுகுதுபார்
இரத்த ஆறுகள் ஓடிப் போச்சுது இராணுவர் தனக்குள்ளே
குப்பல் குப்ப லாக பிணங்கள் குவிந்து போச்சுதுபார்
அந்தவேளையி லென்னசொல்கிறான் அரசன் இறமுடையோன்
வீரர்கள் நான்குபேரையும் நீங்கள் விடாமல் பிடியென்றான்
அந்தச் சொல்லைக் காதிலேகேட்டு அப்போது படைவீரர்
அவர்களைப்பிடிக்க போனாரெல்லாம் அங்குமிங்கும் சுற்றி
பிடிக்கப்போனோ ரெல்லாம் வெட்டால் போனாரிரு துண்டாய்
கிட்டேயொருவரும் நெருங்கிப்பிடிக்க கிட்டாமல்போச்சு
அஞ்சி அஞ்சியே நின்றாரெல்லாம் அவர்களைப் பிடிக்காமல்
தூரமாய்விலகி நின்றாரெல்லாம் சூரரைப் பிடிக்காமல்
ஒருவர்கையிலு மகப்படவில்லை உத்தம ரப்போது
அந்தசேதியைக் காதிலேகேட்டாள் அரசன் மகள் ஜைத்தூன்
மெத்தையைவிட்டு கீழேயிறங்கினாள் வேங்கை ஜைத்தூனும்
சீக்கிரமாகவே குதிரையிலேறினாள் சிங்க ஜைத்தூனும்
காற்றைப்போல விட்டாள் குதிரையைக் கடுக ஜைத்தூனும்
சண்டை முன்னே ஓடியே வந்தாள் சாகிரதையாக

கண்ணால் கண்டாள் ஜைத்தூன்ராணி கனத்த படையெல்லாம்
மாண்டுகிடக்கிற பிணத்தைக்கண்டு மயங்கி ஜைத்தூனும்
சிப்பாய்மார்களே வெட்டிடவேண்டாம் சிறிதுநேரம் நில்லு
சேதமாபோகுது நம்படை யெல்லாம் சிறிதுநேரம் நில்லும்
சண்டையை நிறுத்திபோடுங்கள் நீங்கள் சர்தாரானோரே
கத்தியும் குதிரையும் நீங்கள்கொடுததால் காரியமுண்டாகும்
உயிரோடிருக்க நாடினால் நீங்கள் என்சொல்லைக் கேளும்
உருண்டு மடிந்திட நாடினால் நீங்கள் ஒரேவெட்டில் போவீர்
முஹம்மது அனிபை அடித்தாப்போல மோதி அடித்திடுவேன்
துண்டு துண்டாய் போக உடல்களை தூளாய்ச் செய்திடுவேன்
வீணுமடிந்திட வேண்டாமென்றாள் வீரிய ஜைத்தூனும்
அந்தச்சொல்லைக் காதிலேகேட்டு அந்த நாலுபேரும்
சண்டையை நிருத்தி போட்டார் நாலு சறுதாரானோரும்
ஜைத்தூன்சொல்லின் படியேகொடுத்தார் சறுதாரானோரும்
சந்தோஷமாச்சுது ஜைத்தூனுக்கு சறுதார்கள் மீதில்
அந்தவேளையி சென்னசெய்தாள் அரசன் மகள் ஜைத்தூன் [ரையும்
புகுத்தி அடைத்தாள் சிறையினில் ஜைத்தூன் புலியெனும் நால்வ

ஜைத்தூன் மதீனம் போகத் துணிதல்

தகப்பனைப்பார்த்து என்னசொல்கிறாள் ஜைத்தூனப்போது [து
சண்டைக்குப் போகிறேன் அலியைக்கெலித்திட சாமார்த்தியஞ்செய்
பட்டணம் கைவசமாக்கி நான்வாரேன் பாரசண்டைசெய்து
எந்தன் பெயரை நிறுத்திவருகிரேன் எல்லாம் பயந்திடவே
மதீன நகரம்நான் போறேனென்றாள் மகாராஜனோடு
அந்தசொல்லைக் காதிலேகேட்டு அரசன் அப்போது
என்னசொன்னாய் என்னசொன்னாய் யெந்தன் மகளேநீ
அந்தப்பட்டணம் போகநீவேண்டாம் அங்கே யிருப்போர்கள்
கொடியவம்பர்கள் வல்லமைக்காரர்கள் கொஞ்சமுமஞ்சார்கள்
போகநீவேண்டாம் போனால்விளையும் பொல்லாங்கென்பேரில்
ஆகாவேலைக ளாகிடுமங்கே ஆபத்ததிகமாகும்
போனாலென்ன வந்துமுடியுமோ போகவேண்டாம்நீ
என்றசொல்லைக் காதிலேகேட்டு எழுந்து ஜைத்தூனும்
பாதம் பணிந்து சொன்னாளப்போ பயப்படவேண்டாம்நீ
ஜயம்பெற்று நான் வருவேனையா தடுத்திடவேண்டாம்நீ
சண்டைசெய்து நான் வருவேன்கெலித்து தாரும் விடையென்றாள்
அந்தவார்த்தையைக் காதிலேகேட்டு அப்போ ராஜாவும்

போய் வா மகளே யென்றனப்போ பூரிப்பாய் ராஜன்
தகப்பன்சொல்ல ஜைத்தூனெழுந்து சண்டைசெய்வதற்கு
பட்டாகத்தியை யெடுத்துப்பிடித்தாள் பாங்காய்கைதனிலே
தண்டாயுதத்தைக் கூடவெடுத்தாள் சாமர்த்தியங்காட்ட
கத்தியையெடுத்துப் பூட்டிக்கொண்டாள் கழுத்திலப்போது
ஈட்டியையெடுத்துப் பிடித்தாள்கையில் எதிர்த்த பேரைக்குத்த
சண்டைஆயுத மெல்லாமெடுத்தாள் ஜைத்தூன் அந்நேரம்
குதிரையைக் கொண்டுவா இங்கேயென்றாள் கொடிய ஜைத்தூனும்
சிங்காரித்தார் நானாவிதமாய் சிறந்த குதிரை தன்னை
குதிரையை ஜைத்தூன் முன்னில் நிறுத்தினர் கொண்டுவந்துவீரர்
அந்தவேளையில் ஜைத்தூன்கூட அடிமையான பெண்கள்
நாற்பதுபேரும் ஆயுதம்பூட்டி நல்லகுதிரையேறி
வீரியத்தோடு வந்துநின்றார்கள் ஜைத்தூன் முன்னாக
அவர்களைக்கண்டு ஜைத்தூனப்போ ஆங்காரங்கொண்டு
போட்டாள்காலை குதிரையின்மேலே பூவை ஜைத்தூனும்
அப்போது குதிரை வேகங்கொண்டது அடிகள் தூக்கிவைக்க
படபட வென்று நடந்து போகுது பறவைபோல குதிரை
தடதட வென்று நடந்து போகுது தாண்டி தாண்டி குதிரை
நாற்பது பெண்களும் கூடவே நடந்தார் நரியும் புலியும் போல
மதீனமாநகரை நோக்கியே விட்டார் மண்டூள் தான் பறக்க.

முஹம்மதனிபு எழுந்து மதீனம் போகுதல்.

மூர்ச்சையாய் விழுந்து கிடந்தார் காட்டில் முஹம்மது ஹனிபாவும்
அவருட குதிரைக் காரனுமப்போ அங்கே வந்து நின்று
ராஜருக்கெல்லாம் ராஜாவான ராஜாவே யின்று
இன்னம் தூங்கிறீர் எழுந்திருமென்று ஏகசத்தமாக
கூப்பிட்டுச் சொல்லிட முஹம்மதுஹனிபு கேட்டு அப்பொழுது
கண்ணை முழித்து எழுந்துகொண்டார் கனவு கண்டாப்போல
எழுந்தவுடனே முஹம்மது ஹனிபு என்ன சொல்லுகிறார்
நல்ல கனவுகண்டு நான் இருந்தேன் நித்திரை செய்யும் போது
என்னை யெழுப்பின வயணமுமென்ன எனக்குச் சொல்லுமென்றார்
அந்த சொல்லைக் காதிலேகேட்டு அடிமை அப்போது
அரசாய் வந்த முஹம்மது ஹனிபே அடியேன் சொல்லக்கேள்
தங்களைச் ஜைத்தூன் அடித்த அடியினால் தாங்கள் மூர்ச்சையாகி
கீழே விழுந்து வுணர்வில்லாமல் கிடந்தீர் களைப்பாக

சவத்தைப் போல வானீரப்போ ஜைத்தூன் குதிரைவிட்டு
கீழே யிரங்கி பார்த்தாளப்போ கழுத்தை யறுப்பதற்கு
பார்த்தாள் கத்தியை கையிலேயுருவி பா ர சைத்தூனும்
செத்த பிணம்போ லிருப்பதைக் கண்டு திரும்பினுளப்போது
குதிரைமே லேறி நாலுபேரையும் குதிரையும் தான்பிடித்து
கொண்டு போனுள் ஜைத்தூனென்று கூறினுன் அடிமையும்
அந்தச்சொல்லைக் காதிலே கேட்டு அரசர் முஹம்மது ஹனீப்
அதிகதுயரங் கொண்டாரப்போ அண்ணல் முஹம்மதனீப்
விஜனத்தோடு போனுர் மதினம் முஹம்மது ஹனிபாவும்.

தாயார் மகனைக்கண்டு சொல்லுதல்.

வாடியமுகமாய் முஹம்மது ஹனிபா வந்தார் வீட்டுக்கு
தாயார் மகனுர் முகத்தைப்பார்த்து தயவோடு சொல்வார்
என்றனுயிரே என் கண்மணியே என்னவயணத்தாலே
உறங்கிய முகமாய் வந்தாயென்று உறுத்தி உறுத்திக் கேட்டாள்
மறுமொழி யொன்றும் சொல்லவே யில்லை முஹம்மது ஹனிபாவும்
அப்போது பீவி ஹனிபா அந்த அடிமைதனைப் பார்த்து
நடந்தகாரிய மெல்லாமிப்போ நானறியச் சொல்லு
சேதிகளெல்லா மறைப்பில்லாமல் தெரிய எனக்குச் சொல்லு
எனவே பீவி ஹனிபாகேட்க எல்லாம் அடிமை சொன்னுன்
ஜைத்தூனுலே பட்டபாடுகளின் சேதியெல்லாஞ் சொன்னுன்
ஆதியிலிருந்து கடைசிவரைக்கும் அடிமை சொல்லியதை
ஹனீபா அம்மாள் கேட்டு மிகுந்த ஆயாசங்கொண்டு
மகனைப்பார்த்து என்ன சொல்கிருர் ஹனிபா அம்மாளும்
உலகினிலுள்ள வீரரை வெட்டினேர் உன் தந்தை அலியார்
தேவுபரிகளை துண்டாய் வெட்டினேர் உன் தந்தை அலியார்
பூதஜங்கிகளை பொடி பொடியாக்கினேர் உன் தந்தை அலியார்
(நீ) அப்படிப்பட்டவர் மகனுய்ப்பிறந்தாய் ஆண் பிள்ளை யென்று
உந்தன் தாயார் எப்படிப்பட்ட ஊக்கமுள்ளவளாம்
எத்தனை ஜட்டியோ மல்லால் மாண்டோர் எண்ணிடமுடியாது
சண்டைக்குப் பெரும்புலி உந்தன் தாயார் சாமார்த்தியக்காரி
தன்மகனுகை பிறந்தாயானுய் தயிரியமில்லாமல்
பெண்ணின் கையாலடிபட்டாய் நீ பேடிகள் போல் மகனே
வீரியமெல்லா மற்றுபோச்சுதோ வேட்டை ஆடுகையில்
இப்படிப்பட்ட பிள்ளையாக நீ யென்வயிற்றிற் பிறக்கலாமா

இதிலும் இறந்து போகுதலெனக்கு ஈனமொன்றுமில்லை
ஆணாய் பிறந்து யிருந்தாலவளை அடித்து கெலித்து வருவாய்
ஆனாலல்லாதால் அவள் கையால் நீ அடிப்பட்டு வந்தாய்
என்று தாயார் சொல்லிட முஹம்மது ஹனிபா தான்கேட்டு
தலையைக்குனிந்தார் முஹம்மது ஹனிபு தாயார் சொல்கேட்டு.

முஹம்மது ஹனிபு ஜைத்தூனைக் கெலிக்கப்போகுதல்.

தாயார் சொன்ன மொழியைக்கேட்டு தைரியமிக செய்து
அந்த வேளையி லென்ன வெண்ணினார் முஹம்மது ஹனிபாவும்
பெண்ணாய்ப்பிறந்த ஜைத்தூன்கூட பெரிய சண்டை செய்து
கெலித்திடவேணும் அதன் பின்னவளை கிடங்கிலடைக்கவேணும்
அவளுட நாற்பது பாந்திமார்களை சிறையிலடைக்கவேணும்
சிறையிலடைத்த நாலுபேர் தங்கள் சிறையை மீட்கவேணும்
இறமெனும் பட்டணம் புகுந்து அவ்வூரை யிடவேணுங் கொள்ளை
எதிர்த்திடும் பேர்களை துண்டு துண்டாக இரையாய்க் கொடுக்கவே[ணும்
இராஜனுடைய சேனைகள் முழுதையும் இஸ்லாமாக்கவேணும்
நகரைப்பிடித்து கைவசமாக்கி நாம்பள் ஆளவேணும்
இப்படிநானு விதமாய் மனதினுள் எண்ணினாரப்பொழுது
மனதுக்குள்ளே சத்தியஞ்செய்து மனது துணிவாச்சு
வெற்றிபெறுமற் போனால் மதீனம் வரவே கூடாது
சண்டை செய்து நான் கெலிக்காப் போனால் திரும்பி வரமாட்டேன்
இப்படி நினைக்க கோபமூண்டது அந்நேர வேளையிலே
கண்களிரண்டும் சிவந்து போச்சுது முஹம்மது ஹனிபிற்கு
படபட வென்று மீசை துடிக்குது முஹம்மது ஹனிபிற்கு
பல்லை நறநற வென்று கடித்தார் முஹம்மது ஹனிபாவும்
குதிரைக்காரனைக் கூப்பிட்டுச் சீக்கிரம் குதிரையைக் கொண்டுவா நீ
என்ற சொல்லைக் காதிலே கேட்டு அப்போ குதிரைக்காரன்
சீனியை யெடுத்துப் போட்டுக் கட்டினான் சீக்கிரமாயவனும்
சிங்காரித்துக் குதிரையை யப்போ தீரவீரசூரன்
எதிரில் கொண்டுவந்து நிறுத்தினானிந்த பூமியசைய
அந்த வேளையில் முஹம்மது ஹனீபு ஆயுதந் தனை யெடுத்தார்
கத்தியை யெடுத்து கையில் பிடித்தார் கனத்தவீரசூரர்
அம்பையெடுத்தினி போட்டார் தோளில் ஹனிபாவின் மகனார்
சக்கரமெடுத்துக் கையில் பிடித்தார் சமர்த்த ரலிமகனார்

தண்டாயுதத்தை யெடுத்துப் பிடித்தார் ஜைத்தூனே வெல்ல
கேடகமெடுத்து தோளில் போட்டார் கெட்டிக்கார வீரர்
குதிரை மேலேறினர் பூமியதிர்ந்திட கோபமிகவாகி
செந்தூள் பறந்திட விட்டார் குதிரையை ஜைத்தூன் தனைநாடி
பூமியதிர்ந்திட விட்டார் குதிரையை பூவைகள் தனைநாடி
கருந்தூள் பறந்திட விட்டார் குதிரையை காரிகை தனைநாடி
கூட அடிமையை முஹம்மது ஹனிபு கூடகூட்டி போனர்
இறமின்புறமாய் குதிரையை விட்டு எல்லாங்கடந்து போனர்.

பீபீஹனிபா பாந்தியைக் கேட்குதல்.

அந்தவேளையில் ஹனிபா அம்மாள் அடியாள் தனைப்பார்த்து
எந்தன்கண்மணி யானமகனர் எங்கே காணேமென்றார்
ஈரல்கொழுந்தா யுகந்தமகனர் எங்கே காணேமென்றார்
ஏகன்புலிஅலி யீன்றசெல்வனர் எங்கேகாணேமென்றார்
அந்தசொல்லைக் காதிலேகேட்டு அப்போ பாந்திசொல்வாள்
அம்மாசொல்வேன் காதுகொடுத்துகேள் அரசருன்மகனர்
கோபத்தோடு கண்கள்சிவந்து குதிரைமேல்தானேறி
ஆயுதம்பூண்டு போனரெங்கையோ அறியே னென்றும்
கூடஅடிமையைக் கூட்டியேபோனர் கோமானலிமகனர்
என்றசொல்லைக் காதிலேகேட்டு ஏங்கி ஹனிபாவும்
நாம்பள்சொன்ன சொல்லால்மகனுக்கு நாணமிகவாகி
நடந்துபோனர் குதிரைமேலேறி நானெங்கே காண்பேன்
எந்த வழியாய் போனதுமறியேன் என்ன வேலையாச்சு
எவ்விடங்கண்டு தேடிப் பிடிப்பேன் என்று எண்ணமாச்சு
அதிகப்படையினை யுள்ளவள் ஜைத்தூன் அதிக கெட்டிக்காரி
ஒன்பதுகோடி படையினை யுடையவன் இரமின் ராஜாவும்
சத்துருவானவன் அவனை ஜெயித்திட சண்டைக்கிப் பாலகனும்
போனபடியினு லென்ன விளையுமோ போவோ மெனவெண்ணி
அப்போது தாயார் சஞ்சலங்கொண்டு அதிகக் கலக்கமாகி
வேதனையாகியே மனது துயரமாய் விசன மதிகப்பட்டார்.

ஹனிபா அம்மாள் மகனைத் தேடிப்போகுதல்.

அங்கேபோக விடாமல் மகனை அழைத்து வருவோமென்று
சீக்கிரமாக ஆயுத மணிந்து சிங்கக்குதிரை யேறி
இறமின் புறமாய் குதிரையை விட்டார் எழுந்துபறக்கதூளு
இப்படிக் காட்டின் புறமா ஹனிபா ஏகிநடக்கும்போது

இருந்தாப்போலே இருந்து தூசியும் எதிரிலெழும்பக் கண்டார்
கண்டார் நாற்பது மேலொரு குதிரையும் காட்டினிலோடிவர
அதிக வேகமாய் வாராள் ஜைத்தூன் ஆங்காரங்கொண்டு
ஒத்தைக் குதிரையைக் கண்டாள் ஜைத்தூன் ஓடிவந்துகிட்டே
என்னுட காட்டினிலென்னமாய் வந்தா யென்றாள் ஜைத்தூனு
கொஞ்சமு மனமஞ்சாமலே வந்தாய் காட்டில் வேட்டையாட
என்னிட பயமுமில்லாமல் போச்சுதா உனக்கு இந்நேரம்
முடிவுநாள் கிட்டே ஆச்சுதென்றாள் மேக ஜைத்தூனும்
சண்டை செய்யென்றாளென வப்போ சாமர்த்திய மாக
உன்னிட வல்லமை என்முன்காட்டு ஒத்தைக் குதிரைக்காரா
அந்தச் சொல்லைக் காதிலேகேட்டு அப்போ ஹனிபாவும்
என்னசொன்னா யுந்தன் காடா யிதுவுன் பயித்தியமா
வேட்டையாடுவோர்க் கெல்லாம் காடுகள் வேண்டுமான இடமாம்
வீணுமொழிகளைப் பிதற்றிடவேண்டாம் விருதுமிகக் காட்டி
ஆண்ணின் உடைகளை உடுத்தி ஆண்போல் ஆயுதம் தான்பூட்டி
காட்டுக்கு வேட்டையாட நீவந்தது காரியமொன்று மில்லை
வீட்டுக்குள்ளிருந்துநீ நூலினை நூற்பது உனக்குத் தகுந்தவேலை
விருதுகளணிவது ஆடவர் போல பெண்கள் வேலையல்ல
அந்த வார்த்தையைக் காதிலேகேட்டு அப்போ ஜைத்தூனும்
கண்கள் ரெண்டும் சிவந்து போச்சுது கடுங்கோபத்தாலே
பெண்ணு நானென்று எப்படி யறிந்தா யப்படி அல்லவோநான்
புலிகள் யானையைத் துண்டா நறுக்கிடும் பெரியசிங்கம்நானே
அந்தச் சொல்லைக் காதிலேகேட்டு ஹனிபா அம்மாளும்
உன்னுடமாரின் கொங்கைகள் ரெண்டும் அசைந்திட நான்கண்டேன்
குதிரையின் அங்கு படியினில் ரெண்டு காலுமதிரக்கண்டேன்
அதனாலுன்னைப் பெண்ணென் றறிந்தேன் ஆணல்ல வென்று
அந்தச் சொல்லினைக் காதிலே கேட்டு ஆங்காரங்கொண்டு
(நான்) பெண்ணாயிருந்து பிளந்தேன் வெட்டி பெரியராஜர்களை
கணக்கில்லாத பேர்களு மாண்டார் என் கைவாளாலே
எண்ணிக் கையில்லா பேர்களுமாண்டார் என் கைவாளாலே
உன்னுட காலமும் அடுத்தது என்று உருவினாளேகத்தி
கத்தியை யுருவி ஓங்கி வெட்டினாள் கடுங்கோபத்தாலே
ஹனிபுஅம்மாள் தலைமேல் வெட்டிட அப்போது ஹனிபாவும்
கேடகத்தாலே தாங்கினார் வெட்டை கொஞ்சமு மஞ்சாமல்
அந்த வெட்டினால் கேடகமறுத்து அந்த வெட்டுருகி

தலையில் நாலு விரற்கடை அறவுஞ் சஞ்சலமிகவாக
காயம்பட்டது ரத்தமு மொழுகிட கண் மினுமினுப்பாகி
கிறுகிறு வென்று சுழலுவதாகிக் குந்தினூர் ஹனிபாவும்
அந்த வேளேயி லென்னசெய்தாள் ஆங்காரச் ஜைத்தூன்
பாசக் கயிற்றினே ஹனிபாமேலே போட்டாள் அந்நேரம்
மீனைப்பிடிப்பது போலே பிடித்தாள் ஹனிபா அம்மாளே
அந்த வேளேயிலென்ன செய்தார் ஹனிபா அம்மாவும்
அல்லா தன்னே நாடிபுகழ்ந்து அப்போ துஆக்கேட்டார்
உந்தன் காவலில் வைத்திடுவென்னே யிந்த வேளேயிலே
உதவி யொருவரு மில்லையெனக்கு உன்னே யன்றியிப்போ
அந்த வேளேயில் முஹம்மது ஹனிபு ஆயாசங்கொண்டு
போகிறவழியில் விசனமு மானூர் பெற்ற தாய்மேலே
என்னேத்தேடி யென் தாய்வருவார் என்ன வருத்தமாமோ
எங்கே கண்டு பிடிப்பாரென்னே என்று விசனமாக
இப்படி நானுவிதமா யெண்ணி யிருந்திடும் வேளேயிலே
அடிமையைப் பார்த்துச்சொன்னூர் முஹம்மது ஹனிபா அந்நேரம்.

வசனம்.

இம்மேட்டின்மேலேரி நகமுகமுஞ் சுற்றிப்பார் என்னகாரியங்கள் தெரிகிறதென்று சொல்ல, அதை குலாம்கேட்டு அப்படி ஏறிப் பார்க்கையில் அங்கோரிடத்தில் ஜைத்தூன் ஹனீபா அம்மாளே பாசக் கயிற்றால் பிடித்திருக்கிறூர்களென்று சொன்னூர். அச்சொல்லே முஹம்மது ஹனிபு கேட்டு, இந்நேரம் நாம் உதவியாய்ப் போகாமற்போனல் வீணுக்கொன்று போடுவாளென் றெண்ணி மின்னல் மின்னினூற் போல குதிரையை ஓட்டம்விட்டு அங்குசேர்ந்தார். அங்கு தாயாரைக் கண்டு உடனே அக்கயிற்றை அறுத்துப் போட்டு தாயை மீட்டுக் கொண்டார். அதை ஜைத்தூன் கண்டு அதிக கோபங்கொண்டு நான் பிடித்த வேட்டையை விடுவித்து விட்டாயே உன் பெயரென்ன சீக்கிரமாகச் சொல். இன்னும் இந்த ஸவார் யாரென்று கேட்டாள், அப்பொழுது முஹம்மது ஹனிபு என் பெயர் முஹம்மது ஹனிபு. இவர்கள் என் தாயார் நான் உன்னுடன் சண்டை செய்ய வந்தேன், என்னுடைய தாயார் எனக்காக என்னேத்தேடி வந்தார்களென்று சொன்னூர் அப்பொழுது ஜைத்தூன் என்னேப்போல உலகினில் பெண் வடிவானோர்களில் வல்லமையுள்ளவர்க ளொருவருமில்லை யென்று சொல்லிப் பின்னும் உன்னுடைய தாயார் மிகுந்த பெலமுள்ளவள்.

பர்தொரு அச்சமின்றி என்னுடன் எதிர்போராடினள். ஆனாலும் நீ முன்னால் என் கைவாளின் வெட்டிற்குத் தப்பிப் பிழைத்து போனாய். அப்பொழுதே உன்னுடைய கழுத்தை அறுக்காமல் போயினேன். ஆகிலுமிப்பொழுது உனக்கு முடிவின் காலங்கிட்டே நெருங்கினதென்று சொல்லி ஒன்றுக் கொன்று ஆங்காரத்தோடு வெட்டத்துணிந்து கத்திகளையுருவி கையிற்பிடித்துக் கொண்டு இடி யும் இடியும் போல, மலையும் மலையும் போல, புலியும் புலியும் போல ஆக்ரமித்து நல்ல சண்டை செய்தார்கள். அந்நேர வேளையில் பீவி ஹனிபா இரத்தம் ஒழுகும் காயத்தின்மேல் ஒரு துணி யால் கட்டிக் கொண்டு தையம்முஞ் செய்து இரண்டு றக்அத்து நபில் தொழுதுக்கொண்டு இரண்டு கையுமெடுத்து ஹக்த ஆலர்வினள வில் (யாகரீம்-யர்றஹீம்) இந்தச் சமயத்தி லென்பிள்ளைக்கு வெற்றி யைக்கொடு, அவள் மிகுந்த பெலமுள்ள வளாயிருக்கிறாள். இப் பிள்ளை உன்னுடைய புலிஅலியின் பிள்ளை. நீ வெற்றியைக்கொடு. அப்படி நீ கொடாவிட்டால் எங்களுடைய பெயர் போய்விடுமென்று சேட்டைத்து அந்நேரம் ஹக்தஆலர்வினிடத்தில் கபூலாய்விட்டது. அந்தச் சமயத்தில் ஜைத்தூனும் முஹம்மது ஹனிபாவும் இருபேரும் கத்தியையுருவி ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டார்கள். அவ் வெட்டுகளை ஒருவருக்கொருவர் படாமல் கேடகத்தினால் தாங்கிக் கொள்வார்கள். இப்படி வெகுநேரம் வரைக்கும் சண்டை செய்து ஒருவருக்கொருவர் தாழாமல் கடைசியில் முஹம்மது ஹனிபு ஜைத் தூனைப்பார்த்து நீ யென்னுடைய இடையில் கையைப்போட்டு உன் னுடைய வல்லமை யெல்லாங்கூட்டி என்னைத் தூக்கென்று சொல்ல, அப்பொழுது ஜைத்தூன் முஹம்மது ஹனிபாவின் இடுப்பில் தன் கையைக் கோர்த்து தன் பலமெல்லாங்கூட்டி குதிரையின் மேலிருக் கிறவரை தூக்கினள். அவர் எழும்பவில்லை பின்னும் முகம்சிவக்கும் படியாக அதிக பலமாக தூக்கினாள். அப்பொழுதும் எடுக்கமுடிய வில்லை. பின்பு முஹம்மது ஹனியு ஜைத்தூனுடைய இடுப்பில் தன் கையைமாட்டி ஒரு சத்தமிட்டு மேலுக்குத் தூக்கி தலைமேலாகச் செய்து வானத்தின் புறமாகத்தூக்கி யெறிந்துவிட்டார். அப்பொழுது தாயார் மகனைப்பார்த்துக்கூவி, ஓ யென்கண்மணியான மகனே! நீ சீக்கிரமாக ஜைத்தூனைக் கீழேவிழ ஒட்டாமல் தாங்கிக்கொள் தாங்கா விடில் வீணாயிறந்துபோவாள். ஆகையால், நீ தாங்காவிட்டால் உனக்கு நான் பால்கொடுத்ததைப் பொறுப்பிக்கேனென்று சொல்ல அதை முஹம்மது ஹனிபு கேட்டு, கீழேவிழ ஒட்டாமல் கையாற்றாங்கிக்

கீழேவிட்டார். அப்பொழுது ஜைத்தூன் முஹம்மதனிபாவைப் பார்த்து நானொரு விரதஞ்செய்துக்கொண்டேன். அதென்னவெனில் என்னுடன் சண்டைசெய்து என்னையார் ஜெயிப்பார்களோ அவருக்கே நான் மனைவி. ஆகையால் நான் தங்களுடைய அடியாள். தாங்கள் எனக்குப் புருஷரென்று சொன்னாள். அந்த சொல்லை முஹம்மது ஹனிபுகேட்டு, நல்லது நீ குபிரை நீக்கி கலிமா ஒதி நேர்வழியிலா கென்று சொன்னார். அதைக்கேட்டு உடனே ஜைத்தூன் கலிமா ஒதி ஈமான்கொண்டாள். கூட அவர்களுடைய 40 பாந்திகளும் கலிமா ஒதி ஈமான்கொண்டு இஸ்லாமாகினார்கள்.

அப்போது முஹம்மது ஹனிபு தாயாரைப் பார்த்து நீ ஜைத்தூனையும் கூட இந்த 40-பாந்திகளையு மழைத்துக்கொண்டு மதீனத்திற்குப்போங்கள். நான் செய்துவந்த ஷறத்தின்படி இறமென்னும் பட்டணம்போய் அவ்வரசனோடு சண்டைசெய்து ஜெயித்து இஸ்லாமாக்கி அந்த 4-பேரையும் மீட்டுக்கொண்டு வாராமல் என்முகத்தை மதீனத்திற்குக் கொண்டுவரமாட்டேனென்று சொல்லி ஜைத்தூன் வல்லமைக்காரி யென்று அவளை நம்பாமல் இரண்டு கையையும்பிடித்து மற்ற 40-பாந்திகளையும் அதேபடி கைகளைக்கட்டி தாயாரின் புறமாக ஒப்படித்துவிட்டு மதீனம் போகச்சொல்லித் தான் இறமெனும் பட்டணத்தை நாடிப்போயினர். பின்பு ஹனிபு அம்மாள் ஜைத்தூனையும் நாற்பது பாந்திகளையும் கைக்கட்டோடு குதிரைகளின் மேலேற்றி மதீனத்தின் புறமாக வழிபிடித்து நடந்துபோகையில் அக்காட்டில் ஒரு ராஜன் தன் படைகளோடு வேட்டையாடி வருகிற சமயத்தில் இரண்டுபுலிகள் அவன் கண்ணில் எதிர்ப்பட்டது. அப்புலிகளின்மேல் தன் குதிரையைவிட்டான். புலிகள் முன்னும் குதிரை பின்னுமாய் ஒடி வரும்போது அந்தக்கொடிய அரசனுடைய பார்வை இவர்கள் பேரில் விழுந்தது. அப்பொழுதவன் தன் குதிரையை பீவிஹனிபா ஜைத்தூன் 40-பாந்திகளுமாக வருகிற பாதையை வந்து வளைத்து நீயார் எங்கிருந்து வருகிறாய் இவர்களை யெங்கே கொண்டுபோகிறாய், இவர்களும் யாரென்று கேட்டான். அதற்கு பீவிஹனிபா அப்பாதகனைப்பார்த்து நான் அலிபுலியாருடைய பெண்ஷாதி இப்பெண் என்னுடைய மருமகள். மற்றவர்களெல்லாம் பாந்திகளா யிருக்கிறார்கள் நாங்கள் மதீனத்திற்குப் போகிறோமென்று சொல்ல, அதைச் சண்டாள ராஜன்கேட்டு, நீ உன்மருமகளை என்வசம்விட்டு உன்னுடைய பட்டணத்தை நோக்கி உன் வீடுபோய்ச் சேரென்று சொன்னான். இச்சொல்லை பீவிஹனிபாக் கேட்டு அதிகக் கோபங் கொண்டு

இரண்டுபேரும் ஒன்றோடொன் றெதிர்த்துவந்து அதிகச் சண்டை செய்தார்கள். அந்நேர வேளையில் பீவிஹனிபாவை அந்தக் கொடிய காபராகிய அரசன் தண்டாயுதத்தினு லடித்தான். அவ்வடி முன்னால் காயம் பட்டிருந்த காயத்தின் பேரில் விழுந்தது. அதனாலப்பொழுது பீவி ஹனீபாவிற்கு அதிக வருத்தம் தோன்றினது அப்பொழுது பீவிஹனிபா ஹக்தஆலாவினிடத்தில் யாறப்பே! நான் உன்னுடைய அலியாருடைய மனைவி ஆகையாலிந்நேரவேளையில் என் வெட்கத்தைக் காப்பாற்றி இந்த பாதகனைவிட்டு என்னை மீட்கவேணுமென்று துஆக் கேட்க, அந்த துஆ ஹக்த ஆலாவினிடத்தில் கபூலாய்விட்டது. அந் நேர வேளையில் ஒரு பக்கமாயிருந்து தூசிளழும்பினது. அந்தத்தூசி அவன் கண்ணில் வீழ்ந்தது. அதனாலவன் தன் கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் ஒரு மலக்குவந்து அங்கு படியைப் பிடித்து ஒரு நொடிக்குள் ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல் பீவிஹனிபாவை அவ்விடம்விட்டு வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்து விட்டார், பின்பு அரசன் தன் கண்களைக் கசக்கி விழித்துப் பார்க்கை யில் தூசியுமில்லை பீவிஹனிபாவுமில்லை அங்கே ஜைத்தூனும் 40- பாந்திகளும் மாத்திரமிருக்கக்கண்டு அதிக சந்தோஷத்தோடு ஜைத் தூனும் நம்பள் கையில் அகப்பட்டுக் கொண்டாளென்று பூரித்தான். அந்நேரவேளையில் அவனுடைய படைகளும் மந்திரிமார்களுமாக வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்வரசன் அதிக தயிரியங் கொண்டு ஜைத்தூனைப்பார்த்து ஓ சந்திர வடிவமுள்ள மானே! தேனே! நீ என்னைச்சேர ஒப்புக்கொள்ளென்று கொஞ்சமும் மன மஞ்சாமற் சொன்னான். அவன் சொன்னதை ஜைத்தூன் கேட்டு, அடா மடையா! புத்தியில்லாதவனே; ஆனால் நான் என்னசெய்வேன் இப்பொழுது என்னுடைய இரண்டு கையையுங் கட்டியிருக்கிறது. அப்படிக் கட்டியில்லாமற்போனால் நீ என்னைக் கூப்பிட்ட நாவையும் உன்னுடைய இன்பத்தையும் மகிழ்ச்சியையும் நான் ஓடிப்போகும்படி யாகத் தண்டனை கொடுத்து உன் தலையையும் களைந்து விடுவேனென்று சொன்னாள்.

அந்நேர வேளையில் மந்திரிமார்கள் ராஜனைப் பார்த்து நீ என் ஆத்திரப்படுகிறாய் கிணற்றுத்தண்ணீரை வெள்ளங்கொண்டு போகு மா? ஒருபோதுங் கொண்டுபோகாது. உன் கையிற் சிக்கியிருக்கிற பெண் உன்னையுமறியாமல் ஓடிப்போவாளோ? ஆனாலும் ஆக்கப் பொறுத்தவன், ஆறப்பொறுக்கவேணும். இன்னம் தன்னையுமறியாம லுயிர்போகமாட்டாது நீ உன் மனதைத் திடப்படுத்தென்று சொல்ல,

அரசன் கேட்டு, அவ்விடம்விட்டு தன் சேனைகளோடு இந்த 41-பெண்
களையும் பிடித்துக் கொண்டு ஒரு தோப்பில் வந்து இறங்கியிருந்தான்;
அந்நேர வேளையில் ஒரு கிழவி ராஜனைக்கண்டு தண்டஞ் செய்து அடி
பணிந்து நின்றாள். அவள் எப்படிப்பட்ட வல்லமையுள்ள கிழவி
யெனில் கூடாத பெண்களைக் கூட்டிவைக்கப்பட்டவள். சேராதபெண்
களைச் சேர்த்து வைக்கப்பட்டவள். நாடாத பெண்களை நாடச்செய்ய
வைக்கப் பட்டவள். மருந்திடுவதிலும் மந்திரத்திலும் கெட்டிக்காரி;
அவள் தொழிலே கூட்டிவைக்கிற தொழிலாயிருந்தது. அக்கிழவியை,
அரசன் பார்த்து, ஓ அம்மா! நானொரு பெண்ணைக் கொண்டுவந்
திருக்கிறேன். அவள்பேரில் எனக்குமிக்க ஆசையுண்டு. அவள் எனக்கு
சம்மதிக்கிறதில்லை. அவளை நீ உன்னுடைய மாயவித்தையினால் கூடும்
படி செய்விப்பாயாகில் உனக்கு அளவற்ற நிதியுமுடைமைகளும் தரு
வேனென்று சொன்னான். அச்சொல்லைக் கிழவிக்கேட்டு ஓ ராஜனே!
நீ ஒன்றிற்கும் அஞ்சாதே அவளை யுன்னுடன் சேரும்படியாகக் கூட்டி
வைப்பது என்னுடைய வேலையாயிருக்குமென்று சொல்ல, அப்
பொழுது ராஜன் கிழவியைப்பார்த்து நல்லது இந்நேரவேளையில் உன்
னிடத்திலென்ன ஹாஜராயிருக்கிறதோ அதை யெனக்குக் கொண்டு
வந்து குடிப்பாட்டென்று சொல்ல, அற்குக் கிழவி உனக்கு இப்போது
வேண்டுமானால் அமுதமிருக்கிறது. அதைச் சுடவைத்துக் கொண்டு
வந்து தருகிறேனென்று சொன்னாள் அதற்கு ராஜன் அப்படியே,
ஆகட்டு மென்று சொன்னான். அப்பொழுது கிழவிப் பாலை அடுப்பில்,
வைத்து தீமூட்டி யெரித்துவிட்டு அப்படியே அங்கே நித்திரை போய்,
விட்டாள் அப்பொழுதொரு கனவுகண்டாள் அது எப்படிபோலொத்த
கனவெனில் சில மலக்குகள் வந்து அக்கிழவியின் தலைமயிரைப் பிடித்து,
இழுத்துக் கொண்டு நரகத்தில் போட்டு சொல்ல முடியாத கொடூர
அஜாபுகளைச் செய்தார்கள். அப்போது கிழவி அந்த வருத்தங்களைப்,
பொறுக்க முடியாமல் கூகூ வென்று கதறி நீங்களென்னத்திற்காக
நெருப்பிலென்னைப் போட்டு இப்படிப்பட்ட வேதனை செய்கிறீர்கள்
அப்படி நான் என்ன தப்பிதஞ் செய்தேனென்று கேட்க, அவளுக்கு
பிரதி ஒன்றுஞ் சொல்லாமல் பின்னுமதிகமான வருத்தங்களைக் கொடுத்
தார்கள் அதனால் அக்கிழவி நெருப்பின் சூட்டில் அகப்பட்டு மெத்த
விசனப்பட்டிருந்தாள். அந்நேரவேளையில் அவள் வணங்கிக்கொண்டி
ருந்த லாத்துமனாத்து முதலிய புத்துகள் அவள் முறையிடுவதையுங்
கேட்கவில்லை அவளுக்குதவி ஒத்தாசையும் செய்யவில்லை அதனாலவள்
மனம் வெந்து கைசேதப் பட்டவளாய் அதற்குப் பின்புறமாக முகத்

தைத் திருப்பி ஹக் தஆலாவை நினைத்து என்னை மீட்டு விடு இன்னம் காத்துக்கொள் இந்தக் கொடிய அஜாபைப் பொறுக்க என்னால் முடிய வில்லை, எனக்கு உன்னையன்றி உதவி யொத்தாசை செய்வாரில்லை. இது நிரம்ப இக்கட்டாகிய வேளையா யிருக்கிறது. என்பேரில் கொடு மையாகிய அஜாபாயிருக்கிறது எனக்கு புத்துகளின்பேரில் நிர்ணய மில்லை. ஆனால் உன்னையன்றி உலகினில் உதவி யொத்தாசை செய்ய ஒருவருமில்லை. காயூனே! யென்று துஆக்கேட்டாள். அந்த துஆ அந் நேரம் ஹக் தஆலாவினிடத்தில் கபூலாய்விட்டது. அப்பொழுது இருந்தாப்போலிருந்து மின்வெட்டினாற்போல அக்கிழவியின் முன்பில் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வந்து தரிசனமானார்கள். அப்பொழுது அக்கிழவி ஸர்வரே ஆலத்தைப் பார்த்து நான் தங்களை என் கண்ணாற் கண்ட தினாலே யென்னுடைய வருத்த மெல்லாம் நீங்கி விட்டதென்று சொன்னார் அதற்குச் ஸர்வரே ஆலம் ஓ கிழவியே! நான் முஹம்மது நபி, நீ என்னுடைய தீனை விரும்பி ஒப்புக்கொண்ட படியால் உனக்கொரு பயமுமில்லை. இனிமேலுன்னை மலக்குகளும் அஜாபுச் செய்யமாட்டார்கள் இன்னம் நரகத்திலும் போடார்கள். இனி நீ கலிமாவை ஓது! அப்படி ஓதாமல் போனால் உனக்கு அதிக அஜாபுகள் கிடைக்குமென்று சொல்ல, உடனே அக்கிழவி கலிமா ஓதி ஈமான் கொண்டாள் அப்பொழுது ஸர்வரே ஆலம் மலக்குகளைப் பார்த்து இனிமேல் நீங்களிவளை ஒன்றுஞ் செய்யவேண்டாம் இவளீ மான் கொண்டாளென்று சொல்ல அவர்கள் அஜாபுசெய்வதை விட்டு விட்டார்கள் பின்பு ஸர்வரே ஆலம் அக்கிழவியைப் பார்த்து என் னுடைய மருமகளாகிய ஜைத்தூன் இங்கே சிறையில் பிடிபட்டு இருக் கிறார்கள் இன்று நீ சீக்கிரமாய்ப் போய் முன்னமவர்களுக்கு என் னுடைய ஸலாமைச் சொல்லி, அதன் பின்பு நீ ஒன்றுக்குமஞ்சாதே உன்பேரில் அல்லாஹு ஸுப்ஹானஹுவ தஆலாவினுடைய காவல் பாடிருக்கிறதென்று அவர்களுக்குத் தயிரியஞ் சொல்லு. அதனா லுனக்கு ஹக் தஆலா மிகுந்த றஹ்மத்துச் செய்வானென்று சொல்லிப் போயினர். உடனே திடுக்கென்று கிழவி விழித்துக்கொண்டு நகமுக முங் குனிந்து பார்க்கையில் ஒன்றுமிவள் கண்ணிற்குத் தோற்றவில்லை ஆனால் அக்கிழவியின் வீடெல்லாம் கஸ்தூரி வாடை நிறைந்துபோ யிருந்தது. அதனாலக்கிழவி நிஜப்பாடாய் உடனே யெழுந்து ஜைத் தூன் கிட்டே ஓடிவந்தாள். அப்பொழுது ஜைத்தூன் அக்கிழவி வரு வதைக் கண்டு கூட்டிவைக்குங் கள்ளி நம்மிடத்திற்கு வருகிறாளே யென்று அதிக விசனங் கொண்டிருக்கும் சமயத்தில் கிட்டே வந்து

மிகுந்த அதபுடனே ஸலாஞ்சொல்லி பின்பு ஸர்வரே ஆலம் சொன்ன ஸலாமையும் சொல்லி பின்பு தான்கண்ட கனவின் சங்கதிகளை ஒன்றுந் தவறாமல் தான் தூங்கினபோது மலக்குகள் இழுத்துக் கொண்டு போய் அஜாபுச் செய்ததும், அங்கே நபிநாயகம் வந்ததும், தான் ஈமான் கொண்டதும், ஸலாமத்து பெற்றதும். நபியுல்லா ஸலாஞ் சொன்னதும், தைரியமான சொற்கள் சொன்னதும் எல்லாம் முடிவு வரைக்கும் சொல்லி, இனி யுன்னை மீட்டுவிடுவது என்பேரில் கடனு யிற்றென்று சொன்னுள். அதைச் ஜைத்தூன் கேட்டு உன்பேரில் அல்லாஹுதஆலா நல்லது செய்வானென்று சொன்னுர்கள். அதைக் கேட்டுக் கிழவி அவ்விடம் விட்டெழுந்து உடனே கிழவி தன் வீட் டிற்குப்போய் கொல்லும்படியான நாவியை யெடுத்துரைத்து அடுப்பி லிருந்த பாலையிறக்கி அதில் இந்த வஸநாவியைக் கலந்து சர்க்கரையும் போட்டு ஒரு பாண்டத்திலிட்டு குடிக்கச் சொல்லி அரசன் கையில் கொடுத்து இன்றிரவு உன்னுடன் சேரும்படி அவளைக் கூட்டிவைக் கிறேனென்று சந்தோஷமான சேதிகளும் சொல்லி அவளு முன் னுடன் கூட சம்மதித்தாள். அவளுக்குச் சம்மதிக்குமான உபாயங் கள் செய்தேன். குடியென்று சொல்ல, அந்த மடையன் அந்தப் பாலை வாங்கிக் குடித்தவுடனே விஷம் தலைக்கேரி செத்தான்.

அலங்காரக்கண்ணி.

ஆசைகளெல்லாம் நாசமாய் போச்சுது அன்று ராஜர்க்கு
மோகங்களெல்லா முடிவாய் போச்சுது முரட்டு ராஜர்க்கு
அரசன் செத்தஉடனே கிழவி அரசன் சேதிசொல்ல
ஓடியே வந்தாள் ஜைத்தூன்கிட்டே உற்ற சேதிசொல்ல
அம்மாகேளு அம்மணிகேளு அடியாள் சொல்லுவதை
மாயமருந்தால் செத்தான் ராஜா வார்த்தை சொல்லாமல்
உன்றனை நாடி ராஜனைக்கொன்றேன் உபாய மருந்தாலே
சந்தோஷமாக இருநீயென்ருள் சஞ்சலம் தனைப்போக்கி
அந்த வார்த்தையைக் காதிலேகேட்டு அப்போ ஜைத்தூனு
கிழவியையைப் பார்த்தொரு சேதிசொன்னுள் கிளிமொழி ஜைத்தூனு
என்னிட இடுப்பினி லிருக்குதுகத்தி எடுத்து உன்கையால்
கையின் கட்டை அறுத்துப்போடு நீ கஷ்டங்களில்லாமல்
என்றசொல்லைக் காதிலே கேட்டு எழுந்து அக்கிழவி
சூரியைவாங்கி அறுத்தாள் கட்டை சீக்கிரமாய்க் கிழவி
ஜைத்தூன் சூரியை கையிலேவாங்கி தீவிரமாயப்போ

தன்னிட பாந்திமார் கைகளின் கட்டை தானே அறுத்து போட்டாள்
தீவிரமாகவே குதிரை மேலேறினாள் தீரஜைத்தூனு
நாற்பது பாந்தியைக் கூடவே கூட்டினாள் நல்லஜைத்தூனு
சீக்கிரமாகப் போனாள் ராஜன் செத்த இடத்தைத்தேடி
ராஜன் தலையை யறுத்து எடுத்தாள் ராணிஜைத்தூனு
கையில் தலையைத் தூக்கியேறினாள் குதிரைமேல் ஜைத்தூனு
தோப்பதைவிட்டு வெளியே வந்து சொன்னாள் ஜைத்தூனு
ராஜன் படையா யிருக்கும்பேடிகளே நான் சொல்லக்கேளும்
சேவகமார்களாக யிருந்தால் நீங்கள் சண்டைக்கு வாருங்கள்
மீசைமுளைத்த பேர்களாயிருந்தால் முன்னே ஓடி வாங்கள்
பேடிகளாக விருந்தால் நீங்கள் பேசாமலிருங்கள்
எந்தன் கையிலிருக்கிற தலையை எல்லாரும் பாரும்
உங்கள் ராஜன் தலையாயிருக்கும் உற்றுநீங்கள் பாரும்
கொடிய ராஜன் தலையை யறுத்துக் கொண்டேன் ஜைத்தூனு
என்றவார்த்தையைக் கேட்டார் ராஜன் எல்லாப் படையோரும்
அமளிகளாகிப் போச்சுது அப்போ அந்தத் தோப்புக்குள்ளே
தலையை ஜைத்தூன் அறுத்தாளென்று சத்தமாகிப் போச்சு
அரசன்மடிந்து போனானென்று அழுகை மிகுதியாச்சு
அந்த சமயத்தில் மந்திரிமார்கள் அலறி யெழுந்தார்கள்
ஏழுமந்திரி மார்களுங்கூடி என்ன செய்தார்கள்
இனிநாமிருந்து பலனுமில்லே இவளை வெட்டா விட்டால்
நம்முடைய ராஜனை வெட்டியபழியை நாம்பள் வாங்கவேணும்
சும்மா யிருந்தால் வீரியமல்ல சீக்கிரமாயின்று
நம்மிடபடைகளைச் சேர்த்து வளைத்து நறுக்கவேணுமிவளை
உடனே படைகளைக் கூட்டினா ரெல்லாம் உற்றசண்டைசெய்ய
கத்திப்படையு மீட்டிப்படையு கணக்கில்லா வந்தார்
தண்டாயுதமும் சக்கரமெடுத்து சமர்த்து மிகபேசி
பலபல ஆயுதம் பூட்டினாரெல்லாம் படையின் பெரும்வீரர்
குதிரையின்மேலே யேறினா ரெல்லாம் பெரிய கூட்டமாக
செந்தூள் பறக்க நடத்தினர் படையை திக்குத்தெரியாமல்
கருந்தூள் பறந்து போச்சுது நடக்கும் குதிரைகள் காலாலே
மேகம்போல மூடிக்கொண்டது வெள்ளை மேகதூசி
நானாவிதமாய் முழங்குதுசத்த நகரா நவுபத்து
கோடை யிடிபோல் முழங்குதே சத்தம் குமுகுமுகுமு வென்று
வந்து வளைத்தார் காபர்படையோர் வெல்ல ஜைத்தூனை

அந்தப் படைகளைக் கண்ணால் கண்டாள் ஆங்கார ஜைத்தூனு
பல்லை நெறநெற வென்று கடித்தாள் பாவைஜைத்தூனு
கண்கள் ரெண்டும் சிவந்து போச்சுது கடுங்கோபத்தாலே
கத்தியை யுருவி கையில் பிடித்தாள் கனத்த ஜைத்தூனு
குதிரையை காலினு லிடுக்கியே விட்டாள் கோதை ஜைத்தூனு
கொக்குக் குலத்தினில் ராஜாளிப்போல் குதித்தாள் ஜைத்தூனு
ஆட்டு மந்தையில் புலிபோனுப்போல் புகுந்தாள் ஜைத்தூனு
கத்தியைவிட்டாள் காபர் படைமேல் கைதான் கூசாமல்
மின்னல்போல மின்னுது கத்தி முன்பின் தெரியாமல்
பளபளவென்று மின்னுது கத்தி பட்டா கத்திகளும்
குப்பல்குப்ப லாகவே குவித்தாள் கொன்று ஜைத்தூனு
மலைபோல்வெட்டி குவித்தாள் ஜைத்தூன் மண்டை மூளைசித்ற
தபிரின் குடம்போல் மூளைகள் சித்ற தலைகள்தானுருள
வெட்டி வெட்டி குவித்தாளங்கே வேங்கை ஜைத்தூனு
கூகூவென்று சத்தங்களிட்டு கூவி மடிவாரும்
அம்மம்மா வென்று சத்தங்களிட்டு அலறி மடிவாரும்
சாமியை நினைத்து சஞ்சலமிகுந்து தரைமேல் விழுவாரும்
பூத்துபூத்து வென்று புலம்பி புவிமேல் விழுவாரும்
இப்படி நானுவிதமாய் படைகள் ஏங்கிப் போவாரும்
அந்த வேளையில் படைகள்முறிந்து அவள்முன் னெதிர்க்காமல்
ஓடியே போனார் வீரர்களெல்லாம் ஒருவரும் நில்லாமல்
சிதறியே போனார் வீரர்களெல்லாம் திசைதிசையாய் பயந்து

வசனம்.

இப்படிப் படைகளெல்லாம் ஜைத்தூனுடைய கத்திவெட்டுக்கு ஆற்றாமல் பயந்து ஓடிப்போனார்கள். அப்பொழுது அந்த 7-மந்திரி மார்களும் கைகட்டி மிகுந்த அதபுடனே ஜைத்தூனுக்கு முன்னமாக வந்து நின்று கிடுகலங்கி ஓ அரசியே! இனி யெங்களை வெட்டாதே எங்களைப் பாதுகாப்பது உன்னுடைய கடமையென்று சொல்லி வேண்டிக்கொண்டார்கள். அதைக்கேட்டு ஜைத்தூன் சண்டையை நிறுத்திவிட்டு மனமிரங்கி அந்த மந்திரிகளைப் பார்த்து நான்சொல்லும் படி நீங்கள் கேட்பீர்களாகில் உங்களுயிருக்கு ஒரு சேதமுமில்லை, இல்லாவிடில் நரகம் போய்ச் சேருவீர்கள் என்று சொல்ல, அதை மந்திரிமார்கள் கேட்டு அதென்ன உத்தரவு சொல்லென்று கேட்டார் கள். அதற்கு ஜைத்தூன் நீங்கள் கழுத்திலிட்டிருக்கிற பூணூலை அறுத்

துப்போட்டு உங்கள் வீடுகளிலிருக்கிற புத்துகளை யெல்லாம் உடைத்துப்போட்டு நீங்களெல்லாம் கலிமா ஓதி ஈமான்கொண்டு இஸ்லாமாகி இங்கே ஒரு பள்ளி ஒன்று கட்டி வணக்கஞ்செய்து வருவீர்களாகில், சொர்க்க லோகங் கிடைக்குமென்று சொல்ல அதை மந்திரிமார்கள் கேட்டு அதேபடி செய்து கலிமா ஓதி ஈமான்கொண்டார்கள். அப்பொழுது ஜைத்தூன் அதிக சந்தோஷத்தோடு அவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு நாம் மதீனத்தையும் அவ்வூராரையும் அவர் வீட்டையும் முன்பின் அறியோமே வென்று கலக்கத்தோடு ஆயாசங் கொண்டு அவ்விடத்தை விட்டு தன் பாந்திமாருடன் வெளிப் பட்டார்கள்.

முஹம்மதனிபு செண்டூல் ராசனைக் காணுதல்

முன்னால் முஹம்மது ஹனிபு ஜைத்தூனையும் கூட பாந்திப்பெண்களையும் கைகளைக்கட்டித் தாயார் வசம்பண்ணி நீங்கள் மதீனத்திற்குப் போங்கள். நான் இறமெனும் பட்டணம்போய் வருகிறேனென்று சொல்லி அனுப்பிவைத்துவிட்டு, வருகிறபாதையில் அங்கோர் தோப்பு எதிர்ப்பட்டது அத்தோப்பு எப்படிச் செழித்திருந்ததெனில் உயர்ந்த மரங்களும் தளதளப்பான இலைகளும் மணமுள்ள மலர்களும் பளபளப்பான நானாவித வர்ணமுள்ள கனிகளும் விதவிதமாகிய உருசைகளுமுள்ளதா யிருந்தது. அந்ததோப்பு செண்டூல்ஷாவெனும் அரசனுடைய சோலை. அதனுள் பன்னீராயிரம் படைவீரர்களை வைத்திருந்தான். அந்தத் தோப்பினுள் முஹம்மது ஹனிபு புகுந்து அம்மரங்களையும், பூங்காய் கனிகளையுங் கண்டு, அதிக சந்தோஷத்துடன் அதிலிருந்து சிலகனிகளை யறுத்துப் புசித்தார். அதை அந்தத் தோப்பிற்குக் காவலாயிருந்த காவற்காரன் கண்டு மிகுந்த அச்சத்தோடு ஓட்டோடியும்போய் செண்டூல்ஷாவெனு மரசனுடன் அறபுதேசத்தான் ஒரு அறபியும் அவனுடைய ஆளுமாக நம்முடைய தோப்பினுள் யாதொரு அச்சமுமின்றி வந்து புகுந்து நகமுகமும் உலாவி கனிகளை அறுத்துதின்று ஒரு மரத்தடியில் படுத்து நித்திரை செய்கிறார்களென்று வந்து சொன்னான். அச்சேதியைக்கேட்டு உடனே செண்டூல் பாதுஷா தன்னுடைய பன்னீராயிரம் படை வீரர்களை ஆயுதங்கள் பூட்டிக்கொள்ளச் சொல்லி அப்படைகளைப் பார்த்து நீங்கள் தோப்பைப்போய் வளைத்து அவர்களைப் பிடித்துக் கொள்ளுங்களென்று கட்டளையிட்டான். அப்படியே அவன் படைகளெல்லாம் தோப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அந்நேரவேளையில் முஹம்மது ஹனிபாவைப் பார்க்கவேணுமென்று வெகு நாளாகக் கரியாபரி யென்பது

மனதில் மிகுந்த பிரியத்தோடு ஆசை வைத்துக்கொண்டிருந்தது. அந்தப்பரி அன்றையதினம் அங்கேவந்து பார்க்கையில், முஹம்மது ஹனிபு நித்திரை செய்துக் கொண்டிருக்கக் கண்டு சுற்றிப்படைகள் வளைத்துக்கொண்டிருப்பதையும் பார்த்து ஓகோ, இவர் ஒன்றுந் தெரியாமல் அசந்து நித்திரை செய்கிறாரே, பகைவர்கள் வந்து வளைத்துக் கொண்டிருப்பதும் தெரியவில்லையே. இதனால் இவருக்கு மோசம் வந்து நேரிடுவதா யிருக்கிறதென்றெண்ணி! ஓ இமாமே, நீங்கள் அசந்து நித்திரை செய்கிறீர். உம்மைப் பிடிப்பதற்காகவேண்டி செண்டேல்ஷாவுடைய படைகள்வந்து வளைந்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் நித்திரையை விட்டுச் சீக்கிரமாக எழுந்திருமென்று சத்தமிட்டெழுப்பினது. அப்பொழுது முஹம்மதனிபு அந்தச் சத்தத்தைக் கேட்டு திடுக்கென்று கண்திறந்து பார்க்கும்போது சுற்றிலும் ஆயுத முஸ்தீபுடன் படைகள் வந்து சுற்றி வளைந்திருக்கக்கண்டு, ஹா ஹா நம்மையெழுப்பினது யாரோ, அல்லது மலக்கோ வென்று எண்ணும் வேளையில் அப்பொழுது கரியாபரியானது நான்தான் உன்னை யெழுப்பினேன். என் பெயர் கரியாபரியென்று சொல்லிப்போயினது.

அலங்காரக்கண்ணி.

அந்த வேளையிலெழுந்தார் முஹம்மது ஹனிபாவும் சீறி
கண்களிரண்டும் சிவந்து போச்சுது முஹம்மது ஹனிபிற்கு
மீசை படபட வென்று துடிக்குது முஹம்மது ஹனிபிற்கு
பல்லை நெறநெற வென்று கடித்தார் முஹம்மதுஹனிபாவும்
ஆங்காரங்கொண்டு குதிரைமே லேறினார் முஹம்மது ஹனிபாவும்
ஆயுதமெல்லாம் பூட்டியெழுந்தார் முஹம்மது ஹனிபாவும்
ஆரவாரமாய் வெளியில் வந்தார் முஹம்மது ஹனிபாவும்
பன்னீராயிரம் குதிரையைக் கண்டார் முஹம்மது ஹனிபாவும்
பார்த்த வுடனே கோபமூண்டது முஹம்மது ஹனிபிற்கு
கத்தியினாலே நாடினார் வெட்ட கனத்த கோபமாகி
அந்த வேளையி லென்னசெய்தான் செண்டேல் ராஜாவும்
படைகளை யெல்லா மொன்றாய்க்கூட்டினான் செண்டேல் ராஜாவும்
பத்திரம் பத்திரமாக இருங்கள் பாராக் காவலாக
என்ற சொல்லைக் கேட்டாரந்த எல்லாப் படையோரும்
அந்தவேளையி லென்ன சொல்கிறான் செண்டேல் ராஜாவும்
சேவகமார்களே எந்தன் சொல்லைச் சீருடனே கேளும்
சிப்பாய்மார்களே எந்தன் சொல்லைச் சிந்தாமல் கேளும்
வெட்டவும் வேண்டாம் குத்தவும் வேண்டாம் வீரிய வல்லவரே

கைப்பிடியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் காவல் வீரியரே
என்ற சொல்லைக் காதிலேகேட்டு அதிலொரு வீரஜட்டி
தண்டாயுதத்தைக் கையிலே பிடித்து சாமார்த்தியம் பேசி
முஹம்மது ஹனிபா முன்னல்போனன் முரட்டு வீரசூரன்
வல்லமைக்காட்டி பிடித்திடப் போனன் முஹம்மது ஹனிபாவை
புலிமுன் ஆடுபோல் போனன்வீரன் பெரிய சண்டைசெய்ய
அந்தவேளையில் முஹம்மது ஹனிபா ஆங்காரங் கொண்டார்
ஒருவருக்கொருவர் வல்லமை பேசி உருவினர் கத்தி
பாவிஅடித்தான் தண்டாயுதத்தால் பாரயிடிபோல
முஹம்மது ஹனிபா தாங்கினர் டாலால் முரடன் தன்வெட்டை
வெட்டினர் முஹம்மது ஹனிபா அவனை மின்னலிடிபோல
குதிரையுமவனும் மிரண்டுதுண்டாய் கீழே விழுந்து செத்தான்
பின்னுமொருத்தன் வந்துமடிந்தான் பெரியவெட்டாலே
இப்படியாக மடிந்தார்வீரர் எண்ணிக்கை யில்லாமல்
ஆருயோடி போச்சுது ரத்தம் அங்கே யிடமின்றி
குப்பல் குப்பலாக பிணங்கள் குவிந்து போச்சுதங்கே
படைகள் வீணய் மடிந்ததைக்கண்டான் செண்டேல் ராசாவும்
முஹம்மதனிபா முன்னல் வந்து மொழிந்தா னிடிபோல
ஏழைமனிதனே என்னுட படைகளை என்னவேலை செய்தாய்
பஞ்சைமனிதனே என்னுடை படைகளை பாழ்படுத்திப் போட்டாய்
ஆனலாகட்டு மறிவேன் வல்லமை அடா அடிமைபையா
என்று சொல்லி அடித்தானேங்கி எடுத்து தண்டத்தால்
அடித்த அடியைத் தாங்கினர்டாலில் முஹம்மது ஹனிபாவும்
இடுப்பில்கையை கொடுத்துத் தூக்கினர் செண்டேல் ராசாவை.

வசனம்.

தலைமேலவனைத் தூக்கிக்கொண்டு ஓ காபரானவனே! நீ சீக்கிரமாக ஒப்புக்கொண்டு கலிமா ஓதி யீமான்கொள்வாயாகில் னுன்னைப் பூமிமேல் வாரியடிக்காமல் உயிரோடு விட்டுவிடுவேன். நீ கலிமா ஓதாமல் போனல் இப்படியே பூமிமேல் அடித்துவிடுவேனென்று சொன்னர். அந்தச்சொல்லை செண்டேல் ராஜாகேட்டுப் பயந்து உடனே கலிமா ஓதி யீமான் கொண்டான், பின்பு முஹம்மது ஹனிபாவைப் பார்த்து நீயார்? உன் பெயரென்ன? ஊர் பெயரென்ன? நீ எங்கே போகிருய்? இதுகளை எனக்குத் தெரியும்படிச் சொல்லென்று கேட்டான். அதற்கு என் பெயர் முஹம்மது ஹனிபு. நான் இறமெனும் பட்டணம்போய் அவர்களுடன் சண்டை செய்து இஸ்லா

மாக்கப்போகிறேன். என்னூர்பேர் மதீனமென்று சொன்னர். அதற்கு செண்டூல்ஷா கூட நானும்வந்து சண்டை செய்து உன்னுயிரைக் காப்பாற்றுவேனென்று சொல்ல, அதற்கு முஹம்மது ஹனிபு ஓ செண்டூல்ஷாவே! ஒருவரையுங் கூட்டிக்கொண்டு போகாமல் தனியாக நான்மாத்திரம்போய் வெற்றிபெற்று வரவேணுமென்று நிய்யத்துச் செய்துக்கொண்டிருக்கிறேன். ஆகையால், நீ கூடவரவேண்டாமென்று அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டு இறமெனும் பட்டணத்தின் பாதையின் புறமாக முன்னேக்கித் தன் குலாமும் பின்னல் வரும்படியாக சிலதூரம் நடந்து போகும்போது (கரியாபரி) வந்து ஓ பாதுஷாவே! தாங்கள் போகிற பாதையில் இன்னம் சில தூரத்தில் அங்கோரிடத்தில் அக்காள் தங்கச்சி இரண்டு பேரிருக்கிறுர்கள். அவர்களிரண்டு பேரும் அதிக கெட்டிக்காரிகள் வல்லமையுடையவர்கள். தாங்கள் நிரம்ப எச்சரிக்கையுடன் போக வேண்டியதென்று கூப்பிட்டுச்சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்டு முஹம்மது ஹனிபு பின்னல் திரும்பிப் பார்க்கையில், ஒருவரையுங் காணவில்லை. அதனல், திகைத்து நின்று ஒருவரையுங்காணேம். இப்படி நமக்குச் சொன்னவர்கள் யாரென்று புதுமைப்பட்டு அவ்விடம்விட்டுப் பின்னும் முன்னேக்கி நடக்கும்போது, அங்கோர் மரத்தடியின் கீழ் ஒருபெண் குந்திக்கொண்டு அவ்வழியாக வருகிற பாட்டைசாரிகளைப் பிடித்து அவர்களுடைமைகளை அபகரித்துக் கொண்டு அவர்களையும் கொல்லாமல் உயிரோடு விடுகிறதில்லை. அதனலவ்வழியாக ஒருவரும் போகிறதில்லை. தப்பிப்போனல் பின்னுமவர்கள் மீண்டு வருகிறதில்லை. அன்று அந்த வழியாக முஹம்மதனிபு போனர். அவர் வருவதைக்கண்டு அதிலொருத்தி பின்று நமக்குக் கொழுத்த வேட்டை அகப்பட்டதென்றெண்ணி ஆரவாரத்தோடு ஈட்டியைக் கையிற் பிடித்துக்கொண்டு குதிரையை முஹம்மதனிபாவின் முன்னுகவிட்டு ஓடிவந்தாள், அவள் வருவதை முஹம்மது ஹனிபு கண்டு நிற்கையில் கிட்டேவந்து ஓ சிப்பாயே! உன்னுடைய கத்தியையும் கேடகத்தையும் என்கையிற் கொடுத்துவிடு. இல்லாவிடில் இதோபார் என்கையிலிருக்கிற ஈட்டியாலுன்னை குத்திக் கொல்வேனென்று சொன்னுள். அவள் சொல்லை முஹம்மது ஹனிபு கேட்டு புன்னகைகொண்டு ஓ பெண்ணே! நீ பெண்பிள்ளையாயிருந்து ஆண்வேடம் பூண்டு ஆயுதங்களைப் பூண்டிக்கொண்டு ஆணுய்ப் பிறந்தவர்களுடன் எதிர்ப்பது உனக்குத் தகுதியல்ல. உன்னுடைய வேலை என்னவெனில், சமையல் செய்யவும், நூல் நூற்பதும், வீட்டைவிட்டு

வெளியே வராமலிருப்பதுமாம். அப்படியிருக்க, நீ என்னை வந்து மிரட்டுவதைப் பார்த்தால் மெத்த ஆச்சரியமா யிருக்கிறதென்று சொன்னார் அச்சொல்லை அவள் கேட்டு ஓ சிப்பாயே! நீ என்னைப் பெண்ணென் றெப்படி யறிந்தாயென்று கேட்டாள், அதற்கு முஹம் மது ஹனீபு நீ குதிரை ஓட்டம் விட்டுக்கொண்டு வரும்போது உன் னுடைய மார்மேலிருக்கும் இரண்டு கொங்கைகளு மசையக் கண் டேன். இன்னம் குதிரையின் அங்கு படியில் கால்களிரண்டும் அதிரக் கண்டேன். அதனாலுன்னை நான் பெண்ணென் றறிந்துக்கொண்டே னென்று சொன்னார். அதை அவள் கேட்டு நான் பெண்ணாயிருந்தும் உன்னைப்போலொத்த வீரர்கள் என் கையால் அநேகம் பேர்களை மாளவுஞ் செய்திருக்கிறேன் வெற்றியும் பெற்றிருக்கிறேன். ஆகையா லுன்னுயிரைத் தப்பித்துக் கொள்ளென்று சொல்லி தன் கையிலிருந்த ஈட்டியினால் ஓங்கிக் குத்தினாள் அப்பொழுது முஹம்மது ஹனிபு அந்த ஈட்டிக்குத்தை தன் கையாற் பிடித்துக்கொண்டு அவளுடைய இடுப் பில் தன் கையைவிட்டு அவளை மேலுக்குத் தூக்கிக்கொண்டு தன் னுடையகுலாமைக் கூப்பிட்டு இந்தா இவளைப்பிடி, இன்னம் இவளு டைய இரண்டு கைகளையும் உரமாகக் கட்டி விடுமென்று அந்தக் குலா மின் வசம் கொடுத்துவிட்டார். அப்படியே குலாம் அவளிரண்டு கையையுங் கட்டி பத்திரப்படுத்தினான். அப்பொழுது இவளுடைய அக்காள் கண்டு, அதிக கோபத்தோடு ஈட்டியைக்கையிற் பிடித்துக் காற்றின் விசையாகக் குதிரையை விட்டு முஹம்மது ஹனிபாவின் முன்னம் வந்து நானாவித வீரியங்கள் கூறி அவளுங்குத்தினாள். அதை யும் கையாற் பிடித்து முன்போல அவளிடுப்பில் கையை விட்டு மேலுக்குத் தூக்கி குலாமின்வச மொப்பிவித்து இவளையும் கைகளைக் கட்டி வையென்று சொல்லி, இரண்டு பேரையும் சிறை பிடித்துக் கொண்டு அவர்களுடைய பட்டணத் துக்குள் புகுந்தார். அப் பொழுது பட்டணத்திலுள்ள குடிகளெல்லாம் இவர்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்ததைக் கண்டு. அதிக சந்தோஷத்தோடு முஹம் மது ஹனிபாவின் முன்பில்வந்து ஓ பாதுஷாவே! எங்களுக்கு உதவி யாக வந்தவரேயென்று மிகவும் புகழ்ந்து எல்லாருமிவர்பேரில் நிரம்ப முஹப்பத்தாய் ஓ பாதுஷாவே! எங்களுடைய விண்ணப்பத்தைத் தாங்கள் காது கொடுத்து கேட்கவேணுமென்று கெஞ்சிச் சொன்னார் கள். அதென்னவெனில் ஓ பாதுஷாவே! இந்த இரண்டு நீலிகளுடைய தகப்பன் மிகவும் நன்றியுள்ளவன், அவருக்கு மூத்தப்பிள்ளை ஆண் ஒன்று இளையப் பெண்கள் இவ்விரண்டு பேரும் இருந்தார்கள். அப்

பொழுது அவ்வரசன் இறந்து போனர் அப்பொழுது இவ்விரண்டு பேரும் அண்ணனைச் சிறையில் அடைத்துவிட்டு தாங்கள் ராஜாவாக அரசாண்டு குடிகளை மிகுந்த அநியாயஞ்செய்து எல்லாரையும் ஓட்டி விட்டு எங்களை மிகுந்த வருத்தத்தில் வைத்திருக்கிறார்கள். இவர்கள் செய்யுமான அநியாயங்களைப் பொறுக்க எங்களால் எவ்வளவும் முடிய வில்லையென்று சொன்னார்கள்.

முஹம்மது ஹனிபு இம்ரூனை மீட்குதல்.

அப்பொழுது முஹம்மது ஹனிபு அக்குடிகளைப் பார்த்து, இம்ரூனை எவ்விடத்தில் சிறையில் வைத்திருக்கிறது, அவ்விடத்தை யெனக்குக் காட்டுங்களென்று சொன்னார். அப்பொழுது குடிகள் முஹம்மதனிபை பார்த்து ஓ பாதுஷாவே! அந்த இம்ரூனுக்கு ஒரு நாளொன்றிற்கு இரண்டு ரொட்டியும், ஓர் கூஜா தண்ணீருங் கொடுத்து ஒரு கிணற்றில் சிறைசெய்து வைத்திருக்கிறார்களென்று சொல்ல, அதைக்கேட்டு முஹம்மது ஹனிபு இம்ரூனை அடைத்திருக்கும் கிணற்றருகில் போய் என்னமாயிருக்கிறாய் உன்னுடைய சங்கதிகளைச் சொல்லென்று கேட்க அப்பொழுது இம்ரூன் அந்தச் சத்தத்தைக்கேட்டு இவ்வளவு இரக்க முடன் என்னைவந்து விசாரிக்கிறீரே நீர் யார்? இவ்விடம் வந்து என்னுடைய முஸீபத்தின் சங்கதிகளையும் வருத்தங்களையும் கேட்பதினாலே உம்முடைய நாமதேயத்தைச் சொல்லுமென்று கேட்டான். அப்பொழுது நான் உன்னைச் சிறையை மீட்கவந்தேன். என்பெயர் முஹம்மது ஹனிபு. உன்னுடைய உடன்பிறந்த அக்காமார்களைப் பிடித்து கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன் நீ ஒன்றுக்கும் விசனப் படாதேயென்று சொல்ல அதற்கு இம்ரூன் ஓ பாதுஷாவே என்னைக் கட்டிக் கிணற்றிற்குள் அடைத்து வைத்திருக்கிறார்களென்று சொல்ல அப்பொழுது முஹம்மது ஹனிபு அதிக வல்லமைசெய்து இம்ரூனை அக்கிணற்றின் சிறையைவிட்டு வெளியாக்கினர். அதனால் இம்ரூன் பட்டவருத்தங்களை எல்லாம் தொலைத்து அதிக சந்தோஷமாயினன். அப்பொழுது முஹம்மது ஹனிபு இம்ரூனைப் பார்த்து, நீ கலிமா ஓதென்று சொல்ல, உடனே ஆசையோடு கலிமா ஓதி ஈமான்கொண்டு இஸ்லாமாகினர் பின்பு முஹம்மதனிபு இம்ரூனை பார்த்து உன்னுடைய உடற்பிறந்த அக்காள்மாரை நீ யென்னசெய்யச் சொல்லுகிறாயோ அதேபடி செய்துவிடுகிறேன். உன்னுடைய நாட்டமெப்படி யிருக்கிறதென்று கேட்க, அதற்கு இம்ரூன் ஓ பாதுஷாவே! அவர்களிரண்டு பேரும் மிகுந்த அநியாயக்காரிகள். ஒன்றுக்குமஞ்சாத பாதகிகள். ஆகையால், அவர்களிரண்டு பேரையுங்கொல்ல நாடுகிறேனென்று

சொன்னார். அதை முஹம்மது ஹனிபுக்கேட்டு உடனே அந்த இரண்டு பெண்களையும் கொண்டுவரச் சொல்லி யிருக்கப்பட்டவர்களுக் கெல்லாம் பயமாகும்படி இரண்டுபேரையும் நிறுத்தி சுவர்வைக்கச்சொல்லி அம்பினால் போட்டுக் கொல்லும்படி உத்திரவு கொடுத்தார். அதேபடி அவர்களிரண்டு பேரையும் நிறுத்தி சுவர்வைத்து அம்பினால் போட்டுக் கொன்று போட்டார்கள். அந்த இரண்டு பெண்களும் செத்து நரகத்திற்கு இரையாய்ப் போனார்கள். பின்பு இம்ரூனை பட்டத்தில் உட்காரவைத்துவிட்டு இனிமேல் நீ சுகமாக உன்னுயிருள்ள காலமட்டும் யாதொரு அச்சமின்றி அரசாண்டு கொண்டிரும் நான் வந்தவேலையை நாடிப்போகிறேனென்று சொல்ல, அப்பொழுது இம்ரூன் பாதுஷா மிகுந்த வணக்கத்துடன் எழுந்து நின்று கைகட்டி அதபாக ஓ பாதுஷாவே! எனக்கு இன்னமொரு பயமிருக்கின்றது அதையுஞ் சொல்லுகிறேன் தாங்கள் காது கொடுத்துக்கேட்டு என் பேரில் கிருபைசெய்து அதை நீக்கிவிட்டுப் போவீர்களாகில் யாதொரு பயமுமில்லை இல்லாவிடில் என்னுடைய அரசு நிலைக்கமாட்டாதென்று சொல்ல அப்போழுது முஹம்மது ஹனிபு இம்ரூன் பாதுஷாவின் முகத்தைப்பார்த்து அது என்னவென்று கேட்க அப்போது இம்ரூன் ஓ பாதுஷாவே! என் தகப்பனுக்கு 7-மந்திரிமார்களிருந்தார்கள். அவர்களென் தகப்பனிறந்த பின்பு என்னை மோசஞ்செய்து என் தகப்பனுடைய 7-கோட்டைகளையும், 7-மந்திரிமார்களும் ஒவ்வொருவர் ஒவ்வொரு கோட்டையைப் பிடித்துக்கொண்டு தங்கள் கைவசமாகச்செய்து ஆண்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏழுபேரும் ஒருமித்துக்கூடி என்னுடன் சண்டை செய்வார்களென்று அதிக பயமாயிருக்கிறது ஆகையால் அவர்களையும் வெட்டி அக்கோட்டைகளை என் கைவசமாக்கிப் போவீர்களாகில் எனக்கொரு அச்சமுமில்லை. இல்லாவிடிலென்னை உயிரோடு வைக்கார்களென்று சொல்ல, உடனே முஹம்மது ஹனிபு இம்ரூனைப் பார்த்து உன்னுடைய தண்டுகளை யெல்லாம் சேகரஞ்செய்யென்று சொல்ல, உடனே சண்டைக்குப்போக தயாராகி நின்றார்கள் அப்பொழுது முஹம்மதனிபும் தன் குதிரையின் மேலேறி ஆரவாரத்துடன் இம்ரூனும் இவருடைய படைகளுமாகக் கூடி நகரைவிட்டு வெளிப்பட்டு நடந்துபோனார்கள். அந்த விசளத்தை 7-மந்திரிமார்களுங்கேட்டு, தங்கள் தங்கள் படைகளெல்லா மொன்றுகச் சேர்த்து ஓரிடத்தில் கூடியிருந்தார்கள்.

அலங்காரக்கண்ணி.

படைகளெல்லாம் கூட்டமா வந்ததைப் பார்த்து ராஜசிங்கம்

கலகல வென்று சிறித்தாரப்போ கனத்த ராஜசிங்கம்
அந்தவேளையி லென்ன செய்தார் அந்தப் படையோர்கள்
மேகம் போலே சுற்றிவளைத்தார் வெள்ள மிகசேனை
கத்திகளாலும் யீட்டிகளாலும் கனத்த தண்டத்தாலும்
அம்பினாலும் போட்டாரொன்று அஞ்சுத லில்லாமல்
அந்தவேளையி லென்னசெய்தார் முஹம்ம தனிபாவும்
பல்லை நெறநெற வென்று கடித்தார் பாரசிங்காராஜா
கத்தியை யுருவி கையிற்பிடித்தார் கடுங்கோபங் கொண்டு
மீசை படபட வென்று துடிக்குது முஹம்மதனிபிற்கு
குதிரையை விட்டார் படைக்குள்ளாக முஹம்மதனிபாவும்
குப்பல் குப்பலாக குவித்தார் கொடிய சூரர்களை
ஆறுயோடிப் போச்சுது ரத்தம் அவனியே தெரியாமல்
துண்டு துண்டா யுடல்களறுந்து துடித்து விழுவாரும்
கட்டுமரங்கள் போலவுடல்கள் கணக்கில்லா மிதக்க
மலைப்போல் சவங்கள் குவிந்து போச்சுது மன்னர்வெட்டாலே
பயந்து போனார் மந்திரிமார்கள் படைகள் மாண்டுபோக
என்னசெய்வோ மினிமேலென்று எண்ணம் மிகவாகி
சஞ்சலம் பெருகி மந்திரிமார்கள் தாழ்ந்து போனாரப்போ

வசனம்.

அப்பொழுது முஹம்மதனிபு சிறுவிளையாட்டு விளையாடி அப்படைகளையெல்லாம் பின்னிட்டோடும்படி வெட்டி அந்த 7-மந்திரிகளையும் கைபிடியாகப் பிடித்து எதிரில் நிற்கச்செய்து நீங்கள் இப்பொழுது கலிமா ஓதி யீமான் கொண்டா லுங்களுயிர் தப்பி நீங்கள் இன்னம் சில காலம் வாழ்ந்திருப்பீர்கள். இல்லாவிடில் உங்களுயிரை யிழந்து நரகம்போய்ச் சேருவதுமன்றி, உங்கள் பெண்ஷாதி பிள்ளைகளும் கைசேதப்பட்டு விசனமடைவார்க ளென்று சொல்ல அதை மந்திரிமார்கள் கேட்டு உடனே கலிமா ஓதி ஈமான் கொண்டு இஸ்லாமாகினார்கள். பின்பு அந்த 7-மந்திரி மார்களையும் பார்த்து இன்றோடு நீங்கள் இம்றான் சொல்லும்படியான சொற்களைக் கேட்டு அவர் கைக்குள்ளடங்கி ஒடுங்கி அடிபணிந்து அன்பா சாரமோடு நடக்க வேண்டியதென்று கட்டளைகளிட்டு அவர்களிடத்தில் தான் போக வந்ததை உரைத்து இனி நீங்களெல்லாம் சுகமாயிருங்கள், நான் போகிறேனென்று சொல்ல, அதற்கு இம்றான் நானும் தங்களுடன் வருகிறேனென்று சொல்ல, அதற்கு முஹம்மது ஹனிபு நான் தனியாகப்போய் இறம் ராஜனுடன் சண்டை செய்து செலித்து

வரவேணுமென்று சத்தியஞ் செய்துக்கொண்டிருக்கிறேன். ஆகை யால் நீ என்னுடன் வரவேண்டாம் நாயன் கிருபையால் நான் வெற்றி பெற்று திரும்பி வரும்போது உங்களை கண்டு கொள்ளுகிறேனென்று சொல்லவும் அரசனோடு பட்டணத்திலுள்ளோர்களடங்கலும் தாரை தாரையாக கண்ணீர்விட்டு அழத் தொடங்கினார்கள். முஹம்மதனிபு அவர்களை தேற்றி ஆற்றி தக்கபடி ஒப்பச் சொல்லி, விடை பெற்றுக் கொண்டு அவ்விடம் விட்டு இறமெனும் பட்டணத்தை நாடி முன்னேக்கி நடந்து வந்தார் அப்பொழுது இறமின் பாதுஷா தன்னுடைய 17-லக்ஷம் படைகளை யெடுத்து கோட்டைக்கு வெளியே இரண்டு கோசில் ஒரு பெரிய மைதானி லெடுத்துப் போட்டு நகமுகமுங் கூடாரங்களடித்து அங்கே யிருந்தார்கள். அப்பொழுது முஹம்ம தனிபு அங்கு சென்று அப்படைகளையெல்லாந் தன் கண்ணுற்கண்டு விசனங்கொண்டு பின்பு தன்னுடைய தைரியத்தினுல் அவ்விசனத்தை நீக்கி நாம் வருகிற சேதியை இவர்களுக்கு முன்னடியாக யார் தெரிவித்திருப்பார்கள். இவர்கள் நாம் வருகிற சேதியை அறிந்து சண்டைக்குத் தயாராயிருக்கிறார்களென்றெண்ணி அங்கோர் மேடை யொன்றிருந்தது. அதன் மேலே நின்று அப்பொழுது முஹம்மது ஹனிபு கலிமாவை ஓதி ஒரு சத்தமிட்டார். அந்தச் சத்தம் அப்படையோர்கள் காது முழுதிலும் கோடையிடியின் சத்தம்போல் விழுந்தது அதனுல் அப்படைகளெல்லாம் பெரிய கலக்கமாய்ப் போனார்கள். இன்னம் அந்தச் சத்தத்தால் கற்புள்ள பெண்களுடைய சூலெல்லாம் விழுந்துபோயின. அப்பொழுது இந்தச் சத்தத்தையும் இச்சேதியையும் இறமின் அரசன் கேட்டு, தன்னுடைய மந்திரிமார்களை யழைத்து இப்படி வல்லமைபாகிய சத்தம் யாருடைய சத்தம். இதை இன்னாருடைய சத்தமென்று எனக்குத் தெரியப்படுத்துங்களென்று கேட்க, அதற்கு மந்திரிமார்கள் ஆலோசனை செய்து இந்தச் சத்தமானது முஹம்மது ஹனிபாவுடைய சத்தமென்றார்கள். அதை அரசன் கேட்டு, முன்னுல் ஜைத்தூன் கொன்று போட்டேனென்று சொன்னுளே அவனெவ்விதத்தினுலே இன்னம் பிழைத்திருக்கிறானென்று கேட்க, மந்திரிமார் அவள் சொன்ன பேச்சு பொய். அவனிப்பொழுது உன்னுடன் சண்டைசெய்ய வந்திருக்கிறான். அவன் உனக்குத் தெரியும் படியாக இட்ட சத்தமென்று சொன்னார்கள், அதை அரசன் கேட்டு, உடனே மந்திரிமார்களைப் பார்த்து நம்முடைய சேனைகளை யெல்லாம் சீக்கிரமாக வரும்படியாகக் கட்டளையிடுங்களென்று சொன்னான். அச் சொல்லைக் கேட்டவுடனே படைகளைக்கூட்டி பேரிகை யடித்தார்கள்.

அலங்காரக்கண்ணி.

பேரிகையடித்தார் சண்டைக்குப்போக புறப்பட்டு வாருங்கள்
கத்திகட்டாரி பூட்டியே யெல்லாம் கடுகேஓடி வாங்கள்
ஈட்டி அம்புகள் தன்னைப்பூட்டி எல்லாரும் வாங்கள்
தண்டசக்கரம் தன்னையெடுத்து சலுதியாய் வாருங்கள்
நம்மிடபகைவன் வந்தானென்று நகாரா அடித்தார்கள்
அந்தசத்தம் காதிலேகேட்டு அப்போ படைவீரர்
ஆயுதமெல்லாம் பூட்டி யெழுந்தார் ஆங்காரங்கொண்டு
கோட்டைக்குள்ளே வந்து புகுந்தார் கொடியசிங்கம் போலே
படைகள் வந்ததை ராஜன்கண்டு பூரித்தானப்போ
சந்தோஷமானன் ராஜாமெத்த தைரியந்தான் கொண்டு
ஆயுதமெல்லாம் பூட்டி யெழுந்தான் ஆங்காரங்கொண்டு
கண்கள் சிவந்து போச்சுது அப்போ ராஜாவுக்கானலும்
படைகளைக்கூட்டியே வெளியில் வந்தான் பெரிய சிங்கம்போல
குமுகுமு வென்று குமுகுதே நகரா கோடையிடிபோல
தடதடவென்று நடக்குது குதிரைகள் தாங்கள் நடினமாடி
மினுமினு வென்று கத்திகள் மின்னிட வெள்ளப்படைகூடி
வந்து நிறைந்தார் இடமில்லாமல் மைதான் முன்பாக
அணியணியாக நின்றூ ரெல்லாம் ஆங்காரங்கொண்டு
நானவிதமாய்ப் பந்தயஞ்சொன்னூர் நரிமுன் கோழியைப்போல்
படைகள் வந்ததைக் கண்ணிற்கண்டார் முஹம்மது ஹனீபாவும்
பல்லைநெறநெற வென்று கடித்தார் முஹம்மது ஹனீபாவும்
கண்களிரண்டும் சிவந்தது அப்போ முஹம்மது ஹனிபிற்கு
மீசைபடபட வென்று துடிக்குது முஹம்மது ஹனிபிற்கு
குலாமைப்பார்த்து குதிரைக்குஜீனி போடென்று சொன்னூர்
சீக்கிரமாகவே குதிரையை யிங்கே கொண்டு வாவென்றூர்
அந்த சொல்லைக் காதிலேகேட்டு அந்நேர வேளையிலே
சீக்கிரமாகவே ஜீனியைக்கட்டி தீனின்புலி முன்னே
குதிரையை நிறுத்தினன் முஹம்மது ஹனிபு கோபமிகவாக
குதிரையின் மேலே யேறினரப்போ கொடியசிங்கம் போல
குதிரைக்கு சிமிட்டா கொடுத்தார்பறக்க காலின் முள்ளாலே
கொக்குக் குலத்தில் ராஜாளிபோல் குதித்தார் படைக்குள்ளே
ஆட்டுக் குலத்தில் புலிபோல் புகுந்தார் ஆண்சிங்கராஜர்
கத்தியைக்கையில் வாங்கினரப்போ கடுங்கோப மூண்டு
துண்டு துண்டாய்க் கீழேவிழுந்திட சூறையாடி வந்தார்

கண்டங் கண்டமாய்க் குப்பலாய்மடிய காற்றாய்ப்பறந்து வந்தார்
செண்டுகள் போலத் தலைகள்பறந்திட சிதறவெட்டி வந்தார்
தயிரின் குடம்போல் மூளைகள்சிதறிட தாண்டி வெட்டிவந்தார்
அந்தப் படைக்குள் ளென்னவாச்சுது அந்நேர வேளையிலே
கூகூவென்றுஞ் சத்தங்களாச்சுது கோடி படைக்குள்ளே
கை வேறாகக் கால் வேறாகக் கதறிவிழுவாரும்
சாமி சாமி யென்றுசொல்லி தரைமேல் விழுவாரும்
தேவாதேவா யென்று புலம்பி திகைத்து விழுவாரும்
பூத்துபூத்து வென்று புலம்பி புவிமேல் விழுவாரும்
தண்ணீர் தண்ணீ ரென்றுகூவி தவித்து விழுவாரும்
சோறோ சோறோ வென்றுகேட்டு சோம்பி விழுவாரும்
குதிரைகளிழந்து கால் நடையாகிக் கூவிமடிவாரும்
போதும்போது மென்று புலம்பி பொன்றி மடிவாரும்
பெண்டு பிள்ளைகளை நினைத்து நினைத்து புலம்பிமடிவாரும்
வீடுவாசலை நினைத்து நினைத்து வெட்டால் மடிவாரும்
இப்படி முஹம்மது ஹனிபுசண்டை செய்தாரந் நேரம்.

வசனம்.

இப்படி முஹம்மது ஹனிபு சண்டை செய்துவருகிற தருணத்தில் பொழுது மேற்புரம்போய் மறைந்துவிட்டது. இருள் வந்து மூடிக்கொண்டது. அப்போது அரசனும் சேனைகளும் கோட்டைக்குள் போனார்கள். பின்பு முஹம்மது ஹனிபு தானிறங்கியிருக்குமிடத்திற்குவந்து குலாமின் கையில் குதிரையைக் கொடுத்து விட்டு உண்டு பசியாறி நித்திரை போயினார்கள். பின்பு பொழுது விடிந்தவுடனே ஷாஹேஇறம் தன்னுடைய சேனைகளைக் கூட்டிக் கொண்டு மைதானில் வந்து நின்று சண்டைக் கழைத்தார்கள். அதுகண்டு முஹம்மது ஹனிபு தன் குதிரையின் மேலேறி அப்படையினுள் புலி போல புகுந்து அநேகர்களை வெட்டிப் பிணக்குன்றாக்கி ஆறாக இரத்தமோடச்செய்து அன்றும் வெற்றிபெற்றுதன்னிருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தார். இப்படி அநேகதரம் சண்டைசெய்து முஹம்மது ஹனிபாவை வெற்றி பெறாததால் ஷாஹேஇறம் தன்னுடைய மந்திரிமார்களை அழைத்து நாம் எத்தனையோதரம் சண்டைசெய்தோம், அதனால் அவனை வெட்டவுமில்லை பிடிக்கவுமில்லை. அவனால் நம்முடைய சேனைகளெல்லாம் அவன் கையின் கத்தியால் மாண்டு போனார்கள். இனிமேல் எதிர்த்தாலும் மற்றப் படைகளெல்லாம் மாண்டு பேர்வார்கள் நாம் ஜெயிக்கப் போகிறதில்லை. ஆகையால்

அவனேடெதிர்த்துச் சண்டைசெய்யாமல் உபாயத்தா லவனைப்பிடித்துக் கொல்லவேண்டியது. அப்படிச் செய்ய ஆலோசனைச் சொல்லுங்களென்று கேட்டான். அப்பொழுது மந்திரிமார்கள் ஓ பாதுஷாவே! எங்கள் மனதில் ஒரு யுக்தி பிறந்தது. அதென்னவெனில், சண்டை மைதானத்தில் சில கிணறுகள் தோண்டி, அதன்பேரில் கழிகளைப் பரப்பி அதன்மேல் மண்ணை மூடிவிட்டுப் பின்பு நாம் அந்த மைதானில் நின்று சண்டைக்கு அழைத்தால் அவன் நமக்கருகில் ஓடிவருவான். அப்பொழுது அவன் எந்தக் கிணற்றிலாவது விழுந்துவிடுவான். உடனே நாம் மண்ணைத்தள்ளி அக்கிணற்றை மூடிவிட்டால் உள்ளவே சிக்கிக்கொண்டு இறந்துவிடுவா னென்று சொல்ல, அதை ராஜன்கேட்டு ஆம். இது நல்ல ஆலோசனை தானென்று ஒப்புக்கொண்டு உடனே கிணறுகளை வெட்டச் சொல்லி உத்திரவு கொடுத்தான். அப்படியே ஒரு நொடிக்குள்ளாக இராவிற்கிராவே கிணறுகள் வெட்டி தயார் செய்துவிட்டார்கள். பின்பு பொழுது விடிந்தவுடனே அரசன் தன்னுடைய சேனைகளுடனே இரணக்கள மைதானில் வந்து அணியணியாகப் படைகளை வகுத்து சமருக்கு அழைத்தார்கள். அப்பொழுது முஹம்மது ஹனிபு இவர்கள் செய்திருக்கிற சூதுகளொன்றுந் தெரியாமல் தன் வழக்கப்படி குதிரையின் மேலேறிச் சண்டைக்கு முன்னிலும் அதிக ஆரவாரத்தோடு போய் நின்றார். அந்நேரவேளையி லொருவன் மிகுந்த வல்லமை யோடு வந்தெதிர்த்தான். அவனை முஹம்மத்னிபு வெட்டக் கத்தியை யெடுத்தார். அவன் பயந்து பின்னுக்கோடினன். அவனைத் துரத்திக்கொண்டே அக்கிணற்றின் கிட்டேபோகவும், குதிரை திகைத்து அவ்விடத்திலேயே நின்றுவிட்டது. அப்பொழுது முஹம்மது ஹனிபு அந்தக் குதிரையின்மேல் அதிக கோபமாய் நல்ல சமயத்தில் மோசஞ் செய்கிறதே யென்று சாட்டியால் ஒரடி அடித்தார். அவ்வடியினல் அக்குதிரை யெகிறிப்பாய்ந்தது. எப்படியெனில், கிணறுகளைத் தப்படித்துத் தப்படித்து தாண்டிப்போகையில் நாலாவது கிணற்றினுள் போய் விழுந்து விட்டது. அதனல் முஹம்மது ஹனிபாவுடைய இரண்டு காலுமொடிந்து எலும்புக ளெல்லாம் நெறநெற வென்று நொறுங்கிப் போய்விட்டது.

அந்நேரவேளையில் பகைவர்களுடைய படைகளெல்லாம் அக்கிணற்றை வந்து வளைந்து சூழ்ந்து நின்றுக் கொண்டார்கள். அப்பொழுது மந்திரி மார்களெல்லாம் அங்கேவந்து அதிக சந்தோஷத்தோடு இன்றோடு நம்முடைய விசனங்களும் பகைகளும் தொலைந்து

விட்டது. நீங்கள் சீக்கிரமாகக் கிணற்றில் மண்ணைத்தள்ளி மூடிநிரவி விடுங்களென்று சொல்லிக் கொண்டிருக்கையில், அந்நேரவேளையிலே ஜைத்தூன் வந்து குலாமைப் பார்த்து எங்கே இமாமென்று அதட்டிக் கேட்கையில், குலாம் இப்படைகளெல்லாம் ஏகமாய் வந்து வளைந்திட அதனுள் புகுந்தாரே, அதுதானெனக்குத் தெரியும் மற்றொன்று மெனக்குத் தெரியாதென்று சொல்லினன் அவன் சொன்னதை ஜைத் தூன் கேட்டு, சீக்கிரமாகத் தன் குதிரையை நடத்தி ஏகமாகச் சூழ்ந் திருக்குங் கிணற்றின்கிட்டே வரவும், அப்போதப்படை களெல்லாம் ஜைத்தூன் வருவதைக்கண்டு பயந்து ஓடிப்போய் விட்டார்கள். அந் நேரவேளையில் 40-பாந்திகளும், ஜைத்தூனும் கிட்டேவந்து சேர்ந்தார் கள் அப்பொழுது ஜைத்தூன் குதிரையை விட்டுக் கீழேயிறங்கி அக் கிணற்றினருகில் சென்று கிணற்றைக் குனிந்து பார்த்து ஓ இமாமே! நான் தங்களுடைய அடியாள். என்பேர் ஜைத்தூன். தாங்களென்ன மாயிருக்கிறீர், எனக்குத் தைரியம் வரும்படி தங்களுடைய சங்கதி களைச் சொல்லென்று கூப்பிட்டுக் கேட்க, அந்தச் சத்தத்தை முஹம் மது ஹனிபுக் கேட்டு ஜைத்தூனென் றெண்ணி அப்போது முஹம்மது ஹனிபு என்னுடைய இரண்டு கால்களுமொடிந்து எலும்புகளெல்லாம் நொறுங்கிப்போயிருக்கின்றது. என்னைச் சீக்கிரமாக வெளிப்படுத்து மென்று கூப்பிட்டுச் சொன்னார். அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே ஜைத்தூன் கேடயத்திற்கு நாலுமூலையுங் கயறுகட்டி அக்கிணற்றி னுள் விட்டு இதன் பேரில் உனக்கு உட்கார எப்படி சவுக்கியமாயிருக் கிறதோ அப்படிக் குந்திக்கொள்ளுமென்று சொல்ல, அப்போது முஹம்மது ஹனிபு இரண்டு அக்குளுக்குள்ளாகக் கயிறுகளை அறப் பிடித்து அதன்பேரில் குந்திக்கொள்ளவும், அப்போது ஜைத்தூன் தன்னுடைய வல்லமை யெல்லாங்கூட்டி தூக்கிட கொஞ்சமும் அசை யவுமில்லை. அதனால் ஜைத்தூன் அதிக வருத்தமுற்று ஓ இமாமே! நான் என்னுடைய வல்லமை யெல்லாங்கூட்டி தங்களை மேலுக்குத் தூக்கிடில் தாங்களசையவுமில்லை. தட்டு எழும்பவுமில்லை யென்று சொல்ல, அதற்கு முஹம்மது ஹனிபுகேட்டு ஓ, ஜைத்தூனே! உன் னுடன் நாற்பது பாந்திபெண்களையுங் கூட்டிக்கொண்டு கலிமா ஓதி ஹக் தஆலாவைப் புகழ்ந்து என்னை யெடுப்பீர்களாகில் நான் கரை யேறுவே னென்று சொல்ல, அதைச் ஜைத்தூன் கேட்டு அப்படியே செய்து எடுக்கையில், இலேசாகக் கிணற்றைவிட்டு கரைவந்து சேர்ந் தார். அப்போது முஹம்மது ஹனிபாவை கட்டிலின்மேல் வைத்து குலாமின் வசம் ஒப்பிவித்தாள். அப்பொழுது முஹம்மது ஹனிபு ஹா

வென்று ஒரு குளிர்ந்த பெருமூச்சுவிட்டார். அதை ஜைத்தூன் கண்டு ஓ இமாமே! தாங்கள் இப்படி குளிர்ந்த பெருமூச்சுவிட்ட காரணமென்ன. அதையெனக்குத் தெரியச் சொல்லவேணு மென்று விருப்புற்றுக் கேட்க, அதற்கு அமீர் என்னுடைய காலு இப்படியாய் விட்டது. என்னுடன் பிறந்தார் 4-பேரும் சிறையினுள்ளிருக்கிறார் கள் அவர்களை எவ்விதமாக வெளியில் கொண்டு வருவேனென்ற எண்ணத்தின் பெருமூச்சென்று சொன்னார். அதைச் ஜைத்தூன் கேட்டு நீ ஒன்றுக்கும் விசனப்படவேண்டாம். நான் போய் அவர் களைக் கொண்டு வருகிறேனென்று சொல்லித் தான் தனியாகப் புறப் பட்டு அப்பட்டணத்தினுட்போய் புகுந்தாள்.

வீதிகளெல்லாங்கடந்து கோட்டைக்குட் புகுந்து அவர்களை முன்னால் சிறையிலடைத்துவைத்த விடத்திற்போய்ப் பார்க்கையில் அங்கே அவர்களில்லை. பின்னும் மற்ற விடங்களெல்லாந் தேடிப்பார்க் கையில் எங்கேயுங் காணவில்லை. அதன் பின்பு அவ்வூரார்களை விசாரிக்க அவர்களு மின்ன விடத்தி லிருக்கிறார்களென்று சொல்லா மல் எங்களுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள். அந்நேர வேளையில் பகைவரின் படைகள் வந்து முஹம்மது ஹனிபாவைச்சுற்றி வளைந்துக் கொண்டு சமீபத்தில் நெருங்கினார்கள். அப்போது முஹம் மது ஹனிபும் கூட 40-பாந்திகளுமாகப் பகைவர் கிட்டே நெருங்கி வரவொட்டாமல் அம்புகளைப்பூட்டி அம்பொன்றுந் தப்பாமல் அநே கம் பேர்களை மடித்தார்கள். அந்த சமயத்தில் கைகளிலிருந்த அம்பு களெல்லாம் ஒன்றில்லாமல் முடிவாய்விட்டது அதனால் மிகுந்த எண் ணங் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட இக்கட்டாகிய சமயத்தில் ஜைத்தூன் அதிக வேகமாக ஆங்காரத்தோடு குதிரையின் மேல்வர அப்பகைவராகிய சேனையோர் களெல்லாங்கண்டு திடுக்கிட்டுப் பயந்து புலியைக்கண்ட மான்போல மிரண்டு ஓடிப்போய் விட்டார்கள் அப் போது ஜைத்தூன் முஹம்மது ஹனிபாவின் கிட்டேவந்து ஓ பாதுஷா வாகிய இமாமே நான் பட்டணத்தினுள்ளே போய் நகமுகமுந் தேடிப் பார்க்கையில் அவர்களிருக்கிற இடத்தின் குறிப்பே யகப்படவில்லை. இன்னும் தேடிப்பார்க்கலா மெனில், உங்களைப் பகைவர்கள் வந்து என்ன செய்வார்களோவென்று சீக்கிரமாக நான் வருவதற்குள்ளாகத் தங்களைப் பகைவர்கள் வந்து வளைத்துக் கொண்டிருந்தார்கள். நான் வந்து அவர்களைத் துரத்தி விட்டேன். ஆகையால் தங்களுடைய உத்திரவாகுமே யானால் எந்த வூருக்காவது தங்களைக் கொண்டுபோய் வயித்தியர்களிடத்தில் காண்பித்து தங்கள் கைகால்களைச் சீர்ப்படுத்தி

தூங்கள் சொஸ்தமானதின் பின்பு நாம் இவ்விடத்திற்கு சண்டைக்கு வருவோ மென்று சொல்ல, அதை முஹம்மது ஹனிபு கேட்டு நல்லது நமக்குச் சமீபத்தில் இம்ருனுடைய தேசமிருக்கின்றது. அவன் எனக்கு மிகுந்த இஷ்டமுள்ளவன். உதவியொத்தாசை செய்வான். அங்கே யென்னை இக்கட்டிலோடு எடுத்துக்கொண்டு போவென்று சொல்ல, அதைச் ஜைத்தூன்கேட்டு நல்லதென்று சம்மதித்தாள்.

ஜைத்தூன் முஹம்மது ஹனிபாவை இம்ருனிடத்திற்குக் கொண்டுபோகுதல்.

முஹம்மதனிபாவின் சொல்லின்படி கட்டிலின் மேல் வைத்து இம்ருனுடைய தேசத்திற்கு எடுத்துக் கொண்டு போகையில், அப்போது மக்ஹூ ரென்னுமரசன் 12,000 குதிரைப்படைகளைக் கூட்டி வந்து இம்ருனுடன் சண்டை செய்ய அவ்வூரினருகில் வந்து இறங்கி யிருக்கின்றான். அவனை எதிர்த்துச் சண்டைசெய்ய இம்ருனும் தன்னுடைய படையோடு எதிர்முகமாக நின்று இருவரும் படைகளை அணியணியாக நிறுத்தி யிருக்குஞ் சமயத்தில் இம்ருனைப் பார்த்து மக்ஹூர் என்பவன் நீ முஹம்மது என்பவருக்கு ஈமான் கொண்டு கலிமாஓதி யிருக்கிறதாகக் கேள்விப்பட்டு நான் இன்று இப்படைகளுடன் உன்னுடன் சண்டைசெய்ய வந்திருக்கிறேனென்று சொல்லி நீயும் நானுமாக எதிர்த்துச் சண்டைசெய்து இருவர் வல்லமையு மறியவேணு மென்று முதலிருவர்கள் படையும் ஒன்றோடொன் றெதிர்த்து மழை பொழிவதுபோல அம்புகள் பொழிந்து தலைகளுருளவும், மூளைகள் சிதறவும், கத்தியாலும் தண்டாயுதத்தாலும் ஈட்டியாலும் குத்தியும் வெட்டியும் இரத்த ஆறு ஓடச்செய்து கடைசியில் இரண்டு ராஜாக்களும் முன்பேசியதுபோல ஒருவர்க்கொருவர் வானிடிபோல எதிர்த்துச் சண்டைசெய்யும் வேளையில், மக்ஹூ ரென்பவன் இம்ருனுடைய கழுத்தில் பாசக்கயிற்றைப் போட்டு இழுக்க நாடினன்.

அப்போது இம்ருன் ஹக் தஆலாவைப்புகழ்ந்து ஓ நாயகனே! இவ்வேளை நீ என்னைக் காத்துக்கொள்ளென்று துஆக்கேட்டான். அந்நேர வேளையில் அவ்விடம் ஜைத்தூனும் முஹம்மதனிபாவும் குலாமுமாக வந்து பார்க்கையில், இம்ருனுக்கு இக்கட்டாகிய வேளையாயிருக்கின்றது. அதுகண்டு, முஹம்மதனிபு ஆ ஆ இந்தத் தருணத்தில் என்னுடைய கால்களொடிந்து போயிருக்கின்றதே, நான் என்னசெய்வேன் எனக்கு வருத்தமும் பெரிதாயிருக்கின்றதே வீணாக

பகைவனுடைய கையிற்சிக்கி பாதவிக்கிருனே, இவனிடத்திற்குப் போய் வியாதியைக் காப்பாற்றிக்கொள்ளலாமென்று நாடிவர, இங்கே யிப்படிப்பட்ட முசிபத்துண்டா யிருக்கிறதேயென்று அதிக விசனப் படுவதை ஜைத்தூன் கண்டு, ஒ இமாமே! நீ யாதொரு விசனப்பட வேண்டாம் உனக்கு முஹபத்தாகிய இம்ரூன் யாரோ எனக்குத் தெரியாதென்று சொல்ல, அதற்கு முஹம்மதனிபு யார் கழுத்தில் பாசக்கயிறிருக்கின்றதோ அவர்தான் இம்ரூன், எவனிழுக்கிருனே அவனை வெட்டிவிட்டு என்னுடைய இஷ்டனை விடுவித்து விட்டால் அதனால் என் மனம் மகிழ்ந்து நிலைப்படுமென்று சொல்ல, அதுகேட்டு உடனே மின்னல் மின்னினுப்போல ஜைத்தூன் அங்கே வந்து இம்ரூனுடைய கழுத்திலிருக்கும் கயிற்றை அறுத்துப்போட்டு அவனுயிரை மீட்டுவிட்டுப் பகைவனுகிய மக்ஹூரை இரண்டு துண்டாக வெட்டி அவன் படைகளையெல்லாம் நாசமாக்கி அவனுடைய பண முதலிய ஆடையாபரணங்களைக் கொள்ளையிட்டு வெற்றிபெற்று பின் முஹம்மது ஹனிபை வந்து கண்டார். கால்களொடிந்திருப்பதைப் பார்த்து அதிக விசனங்கொண்டு பின்பு நல்ல அலங்கிருதமான மெத்தைக் குள்ளே யிருக்கும்படி செய்தும், உடனே அப்பட்டணத்தினுள் ளிருக்கும் பண்டிதர்களை யெல்லாமழைத்து இக்கால்கள் கூடி சவுக் கியம் பெரும்படியாகச் செய்வீர்களாகில், உங்களுக்கு அளவற்ற பணங்களும் நாடுகளும் இனும் கொடுப்பேன். நன்ருய்ப் பாருங்க ளென்று சொல்ல, வயித்தியர்கள் அச்சொல்லைக் கேட்டு ஒடிந்து போன காலைப்பார்த்து இது சுத்திசெய்ய எவ்வளவும் எங்களால் முடியாது. இதற்கு மருந்து எவ்வுலகத்திலுமில்லை யென்று சொல்லி விட்டார்கள்.

பின்பு, முஹம்மது ஹனிபு அம்மெத்தையினுள்ளிருந்து கால் நோயினல் சொல்லமுடியாத விசனமும் வருத்தமுமடைந்து தன் குலாமை யழைத்து நீயும் ஜைத்தூனும் என்கிட்டே இருக்கவேண் டாம். கொஞ்சநேரம் விலகியிருங்களென்று சொல்ல அச்சேதியை குலாம் ஜைத்தூனுக்குத் தெரியப்படுத்தவும், அப்போது ஜைத்தூன் முஹம்மதனிபாவின் கிட்டேவந்து ஒ இமாமே! இங்கே தனியா யிலேயே யென்னை விலகியிருக்கும்படியாகச் சொல்கிறீரே அங்கு கியாமத்திலே சொல்லுகிறதென்ன என்பேரில் என்ன சந்தேகமுண் டென்று சொல்ல, அதற்கு முஹம்மது ஹனிபு 2-நாழிகைவரைக்கும் நான் தனியாயிருக்க நாடுகிறேன். எனக்கு வருத்தம் பெரிதாயிருக் கின்றது. நீங்களெல்லாரும் விலகியிருங்களென்று சொல்ல அப்படியே

ஜைத்தூனும் குலாமும் மற்றவர்களும் முஹம்மது ஹனீபாவை மெத்தையினுள் தனியாக விட்டுவிட்டு எல்லாரும் வெளியே வந்து விட்டார்கள். அதன்பின்பு, முஹம்மது ஹனீபு அதிக வருத்தத்தினலே கூ கூவென்று சத்தமிட்டுக்கொண்டு அம்மெத்தையினுள்ளிருந்தார். அச்சமயத்தில் (கரியாப்பரி) சீக்கிரமாக வந்து அக்கட்டிலோடு முஹம்மது ஹனீபை ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல், தூக்கிக்கொண்டு தன் பட்டணங் கொண்டுபோய் விட்டது. அதன்பின்பு அம்மெத்தையினுள்ளிருந்துவரும் சத்தமடங்கிப்போய் விட்டது அதை ஜைத்தூன் கண்டு குலாமைப் பார்த்து இதுவரைக்கும் வந்த சத்தம் கம்மென்று அடங்கிப்போயிற்றே. ஆகையால், சீக்கிரமாக நீ மெத்தையினுள்போய் இமாமுடைய சங்கதியை தெரிந்துவாவென்று சொல்ல, உடனே குலாம் அம்மெத்தையினுள் புகுந்து பார்க்கையில், கட்டிலோடு இமாமைக் காணுமல் கிடுகலங்கி மெய்மறந்து பெருங்குரல் பாச்சி சத்தமிட்டழுதான்.

அந்தச் சத்தத்தைச் ஜைத்தூன் கேட்டு அதிக காபரூபட்டு தானும்போய்ப் பார்க்கையில், காணேம். அதனல் பெரிய அழுகை சத்தமாய்விட்டது. பட்டணமுழுதும் ஏகக்கலக்கமாய் விட்டது பின்பு ஜைத்தூன் 40-பாந்திகளையுங் கூப்பிட்டு உங்களை நான் விடுதலை செய்துவிட்டேன். நீங்கள் உங்களுடைய வீடுபோய்ச் சேருங்கள் நான் தனியாகக் காடு, மலை, வனம், வனாந்திர மெல்லாந் திரிந்து அவரைக்கண்டு பிடித்து வருகிறேன். அப்படி யில்லாவிட்டால் என் உயிரை அவ்விடமே மடித்துவிடுவேன். என் முகத்தைக் கொண்டு வரமாட்டேனென்று சொல்லவும், அப்போது முஹம்மதனீபுடைய அடிமை மக்பூல் என்பவர் ஜைத்தூனைப் பார்த்து நாம் மதீனத்திற்குப் போவோம் அவ்விடமுள்ளோர்கள் தங்கள் பேரில் மிகுந்த இரக்கமும் பிரியமும் இஷ்டமுஞ் செய்வார்கள். இன்னம் முஹம்மதனிபாவின் சங்கதிகளும் தெரியுமென்று நானவிதமாகிய ஒப்புகளெல்லாஞ் சொல்ல, அவைகளை யெல்லாங்கேட்டு ஜைத்தூனுக்கு அவ்விடம் போக மனஞ் சம்மதியானது. அப்பொழுது குலாம் முஹம்மதனிபாவுடைய பாதரக்ஷைகளையும் தலைப்பாகையையும் யெடுத்துக்கொண்டு கூட ஜைத்தூனுந் தானுமாக இம்ருனிடத்தில் விடை பெற்றுக் கொண்டு மதீனத்தை நாடி புறப்பட்டு வழிகளெல்லாம் துலைத்து மதீனத்தினருகாகவந்து கபறஸ்தான் கிட்டே நின்று குலாமைப் பார்த்து, நானிவ்விடமே யிருக்கிறேன். நீ பட்டணத்திற்குள் போய் அவ்விடத்தின் சங்கதிகளை முன்னமறிந்துகொள். என்னை யவர்கள் முன்

பின்னறியார்கள். என்னுடைய சங்கதிகளைச் சொல் இதற்கவர்கள் ஒப்புவார்களாகில் நல்லது ஒப்பாவிடில் என் பாக்கியம் நானிப்படியே எங்கேயாகிலும் புறப்பட்டு போய்விடுகிறேன். நீ முன்பின் அறிந்தவனென்று, சொல்லி அங்கோர் கபரின் கிட்டேபோய் உட்கார்ந்து கொண்டார்கள்.

மக்பூல் விசளம்போய்ச் சொல்லுதல்.

அப்போது குலாம் ஜைத்தூனைத் தனியாக விட்டுவிட்டுத் தானும் தனியாகவே மதீனத்திற்குள் போய்புகுந்து இந்தச் சங்கதியைச் சொல்லவும் பெரிய கூச்சலாய்விட்டது. அப்பொழுது இமாம் ஹஸனும், இமாம் ஹுஸைனுமாக வந்து குலாமைப் பார்த்து நீ எங்கே முஹம்மது ஹனீபாவை விட்டுவிட்டு தனியாகவந்து அழுகிறாய் அச்சங்கதிகளை யெங்களுக்குச் சொல்லென்று கேட்க, அதற்கு மக்பூல் ஓய் இமாம்களே! நானவரைத் தோற்றுவிட்டேனென்று ஆதியோடந்தமாகச் சொல்லித் தான் அடையாளங் காட்டக்கொண்டுவந்த பாதரக்ஷைகளையும் தலைப்பாகையையும் காட்டி, இதை உங்களுக்குச் சாட்சி காட்ட கொண்டுவந்தேனென்று சொல்ல, அதை அவ்விரண்டு பேருங்கேட்டு, அதிக வியாகூலத்தோடு அலிறலியல்லாஹு அன்ஹு விடத்திற்குப்போய் மக்பூல் முஹம்மது ஹனீபாவுடைய சங்கதிகளைக் கொண்டு வந்திருக்கிறான். இது அதிக விசனமுள்ளதென்று செல்ல, அதைக்கேட்டு உடனே அலிறலியல்லாஹு, ஹா வென்றொரு சத்தமிட்டார். அதனால் மதீனமெல்லாம் ஒரே சத்தமாய் இன்று அலிறலியல்லாஹுவின் பேரில் ஏதோ பெரிய முஸீபத்து வந்து நேரிட்டாப் போலிருக்கிறதென்று கவனித்து அஸ்ஹாபுகள் அலீயாரிடம் வந்து என்ன செய்தி யென்று கேட்கவும், அலிறலியல்லாஹு மக்பூலானவனைக் கேளுங்களென்று சொல்ல, அதை எல்லா அஸ்ஹாபு மார்களுங் கேட்டு, அந்தக் குலாமைப் பார்த்து முஹம்மது ஹனிபு எங்கே யென்று கேட்டார்கள், அதற்கவன் ஆதியோடந்தமாகச் சகல சங்கதிகளுந் தெரியும்படி சொல்லினான் அவன் சொல்லியதை சகல அஸ்ஹாபுமார்களுங் கேட்டு, அதிக விசனக்கடலினுள் மூழ்கினார்கள். அந்தக்காலம் உமர்றலியல்லாவுடைய கலீபா பட்டத்தின் நாளாயிருந்தது அப்போது உமறிபுனுல் கத்தாபு அலியாரைப் பார்த்து நீர் ஒன்றுக்கும் விசனப்படவேண்டாம். உன்னுடைய பிள்ளை மவ்தாகவில்லை அவர் உயிரோடிருக்கிறார் ஆகையால், நீ சீக்கிரமாகச் ஸர்வரே ஆலம் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய றவுலாவினளவில் போய்க் கேட்பீராகில், உமக்கு அதின் சங்கதிகளை அறிவிப்பார்கள்

அதனால் அறிந்து கொள்வீரென்று சொல்ல, உடனே அலிறலியல்லாஹு தன் தோழன்மார்களின்கூட நபிநாயகத்தின் றவுலாவின் கிட்டேவந்து இஸ்திகாறு செய்யவும் அதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பிஷாறத்துச் செய்தார்கள். அதன் விபரமாவது:— "ஓ அலியே! உன்னுடைய பிள்ளை முஹம்மது ஹனிபு மவ்தாகவில்லை அவர் இது வரைக்கும் உயிரோடிருக்கிறார் அவரை ஷாஹ்பரியினுடையமகள் கரியாபரி என்பவள் கடலிற்கு அப்புறமாகத் தூக்கிக் கொண்டு போய்த் தன்னிருப்பிடத்தில் வைத்திருக்கிறாள் இன்னம் மக்பூலானவன் தன்கூட ஜைத்தூனையுமழைத்து வந்திருக்கிறான். இன்னம் நீ உன்னுடன்கூட பிள்ளைகளிரண்டு பேரையும் கூட உமரையும் அழைத்துக் கொண்டு 12,000 அஸ்ஹாபுமார்களையும் படையாகச் சேர்த்து சமுத்திரத்தின் கரையோரமாகச் சென்று முஹம்மது ஹனீபை மீட்டுக்கொண்டுவாரும், இன்னம் ஜைத்தூனுக்கு முஹம்மதனிபாவுடைய கத்தியையுங்கொடும். இன்னம் ஜைத்தூனுக்குப் பெட்டி நிரம்ப ஆடையாபரணங்களை நிரப்பிக்கொடும். இன்னமவருடைய கூடாரத்தையுங்கொடும் இன்னம் நீ அங்குப் போய்வர 7-வருடம் பிடிக்கும் அல்லாஹு தஆலா அங்கே உங்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பான் அங்குபோய் ஷாஹ்பரியிடத்திற்குப் போனால் அப்போது ஜைத்தூனுக்குப்பெண்களின் உடைகளை உடுத்தி நானாவித நகைகளையிட்டு மிகுந்த அலங்காரஞ்செய்து அவன் முன் போகும்போது தலையைத் திறந்தாப்போல் போகச் சொல்லும். அப்போது அவ்வரசன் ஜைத்தூனைப் பார்த்து நீ எனிப்படி வந்தாய் உன் தலையை மறைக்குந் துப்பட்டி யெங்கேயென்று கேட்பான் அப்பொழுது அவ்வரசனுக்கு என்னுடைய துப்பட்டி உன்னுடைய வீட்டிலிருக்கிறதென்று சொல்லச் சொல்லும், அதுகேட்டு அரசன் உன்னுடைய துப்பட்டி என் வீட்டிற்கு வரவேண்டிய காரணமென்னவென்று கேட்பான் அதற்கு நீ சொல்லு, என்னுடைய புருஷனை உன்மகள் கொண்டுவந்து வீட்டில் வைத்திருக்கிறாளென்று சொல் அச்சங்கதி கேட்டவுடனே ஷாஹ்பரி மகளை யழைத்து உன் புருஷனாகிய முஹம்மது ஹனிபை உன்னிடத்தில் கொடுத்து விடுவானென்று சொன்னார்."

இச்செய்திகளை யெல்லாம் ஸர்வரே ஆலம் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய கிருபையினால் அலிறலியல்லாஹு அறிந்து கொண்டு மிகுந்த சந்தோஷத்தோடு மக்பூலை தன்னுடனழைத்துக் கொண்டு ஜைத்தூனைத் தேடிவருகையில், கபுறஸ்தானிடமாக ஜைத்

தூன் உட்கார்ந்திருந்து முஹம்மது ஹனிபாவின் பேரில் எண்ணமிட்டிருக்கக் கண்டு அலிறலியல்லாஹு கிட்டேபோய் மிகுந்த கிருபையுடன் ஜைத்தூனுடைய தலையின்பேரில் முபாறக்காகிய கையை வைத்துத்தடவி, ஸர்வரே ஆலம் தங்களுக்குத் தெரிவித்த சங்கதிகளெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லி மனதைத் தேற்றிட, அவைகளை ஜைத்தூன்கேட்டு, துக்கங்களையெல்லாம் நீக்கி அதிக சந்தோஷங்கொண்டு ஹக் தஆலாவின்பேரில் மிகுந்த ஷுக்கூர் செய்தார்கள் பின்பு அலிறலியல்லாஹு 2-கோசில் கூடாரமடிக்கும்படி உத்திரவு செய்தார்கள். அதேபடி கூடாரமடித்து விலைபொருந்திய பஞ்சத்து முதலியவை விரித்து சிங்காரித்தார்கள். அப்பொழுது ஜைத்தூன் அலிபுலியாரிடத்தில் விடைபெறறுக்கொண்டு அக்கூடாரத்திநுள் வந்திறங்கி யிருந்தார்கள். பின்பு அஸ்ஹாபுமார்களெல்லாம் கூடாரத்தைக் காவலாக யிருந்தார்கள். கூட உமரென்பவர் வாசர்க்காரராக ஒருவரையும் உள்ளே போகவொட்டாமல் காவற்காரராயிருந்தார்கள். இப்படியிருக்கையில், ஜைத்தூனோடு சந்திக்க, அலிறலியல்லாஹுவினுடைய குமாரர்கள் உமரலியும், தாலீபலியும் அந்தக் கூடாரத்தினருகில்வந்து உள்ளே நுழையப் போனார்கள். அப்போது காவற்காரராகிய உமர் எங்கே போகிறீர்களென, அதற்கவர்கள் நாங்களிருவரும் உள்ளே போகிறோமென்று சொல்லவும், நீங்கள் உத்திரவில்லாமல் உள்ளே போகக்கூடாதென, அதற்கிவர்கள் நாங்கள் ஜைத்தூனுடைய கொழுந்தன்மாரா யிருக்கிறோம். எங்களுக்கும் அவர்களுக்கும் யாதொரு மறைவுமில்லை. நீயேன் தடுக்கிறாயென்று சொல்லவும், உமர் ஜைத்தூனுடைய உத்தரவின்றி நீங்கள் உள்ளே போகக்கூடாதென்று வெளியே நிறுத்திவிட்டு ஜைத்தூனிடத்திற்குப்போய் தங்களைக்காண அலியாருடைய பிள்ளைகள் வந்திருக்கிறார்கள் அவர்களை உள்ளேவிடத் தாங்களுத்தரவானால் விடுகிறேனென்றுசொல்ல அச்சேதி கேட்டவுடனே ஜைத்தூன் அவர்களை உள்ளே வரும்படி உத்தரவுகொடுக்க, உடனே உமர்போய் அவர்களைப்பார்த்து உள்ளே வரும்படி உத்தரவாயிற்று. நீங்கள் போங்களென்று விட்டுவிட்டார். இவ்விரண்டு பேரும் கூடாரத்தினுட்சென்று ஜைத்தூனைக்கண்டு ஸலாஞ்சொல்லினார்கள். உடனே ஜைத்தூன் அவர்கள் ஸலாத்திற்கு ஜவாபுசொல்லி அதிக மருங்குடனே அவர்களை உட்காரவைத்து நானாவிதமாகிய பேச்சுகளெல்லாம் கொழுந்தன்மாருடனே இரவெல்லாம் பெசியிருந்தார்கள். அப்பொழுது பஜர் வேளையாய்விட்டது. இரண்டுபேரும் கூடாரத்தைவிட்டு வெளியே வந்துவிட்டார்கள்.

ஜைத்தூன் முஹம்மது ஹனீபை மீட்க போகுதல்.

பொழுது விடிந்தவுடனே, ஜைத்தூன் முஹம்மதனீபைக் கொண்டுவருவதற்காக, 12,000-குதிரையுடனே அஸ்ஹாபுமார்களைக் கூட்டிக்கொண்டு சிலநாள் வரைக்கும் சமுத்திரக்கரை யோரமாக நடந்துபோகையில், அங்கே ஒரு பெரிய கோட்டையும் பட்டணமுமாக வாசற்படியும் தெரியலாயினது. அதைக்கண்டு கிட்டே கிட்டே போய்க்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் அரசன் காவலாக வைத்திருந்த காவற்காரன் கோட்டையின் மேலிருந்து யார் வருகிறார்களோவென்று பார்த்து அரசனுக்கு அறிக்கை செய்கிறது. அதிலொரு காவற்காரன் அறபு திசைபாசப்பார்த்தான் அப்பொழுது அவன் கண்ணுக்கு இப்படைகள் வருகிறது தெரியலாயிற்று. அதை நன்றாய் யுற்றுப்பார்த்து, கைகால் நடுக்கமோடு பயந்து கோட்டையை விட்டுக் கீழ்பிறங்கி (மீஆதென்னும்) அரசனிடத்திற்போய் ஓ இராஜனே! இன்று நானொரு புதுமையைக் கண்டேன். அதென்னவெனில் இருந்தாப்போலிருந்து அறபுதேசத்தின் புறமாக பெரிய தூசியெழும்பினது, அதை நான் உற்றுப்பார்க்கும்போது 12,000-குதிரையுடனே மதீனத்தின் புறமாயிருந்து வருகிறார்கள், அவர்கள் பிடித்து வரும் கொடியைப் பார்த்தால், இஸ்லாமானவர்களாக மதீனத்தார்கள் போலிருக்கிறது. அவர்கள் வருகிற ஆசவார அமளிகளை இவ்வளவென்று சொல்ல, என்னுலெவ்வளவும் முடியாதென்று சொன்னான்.

அலங்காரக்கண்ணி.

அந்தச்சொல்லைக் காதிலே கேட்டான் மீஆது ராஜன்
அப்படியானதா நம்மோடெதிர்க்க அறபு படையாற்கு
இத்தனை யாணவங் கொண்டாரல்லவா அறபு தேசத்தார்கள்
பஞ்சைகளெல்லாங் கூடியா வந்தார் பாரசண்டை செய்ய
பேடிகளெல்லாங் கூடியா வந்தார் பெரிய சண்டைசெய்ய
பூளைப் பூப்போல் பறப்பாரெல்லாம் பிடித்தால் நான்கத்தி
புலிகளெதிர்த்து என்னோடு சண்டை போட்டிட மாட்டாது
யானைகளெதிர்த்து என்னோடு சண்டை யெதுவுஞ் செய்யாது
பூனையை யெலிகள் கெலிப்பதுபோலப் பேடிகள் வந்தார்கள்
நரியைக் கோழிகள் வெல்வதுபோல நாடியா வந்தார்கள்
புலியை மான்கள் வெல்வதுபோலப் போகவே வந்தார்கள்
கெட்டிக்கார ராஜராயிருந்தால் என்னோடெதிர்க்க வேணும்
சேவகப்படைக ளாகவேயிருந்தால் என்னோடெதிர்க்க வேணும்.

சிப்பாய்ப்படைக ளாகயிருந்தால் என்னைக் செலிக்க வேணும்
மீசைமுளைத்தப் பேர்களாயிருந்தால் முன்னால் நிற்கவேணும்
என்னைவெல்ல உலகினிலுண்டா என்றான் ராஜாவும்
பல்லை நெறநெற வென்று கடித்தான் பாரராஜாவும்
நெல்லைக் கொரிப்பது போலக் கொரித்தான் கெடியராஜாவும்
நல்லது நல்லது பார்ப்போமென்றான் ராஜா மீஆது
அந்த வேளையி லென்ன சொல்கிறான் ராஜா மீஆது
நம்மிடபடைகளைக் கூட்டுங்க ளென்றான் ராஜா மீஆது
கோட்டைக்கு வெளியே போங்களென்றான் ராஜா மீஆது
ஈட்டிகத்திக ளெடுங்களென்றான் ராஜா மீஆது
அம்புதண்டங்க ளெடுங்களென்றான் ராஜா மீஆது
பட்டாகத்திக ளெடுத்துப் பிடியுங்கள் பாரசண்டை செய்ய
அந்தச் சொல்லைக் காதிலேகேட்டு அப்போபடைவீரர்
ஆயுதமெல்லாம் பூட்டியெழுந்தார் ஆங்காரங்கொண்டு
கோட்டையைவிட்டு வெளியிலே வந்தார் கொடியபாவி யோர்கள்
அணியணியாக வந்து நின்றார்கள் ஆங்காரங்கொண்டு
முப்பதுமா முழ முயரமுள்ளவன் மீஆது ராஜன்
வெங்கலம் போல சரீரமுள்ளவன் மீஆது ராஜன்
சிங்கம்போல ஆணவமுள்ளவன் மீஆது ராஜன்
ஆயுதமெல்லாம் பூட்டி யெழுந்தான் ஆணவமிகப்பேசி
மந்திரிமார்கள் சூழ்ந்திட வந்தான் மீஆது ராஜன்
பின்னணியாகவே வந்து நின்றான் பெரியசிங்கராஜன்
அந்த வேளையில் அஸ்ஹாபுமார்களும் அணியணியாக நின்றார்
ராஜன்படையி லிருந்தொரு வீரன் ராஜாபுலிபோலே
சிப்பாய்மார்களே வாங்கள் சண்டைக்கு சீக்கிரமென் முன்னால்
சேவகமார்களே வாங்கள் சண்டைக்கு சீக்கிரமாக விப்போ
உங்கள் வலுவைக் காட்டிடவாங்கள் ஒளித்துக் கொள்ளாமல்
இப்படி சொல்லிச் சண்டைக்கழைத்தான் எதிராளிவீரன்
அந்தச் சொல்லைக் காதிலேகேட்டார் அஸ்ஹாபுமாரெல்லாம்
அப்போ ஜைத்தூன் ஆங்காரங்கொண்டு அவனை வெட்டித்தள்ள
குதிரைமேலேறக் கண்டாரப்போ கொடிய சிங்கவீரர்
அலியார்பிள்ளை தாலீபலியும் அந்நேர வேளையிலே
பெண்கள் சண்டைக்குப் போவது நமக்குப் பெரிய ஞாயமல்ல
நான் போயவனைக் கெலித்துவருகிறேன் நடக்க நீவேண்டாம்
என்றசொல்லைக் காதிலேகேட்டு அப்போ ஜைத்தூனும்

புலியேகேளும் என்றன் சொல்லைப் போனால் சண்டைக்கு
ஓரேவெட்டாய் வெட்டி யெறிந்திடும் ஒன்றும் பாராமல்
அந்தச் சொல்லைக் காதிலேகேட்டு அப்போதாலிபலி
காற்றைப்போலக் குதிரையை விட்டார் கடுங்கோபங்கொண்டு
பெரிய சிங்கம்போல் லெதிரில்வருவதைக் கண்டான் ரணசூரன்
தண்டாயுதத்தா லடித்தானவரைத் தனித்த இடிபோல
அந்தவடியைத் தாங்கி அடித்தார் ஆங்காரங்கொண்டு
குதிரையுமவனுங் கிறுகிறுவென்று கீழேவிழுந்து செத்தான்
பின்னுமொருவன் வந்து எதிர்த்தான் பெரியபுலிபோல
இடியுமிடியு மெதிர்த்தாப்போலே இருந்தது அப்போது
ஒருவருக் கொருவர் ஆங்காரங்கொண்டு உருவினார்கத்தி
தாலிபலியார் வெட்டத்துண்டாய்த் தரைமேல் விழுந்து செத்தான்
இப்படிக்கணக்கில் லாதவீரர்கள் வெட்டுபட்டு மாண்டார்
தாலிப் அலி முன் னெதிர்க்கப்பயந்தார் சகலபடையாரும்
கிட்டே நெருங்கப் பயந்தெல்லோரும் கிடுகலங்கிப் போனார்
ஆறுயிரத்த மோடிப்போச்சுது அந்நேர வேளையிலே.

வசனம்.

இவ்விதமாக தாலிபுஅலி கணக்கில்லாத வீரர்களையும், படைகளையும் வெட்டக்கண்டு உடனே மீஆதென்னு மரசன் ஆங்காரங்கொண்டு குதிரையின் மேலேறி வந்துநின்று என்னுடைய வீரர்களையும், சூரர்களையும் வெட்டி மாய்த்தவனே! என்னுடன் சண்டை செய்பவரென்று கூப்பிட்டான் அந்தச் சொல்லைக் கேட்டவுடனே தாலிபலி பெரும் புலிபோற்சீறி அவன்முன் போயெதிர்க்க, அப்பொழுது மீஆதென்னும் அரசன் கோடையிடிபோல் தன் கத்தியினால் ஓங்கி வெட்ட அவ்வெட்டு தாலிபலியின் தலையிற்பட்டு பெருத்த காயமாய் கிறுகிறுப்பாகிய சமயத்தில் உமரென்பவர் ஓடி தாலிபலியின் சமீபத்திற்போய் குதிரையின் கடிவாளத்தைப்பிடித்து குதிரையோடு தாலிபலியைத் தன்சேனையில் கொண்டுவந்து சேர்த்துவிட்டார். அப்போது அதைக்கண்ட ஜைத்தூனுக்கு மட்டிலடங்காத கோபமெழும்பிப் பல்லை நெறநெறவென்று கடித்துக் கடுங்கோபங்கொண்டு கண்கள் சிவந்து மிகுந்த ஆரவாரத்தோடு மீஆதுக்கு முன்னாகச்சென்று நிற்க, அப்போது மீஆது நீயார்? உன் பெயரென்ன? சொல்லென்று கேட்டான். அதற்கு ஜைத்தூன் என் பெயர் முஹம்மது ஹனிபு. நான் மதீனத்திலிருந்து வந்திருக்கிறேன். ஆகையால், உன்னுடைய ஆசையெல்லாந்தீர என்னுடன் சண்டை செய் ஒன்றும்

மறைத்து வைக்கவேண்டாமென்று சொல்ல, அதைக்கேட்டு மீஆது தன்னுடைய கத்தியைச் சுழற்றி கோடையிடிபோல் கெர்ச்சித்து ஓங்கி வெட்டினன். அவ்வெட்டை ஜைத்தூன் தன் கையிலிருந்த கேடயத்தினல் தாங்கிக்கொண்டாள். அதனலவன் கத்தி முறிந்து துண்டுத் துண்டாய்க் கைபிடி மாத்திரம் கையில் நின்றுவிட்டது. அதையும் ஆங்காரத்தோடு வீசியெறிந்தான். அது கீழேவிழுந்தது அதை உமர் ஓடிப்போய் யெடுத்தார். அப்பொழுது மீஆது உமரைப் பார்த்து கால் நடையுள்ளவனே! நீயேன் கத்திப்பிடியை யெடுத்தாய் அதில் விலைமதிக்க வொண்ணுத நவரத்தினங்கள் பதித்திருக்கிறே னென்று சொல்ல, அதற்கு உமர் கீழே விழுந்ததெல்லாம் என்னுடைய சொத்தாயிருக்குமென்று சொன்னர். அப்போது ஜைத்தூன் மீஆ தைப்பார்த்து நீ குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி என்னுடன் மல்லமர் செய்யென்று சொல்ல, அதுகேட்டு அவன் குதிரையை விட்டுக் கீழே யிறங்கினன், ஜைத்தூனும் குதிரையை விட்டுக் கீழே யிறங்கினர்கள். அந்நேர மிரண்டுபேரும் மல்லமர் செய்தார்கள். அப்போது ஜைத் தூன் மீஆதை தூக்கிக் கீழேபோட்டு அவன் மார்மேல்குந்தி கத்தியை கையில் வாங்கிக் கழுத்தின் பேரில் வைத்து மீஆதே! நீ இப்போது கலிமா ஓதுவாயாகில் உன் உயிரைக்கொண்டு மீந்துபோவாய், இன்னம் சுவர்க்கவாதியுமாவாய், இல்லாவிடில் உன்னுயிரையு மிழந்து நரகவாதியாய்ப் போவாயென்று செல்ல, அதற்கு மீஆது உன்னு டைய தீதாறைக்காண ஆசைக்கொண்டவனு யிருக்கிறேன். ஆகை யால் நான் சந்திக்க தாங்கள் முகத்தைக் காண்பிக்கவேணும். இன் னம் தங்களுடைய வல்லமைப்போல் வல்லமையுடையவர்களை இது வரையில் ஒருவரையாவது நான் கண்டதில்லையென்று சொல்ல, அதற்கு ஜைத்தூன் நானெரு வேலையாகப்போகிறேன் அவ்வேலையை முடித்துக்கொண்டு நான் திரும்பி வரும்போது இவ்விடம் வந்து போவேன். அப்போது என்னுடைய தீதாறைக் காண்பிப்பேன் அப் போது நீ சந்திப்பாய், இப்போது நீ சீக்கிரமாக நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்திற்கு ஈமான்கொண்டு கலிமா ஓதி தீனுள்ளாகி விடுமென்று சொல்ல உடனே மிகுந்த சந்தோஷத்தோடு மீஆது கலிமா ஓதி பின்பு இன்பத்தோடு நவரத்தினங்களையும் பணங்காசு களையும் தட்டுகளிலே நிரப்பி யெடுத்துக்கொண்டு வந்து காணிக்கை யாக ஜைத்தூனெதிரில் வைத்து, மிகுந்த வணக்கத்துடனே கைகட்டி நிற்க, அப்போது ஜைத்தூன் மீஆதைப் பார்த்து இப்போது இவை களிலொன்றையும் நானெடுக்கிறதில்லை இவைகளெனக்கு வேண்டியது

மில்லை. ஆனால் நான் போய் திரும்பி வரும்போது இவைகளை யெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறேன் நீ ஒன்றுக்கும் விசனப்படாதே. சதமாக மனமகிழ்ச்சியோடு உன் கோட்டைக்குள்ளே போய் ஹக் தஆலாவை மறக்காமலும், தீனை விடாமலும் சீமையை ஆண்டுக்கொண்டிரு வென்று சொன்னார்கள்.

அப்பொழுது மீஆது ஓ பாதுஷாவே! இன்னொரு விண்ணப்ப மிருக்கிறது. அதை தாங்கள் காது கொடுத்துக் கேட்டு உதவி செய்ய வேணுமென்று சொல்ல, அதற்குச் ஜைத்தூன் அதென்ன சங்கதி சொல்லுமென்று கேட்டார்கள். அப்போது மீஆது சொல்லத் தொடங்கினார். தோராஜனென்று ஒருபெரிய இராஜனிருக்கிறான் இன்னமவன் அளவற்ற படைகளையும் அதிக வல்லமையுமுடையவன் இன்னம் 40-கஜம் உயரமுள்ளவன். அவன் இவ்விடத்திற்கு வருடம் வருடம் தப்பாமல் படையெடுத்து வந்து என்னுடன் சண்டை செய்து அநேகம் பேரைச் சேதப்படுத்தி என்னையும் வருத்தஞ்செய்து கொல்லாமல் விட்டு விட்டுப் போகிறான். அவன் நான் இஸ்லாமாகிய சங்கதியைக் கேள்விப்படுவானானால் என்னை உயிரோடு விடமாட்டானென்று சொல்ல, அதை ஜைத்தூன் கேட்டு நீ ஒன்றுக்குமஞ்சாதே, இப்போதே அவன் பேரில் நட, நாமெல்லோரும் அங்கு போய் அவனையும் இஸ்லாமாக்குவோமென்று சொல்ல, அதைக் கேட்டு மீஆது தன்னுடைய சேனைகளை யெல்லாம் நடத்தி வெளியே வந்தார், கூட அறபிகளும் புறப்பட்டு மலைவனங்களைக் கடந்து தோராஜாவின் பட்டணத்திற்குச் சமீபமாகப் போனார்கள், அப்பொழுது தோராஜன் தன்னுடன் சண்டைசெய்ய மீஆது தன்னுடைய படைகளுடன் தனக்குதவியாக இஸ்லாமான 12,000 குதிரை வீரர்களுடன் வருகிறாரென்று தூதர்கள் ஓடிப்போய் அரசனுக்குச் சொல்ல, அந்தச் சங்கதியைத் தோராஜன் கேட்டுக் கோபமானான்.

அலங்காரக்கண்ணி.

அந்த சொல்லைக் காதிலேகேட்டான் ஆங்கார தோராஜன்
ஆஹா வென்று கோபங்கொண்டான் அண்ணல் தோராஜன்
கண்களிரண்டுஞ் சிவந்து போச்சுது எட்டிக்கனி போல
விழிகளிரண்டுஞ் சிவந்து போச்சு முருக்கமலர் போல
மீசை படபட வென்று துடித்தது ராஜாவுக்கானதும்
பல்லை நெறநெற வென்று கடித்தான் பெரியதோராஜன்
கண்ணை யுருட்டிப் பார்த்தானையா கடுங்கோபங் கொண்டு

மந்திரி மார்கள் மற்றுமுள்ளோர்கள் பார்க்கத் தேராஜன்
கிடுகிடு வென்று நடுங்கினர் ராஜன் கிட்டேயிருந்தோர்கள்
மென்மேலாகக் கோபம் பொங்குது ராஜாவுக் காணலும்
தருமஞ் செய்யக் கருமம் வந்தது என்றான் ராஜாவும்
அப்பவே வெட்டிபோட்டு விட்டிருந்தால் இப்போது வருவானு
விட்டபடியால் வந்தரன் சண்டைக்கு வேறுபடையைக் கூட்டி
ஆனலாகட்டுங் குறை யொன்றுமில்லை யறிவோமவன் சண்டை
எத்தனை தரமோ அடித்தேனவனை யெல்லாமறந்து போனன்
சண்டை செய்ய வலுவில்லாமல் தைரியமில்லாமல்
இஸ்லாம்படையைக் கூட்டியே வந்தான் என்னுடன் சண்டைசெய்ய
பஞ்சுபஞ்சாகப் பறக்கவடிப்பேன் பாருங்களெல்லோரும்
பூளைப்பூப்போல் பறக்கவடிப்பேன் பாருங்களெல்லோரும்
தூசிப்போலப் பறக்கவடிப்பேன் துண்டு துண்டாக
மீசைமுளைத்தவ னுகவிருந்தால் முன்னேவந்திடுவான்
பேடிபோல விருப்பானுகில் பின்னலோடிடுவான்
என்னைக்கெலிக்க வந்தானுனல் இப்போ தேவருவான்
இப்படிநானு விதமாய்ச் சொன்னன் இடிபோல் தேராஜன்
மந்திரிமார்களே நம்மிடபடைகளைத் தயாரு செய்திடுங்கள்
குதிரைப்படைகளைச் சண்டைக்குப் போகக் கூட்டமாக்குங்கள்
ஜெயபேரிகையை யானைமேல் வைத்துத் தெருவெல்லா மடியும்
என்றசொல்லைக் காதிலே கேட்டு எல்லா மந்திரிமாரும்
உடனே படைகளைத் தயாருசெய்தார் உக்ர சண்டைசெய்ய
கத்திகட்டாரி பூட்டினு ரெல்லாங் கடுங்கோபங்கொண்டு
அம்புமெடுத்தார் தண்டமெடுத்தார் ஆங்காரங்கொண்டு
குதிரைமேலே வந்தாரெல்லாம் பெரிய கூட்டமாக
கோட்டையை விட்டு வெளியினில் வந்தார் கோடிபடையாக
யானைமேலேறி வந்தான் ராஜா ஆயுதந்தான் பூட்டி
அணியணியாக நின்று ரெல்லாம் ஆங்காரங்கொண்டு
இவர்களுமணியாய் நின்று ரெல்லாம் எதிர்த்துச் சண்டைசெய்ய
எதிரிப்படையி லிருந்தொருவீரன் வந்தான் புலிபோல
மைதானில்நின்று கூப்பிட்டுச் சொன்னன் வாங்கள் சண்டைக்கு
சிப்பாய் மார்களா யிருந்தாலென்முன் சண்டைக்கு வாருங்கள்
சேவகமார்களா யிருந்தாலென்முன் சண்டைக்கு வாருங்கள்
மீசைமுளைத்த ஆண் பிள்ளையானேர் வரலாஞ் சண்டைக்கு
பேடிகளாகவிருந்தால் திரும்பிப் பேசாமற் போங்கள்

149640

என்றசொல்லைக் காதிலேகேட்டு எழுந்தார் மீஆது
உத்திரவு பெற்றுப் போனார் சண்டைக்கு உறுமிச்சிங்கம்போல
பூமியதிர்ந்திடப் போனார் சண்டைக்குப் பெரியபுலி போல
வெட்டினார் துண்டாய் விழுந்தான்பாவி வீரியம் பேசிவந்தோன்
வந்தபேர்களை யெல்லாம் வெட்டினார் மீஆது ராஜா
கத்தியை யெடுத்துப் படைக்குள் புகுந்தார் கனத்தஇடிபோல
ஆறுயோடிப் போச்சுது ரத்தம் அந்தச் சண்டையிலே
குப்பல் குப்பலாக விழுந்தார் கூகூகூ வென்று
அந்த வேளையிலென்ன செய்தான் அந்த தோராஜன்
படைகள்சேத மாவதைக்கண்டான் பெரிய தோராஜன்
கண்கள் சிவந்து போச்சுது அப்போ கனத்தராஜாவுக்கு
யானைமேலேறி வந்தானங்கே யாளிபோல் ராஜன்.

149640.

வசனம்.

தோராஜன் ஆங்காரத்தோடு வருவதை மீஆது ராஜா கண்டு பயந்து இவனோடெதிர்க்க நம்மால் முடியாதென்று பின்னோடி வந்து ஜைத்தூனைக்கண்டு, இதோ யானையின்பேரில் வருகிறானே இவன் தான் தோராஜன், இவன் மகா கெட்டிக்காரன், இவனை வெல்வது மகா அருமையென்று சொல்ல, அப்பொழுது ஜைத்தூன் தன் குதிரை யின் மேலேறி அவனோடெதிர்த்தார்கள். அப்பொழுது தோராஜன் ஜைத்தூனைக் கண்டு தன்னுடைய யானையைத் தண்டத்தாலடித்தான். அவ்வடியினால் யானை தன் தலையை மேலுக்குத்தூக்கி துதிக்கையை நீட்டினது அப்போது ஜைத்தூன் அதன் துதிக்கையைப் பிடித்து உரமாக இழுக்கையில் யானை குப்புறவாகக் கீழே முட்டிமோதி வீழ்ந்தது அப்போது தோராஜன் கீழேவிழுந்து எழுந்து கால் நடை யாய்விட்டான். அப்போது ஜைத்தூன் தன்குதிரையை விட்டுக் கீழேயிறங்கி இரண்டு பேரும் மல்லமர்கள் புரிந்தார்கள் ஒருவருக் கொருவர் கீழேதள்ளி வலிகள் செய்யுமளவில் ஜைத்தூன் தோராஜா வைக் கீழேதள்ளி அவன் மாரின்மேலேறி உட்கார்ந்து கத்தியை ஓங்கி நீ சீக்கிரமாகக் கலிமா ஓதுவையே யானால் உன்னுயிர் மீளும், இல்லாவிடில் உன் தலையை அறுத்து விடுவே னென்று சொல்ல, அது கேட்டு தோராஜன் தங்களுடைய நாமத்தைச் சொல்லும் இன்னம் உங்களுடைய வதனத்தையும் காண்பிக்கவேண்டு மென்று கேட்க, அதற்கு ஜைத்தூன் என்பெயர் முஹம்மது ஹனிபு என்று சொல்லிப் பின்னும் நான் இப்பொழுது ஒரு வேலையைக்குறித்துக் கடற்கரை யோரமாகப் போகிறேன். அவ்வேலையை முடித்துத் திருப்பிவரும்

யோது என்னுடன் நீ சந்திப்பாய், முகத்தையும் பார்ப்பாய் ஆகை யால் தீவிரமாய்க் கலிமா ஓதென்று சொல்ல, உடனே அவன் கலிமா ஓதி ஈமான் கொண்டு இஸ்லாமாகி உடனே நவரத்தினம் முதலியவை களைத் தட்டுகளில் நிறையக் காணிக்கை கொண்டுவந்து எதிரில் வைக் கவும், அப்பொழுது ஜைத்தூன் ஓ தேராஜாவே! நான் திரும்பிப் போகும்போது இவைகளை யெல்லா மெடுத்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது வேண்டாமென்று சொல்லி அவனுடைய சேனைகளடங் கலையும் கலிமா ஓதச்செய்து நீங்களெல்லாம் இனிமேல் சந்தோஷமா யிருங்கள். தீனைமறக்கப் போகிறீர்களென்று சொல்லி நான் போகிறே னென்று சொன்னார்கள். அப்பொழுது தேராஜா யெழுந்து நின்று கைகட்டி அதபாக ஓ பாதுஷாவே! என்மனதிலொரு கோரிக்கை யிருக்கின்றது. அதனைத் தங்களுடன் சொல்லுகிறேன். தாங்கள் இன் புற்றுக் கேட்டு உதவி செய்ய வேணுமென்று விண்ணப்பஞ்செய்தான்.

கஹர்பாதை வெல்லுதல்,

அப்பொழுது ஜைத்தூன் தேராஜாவைப்பார்த்து உன்னுடைய மனதில் என்ன நாட்டமிருக்கிறது சொல்லென்று கேட்க, அதற்க வன் என்னுடைய பகைவனொருவனிருக்கிறான். அவன் பெரியபடை களை யுடையவன், அதிக வல்லமையுள்ளவன் 60-கெஜம் உயரமுள்ள வன் அவன் வருடந்தோறும் தப்பாமல் என் தேசத்திற்கு வந்து சண்டைசெய்து என்னை வருத்தப்படுத்தி சேனைகளையும் அழித்துப் போட்டு பணங்காசுகளைக் கொள்ளையடித்துக்கொண்டு என்னைக் கொல்லாமல் உயிரோடே விட்டுவிட்டுப் போகிறது அவனுடைய வழக்கம். அப்படி யிருக்க, நான் இஸ்லாமான சங்கதியை அவன் கேட்பானாகில் என்னை உயிரோடு விடமாட்டானென்று சொல்ல, அதைச் ஜைத்தூன் கேட்டு நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று சொல்லி உடனே மூவகைப் படைகளையும் கூட்டிக்கொண்டு காடு மலை வனங்களைத் தாண்டி அப்பட்டணத்தின் கிட்டேபோனார்கள். அப் பொழுது கோட்டையின் மேலிருக்கும் காவலாளிகள் இப்படைகள் வருவதைக்கண்டு பயந்து திடுகலங்கி இப்படிச் சமுத்திரம்போல் வரு கிற தண்டுகள் யாருடையது எவ்விடத்திலிருந்து வருகிறார்களென்று உற்றுப்பார்த்து கைகால் நடுக்கமோடு கோட்டையைவிட்டுக் கீழே யிறங்கி ஓட்டமாக ஓடி கஹர்பாதுராஜனைக் கண்டு தூதர்கள் அடி பணிந்து, ஓ ராஜனே! இன்றொரு புதுமையைக்கண்டோம். அதென்ன வெனில், கடல் புரண்டு வருவதுபோல் பெரிய படைகள் வருகிறது.

அதுகளெவ்விடமிருந்து யார் வருகிறவர்களென்று பார்த்தோம் அப்படிப் பார்க்கையில், முதலாவது தேராஜனுடைய படை இரண்டாவது மீஆதுடைய படை மூன்றுவது இஸ்லாமானவர்களுடைய படை இவர்களெல்லா மொன்றுய்க்கூடி தங்கள்பேரில் சண்டைக்கு வருகிறுர்களென்று தூதர்கள் சொன்னுர்கள்.

அலங்காரக்கண்ணிகள்.

அந்தச் சொல்லைக் காதிலேகேட்டான் கஹர்பாது ராஜன்
மூண்டதுகோபம் மென்மேலாக முரட்டு ராஜனுக்கு
பொங்குதுகோபம் மென்மேலாகப் போக்கிரி ராஜனுக்கு
நெருப்பைப்போல சிவந்தது கண்கள் நெடிய ராஜனுக்கு
முருக்கம் பூபோல் கண்கள் சிவந்தது மூடராஜனுக்கு
உதடுபடபட வென்னத் துடித்தது உயர்ந்தராஜனுக்கு
மீசைபடபட வென்னத் துடிக்குது வீரியராஜனுக்கு
மந்திரி மார்களைப் பார்த்தானப்போ மண்டுங் கோபத்தால்
தந்திரி மார்களைப் பார்த்தானப்போ தணலாய் கோபமதாய்
என்ன சொன்னுர் தூதர்களென்று கேட்டான் ராஜாவும்
பேடியின் பேச்சைச் சொல்லவா வந்தாய் பெரியபுலிமுன்னே
கண்ணையுருட்டிப் பார்ப்பேனுகில் கத்தியு மின்னுது
நெறநெறவென்று பல்லைக் கடித்தான் நீண்டமுடி ராஜன்
கோழிகள் வந்ததா நரியினைப்பிடிக்க கொக்கரித்துக் கொண்டு
ஆடுகள் வந்ததா புலியை மிரட்ட ஆங்காரங்கொண்டு
தவளைகள் வந்ததா பாம்பினைவெல்ல துயிரிய மிகவாகி
எலிகள் வந்ததா பூனையைத் தின்ன ஏக்கமிகக்கொண்டு
என்னை வெல்ல எவரால்முடியும் ஏழைகள் வந்தார்கள்
நொடியில் தூளாய்ப் பறக்கச்செய்வேன் நூறுநூறுப் போக
கத்தியை யெடுக்க வல்லவருண்டோ காசினியோர்களிலே
அம்பையெடுக்க வல்லவருண்டோ ஆங்காரங்கொண்டு
தரையை விட்டு தண்டாயுதத்தைச் சற்றே யெடுப்பாரா
அப்படி யிருக்க எப்படி வந்தார் ஆங்காரங்கொண்டு
ஆனுலாகட்டு மறிவோம் சண்டை அடியுங்கள் நகரு
சீக்கிரமாகப் படையைக் கூட்டும் சண்டைக்குப் போக
என்ற சொல்லைக் காதிலேகேட்டு அப்போ படைவீரர்
கோடையிடிபோல் கூடினுரெல்லாங் கூக்குரல் தான்போட்டு
கத்தி கட்டாரிகள் பூட்டியேவந்தார் கனத்த படைவீரர்
அம்பு தண்டங்களுடனே வந்தார் ஆங்காரங் கொண்டு

பேரிகை முழங்கத்தோடே யெழுந்தார் பெரிய சண்டைசெய்ய
பம்பைகள் தாரைகள் முழக்கியேவந்தார் பாரசண்டை செய்ய
கோட்டையைவிட்டு வெளியிலே வந்தார் கூட்டங் கூட்டமாக
அணியணியாகப் படைகளை வகுத்தார் ஆங்காரங் கொண்டு
அந்தவேளையில் மூவகைப் படையும் அணியணியாய் நின்றார்
கடலுங் கடலும் சந்தித்தாப்போற் கண்டா ரெல்லாரும்
அந்தவேளையில் தேராஜாவும் அழகிய விடை பெற்று
பூமியதிர்ந்திட நடந்தாரப்போ பெரிய சிங்கம் போல
மைதானத்தில் நின்று கூப்பிட்டார் வலிய வீரர்களை
சிப்பாய் மார்களாக விருப்போர் சண்டைக்கு வாருங்கள்
சேவகமார்களாக விருப்போர் சண்டைக்கு வாருங்கள்
மீசை முளைத்த ஆண்பிள்ளையானல முன்னே ஓடிவாங்கள்
பேடிகளாக விருப்பீரானல் பின்னே யோடிப் போங்கள்
சண்டைக்கு வந்த பேர்களா யிருந்தால் சலுதியாகவாங்கள்.

இவ்விதமாக மைதானில் வந்துதேராஜா சண்டைக்கு அழைப்பதைக் கஹர்பாதுராஜாவினுடைய படைவீரர்கள் கேட்டு அதிலொரு வீரன் அதிக ஆங்காரத்தோடு எதிரில்வந்து கத்தியாலே ஓங்கித் தேராஜனை வெட்டினன். அவ்வெட்டைத் தேராஜன் கேடகத்தால் தாங்கிக்கொண்டு அவனைவெட்டவும், அவன் கிறுகிறுவென்று சுழன்று குதிரையுமவனு மிரண்டு துண்டாகக் கீழேவிழுந்து செத்தான் பின்னு மொருவன் வந்தெதிர்த்தான். அவனு மடிந்து போனன். இப்படி வந்தவர்களையெல்லாம் தேராஜன் வெட்டிக் கொல்லுவதைக்கண்டு, அதிககோபத்தோடு சீறி கஹர்பாதுராஜன் வருவதைக்கண்டு பயந்து ஓடிவந்து ஜைதூனைக்கண்டு இதோவருகிறுனே இவன்தான், கஹர்பாது அதிக வல்லமைபுள்ளவன். மிகுந்தகெட்டிக் காரனென்று சொல்ல, அச்சொல்லை, ஜைத்தூன் கேட்டு சீக்கிரமாகத் தன் குதிரையின்மேலேறி பெரிய சிங்கம்போல அவன் முன் வந்திட, அவன் ஜைத்தூனைக்கண்டு ஆரவாரத்தோடு முன்னில் வந்து நின்றுன். அவனை ஜைத்தூன் பார்த்து ஒ கஹர்பாதே! நீ அதிக கெட்டிக் காரரென்று நான் கேள்விப்பட் டிருக்கிறேன். ஆகையால் உன்னுடைய வல்லமையை நானறியவேணும். இன்னும் உன்படையும் என்படையும் நம்மிருவருடைய வல்லமையைக் காணவேணும் ஆகையால் நீ குதிரையை விட்டுக்கீழேயிறங்கி வந்து என்னுடன் மல்லமர் செய்யென்று சொல்ல உடனே ராஜன் குதிரையை விட்டுக் கீழேயிறங்கினன். ஜைத்தூனும் குதிரையை விட்டுக் கீழேயிறங்கி பாசக்கயிற்றை யெடுத்து அவன்

கழுத்திலே போடவும் அக்கயிர் அவன் கழுத்தில் மாட்டிக்கொண்டது அப்போது ஜைத்தூன் வல்லமையோடு இழுக்க பெரியமலை சாய்வது போலே கீழேவிழுந்து ஜைத்தூனைப் பார்த்து ஓ அதிவீரசூர புலியே! உன்னைப் போலவல்லமை யுடையவர்களை யிதுவரையிலும் நான் கண்டதில்லை. உன்னெடெதிர்க்க ஒருவராலும் முடியாது. ஆண்டவனுனக்கு அதிக பெலத்தைக் கொடுத்திருக்கிறான். என்னைப் பூமியில் தள்ளினையே உன்னுடைய பெயரைச் சொல்லி வடிவையுங் காண்பியுமென்று கேட்டான். அதற்கு ஜைத்தூன் நானிப்போது ஒருகாரியமாகப் போகிறேன். அவ்வேலையை முடித்துக்கொண்டு திரும்பி வரும்போது என்முகத்தை உனக்குக் காண்பிப்பேன். ஆனாலெனக்கு சமுத்திரத்திற்குப் போகும் வழியையுங்காண்பி. அது இன்னமெவ்வளவு தூரமிருக்கிறதோ அதையுஞ் சொல்லென்று கேட்க, அதற்கவன் கடலின்னம் 2, 3 நாள் பயணமிருக்கின்றது. அதுவும் கிட்டேயாயினதென்று சொல்ல, அதுகளை ஜைத்தூன்கேட்டு சீக்கிரமாக கலிமா ஓதென்றுச் சொல்ல, உடனே கஹர்பாதுராஜன் கலிமா ஓதி ஈமான்கொண்டு இஸ்லாமாகினான். அவனுடைய படைகளெல்லாம் இஸ்லாமாகினார்கள். பின்பு கஹர்பாது ராஜாவும், தோராஜாவும், மீஆதுராஜாவும் இம்மூன்றுபேரு மொன்றாகக்கூடி யிருக்கும்போது நான்போகக் கப்பல் தயார் செய்யுங்களென்று உத்திரவு கொடுத்தார்கள். அதுபோலவே கப்பலும் தயார் செய்தார்கள். பின்பு அவ்விடம் விட்டெழுந்து எல்லாப் படைகளுடனே கடற்கரையோரம் போய்ச்சேர்ந்து எல்லாரையுங் கப்பலேற்றிவிட்டு ஜைத்தூனிடத்தில் 3 ராஜாக்களும் விடை பெற்றுக்கொண்டு அவரவர் பட்டணம் சுகமாகப்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு ஜைத்தூன் கப்பலோட்டும் மாலுமியைக் கூப்பிட்டுப் பாய் விரித்து கப்பலோட்ட உத்திரவுகொடுக்க, அப்போது மாலுமி ஜைத்தூனைப் பார்த்து ஓ பாதுஷாவே அப்பட்டணம் போவதற்கு இரண்டு வழியிருக்கின்றது அதில் ஒருவழியில் போனால் ஆறுமாதம்செல்லும் அவ்வழியில் யாதொரு பயமுமில்லை இனி ஒருவழி மெத்த சமீபமானது அவ்வழியில் சென்றால் 40-நாள் பயணமிருக்கிறது ஆனால் அவ்வழியில் ஒருமலையின் மீது 7-பேர் வழிக்கட்டி அடிக்கும் வம்பர்கள் இருக்கிறார்கள் அவர்கள் மிகுந்த வலுமையுள்ளவர்கள் அவர்கள் அவ்வழியில் போகும் கப்பல்களை நிறுத்தி அதிலிருக்கும் சொத்துகளை கொள்ளையடித்து கப்பலையும் முழுகவைக்கிறார்கள் அவர்கள் கடல் மீன்களைப்பிடித்து சுட்டுத்தின்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் நான் எந்த வழியாக கப்பலை ஓட்டவென்று மாலுமிகேட்க அந்த ஏழுபோக்கிரிகளிருக்கும் சமீபமான வழியே கப்பலை ஓட்டும்படி உத்தரவு கொடுத்தார். உடனே மாலுமி பாய்விரித்துக் கப்பலை யோட்டினான் அக்கப்பல் வேகமாய் ஓடி வருகையில், அங்கோர் மலை எதிர்ப்பட்டது. அதைக்கண்டு மாலுமி அதனோரமாகக் கப்பலைக் கொண்டு வந்து நிறுத்தி லங்கர்செய்து பார்க்கையில், அம்மலை மேல் 7-பேர் காவலாளிகள் படுத்து நித்திரை செய்துக் கொண்டிருக்கக் கண்டு மாலுமி அதை ஜைத்தூனுக்கு சொல்லவும் அதைக்கேட்டு ஜைத்தூன் அவ்விடம் கப்பலை நிறுத்தி அவர்களை யெனக்குக் காண்பி யென்று சொல்லவும், பின்பு கப்பலை அம்மலை யோரத்தில் நிறுத்தி கீழேயிறங்கிப் பார்க்கையில், அந்த ஏழு காவலாளிகளும் கழுத்தில் பூநூலணிந்து நித்திரை செய்துக்கொண்டிருக்கக்கண்டு ஜைத்தூன் உமறைப்பார்த்து நீ விரைவாகப்போய் அவர்களை யெழுப்பி என்னுடன் சண்டைசெய்ய அழைத்துவாவென்று சொல்ல உமர் உடனே யெழுந்து அவ்விடம்போய் அவர்களைப் பார்க்கையில், அவர்கள் உல்லாச நித்திரைசெய்து அசந்து நினைவற்ற தூக்கமாகத் தூங்கிக் கொண்டிருக்கக்கண்டு, ஒரு கல்லை யெடுத்து ஒருவன்பேரில் போட்டார். அவனதைச் சட்டை செய்யவில்லை, பின்பு கத்தியை யெடுத்து அவன் விலாவின் புறமாகக் குத்தினார். அதனாலவன் ஒருக்கணித்துத் தன் கண்ணைத் திறந்து பார்க்கையில், ஒரு மனிதன் தலையின் புறமாக நிற்கக்கண்டு தவிழ்ப்பிடிக்க எழுந்தான். அப்போது உமர் குதித்தோடிவந்து ஜைத்தூன் கிட்டே நின்று நான் அவனை யெழுப்பினேன், அவனென்னைப் பிடிக்கவந்தான் நானோடி வந்துவிட்டேனென்று சொன்னார். அந்தக் சமயத்தில் முதல் காவற்காரன் ஜைத்தூனெதிரில் வந்து நின்று மல்லமர் செய்ய வாவென்று கூப்பிட்டான். அப்போது ஜைத்தூன் அவனுடன் மல்லமர்செய்து ஒருவருக்கொருவர் தள்ளினார்கள். கடைசியில் ஜைத்தூனவனைக் கீழேதள்ளி மிதித்துக்கொண்டு நீ இப்போது கலிமா ஓதுவாயாகில் உன்னுயிர்பெற்று இன்னம் சில காலம் உலகத்திலிருப்பாய், இல்லாவிடி லுன்னுயிரையுமிழந்து நரக வாதியாய்ப் போவாயென்று சொல்ல, பயந்து உடனே கலிமா ஓதி ஈமான்கொண்டு இஸ்லாமாகினான். இதேபடி ஒவ்வொருவனாக உமர் எழுப்ப அவர்களை ஜைத்தூன் கெலித்துக் கெலித்து ஏழுபேரையும் இஸ்லாமாக்கிவிட்டார்கள். பின்பவர்கள் கழுத்திலிருந்த பூனூல்களையு மறுத்தெரியும்படி செய்துவிடவும் அப்பொழுது அந்த ஏழுபேரும் ஜைத்தூனைப் பார்த்து தங்களுடைய பெயரையும் தங்கள் முகத்தையுங்

காண்பிக்கவேணும். எங்களைத் தள்ளி கெலித்தபடியினலே நாங்க ளெல்லாம் தங்களுடைய குலாமாயிருக்கிறோமென்று சொல்ல அதற்கு ஜைத்தூன் நான் ஷாஹ்பரியினிடத்திற்குப் போய்த் திரும்பி வரும் போது என் முகத்தைக் காண்பிப்பேனென்று சொல்ல, அதற்கு அவ்வேழுபேரும் எங்களுக்கு (கரியாபரி) இவ்வழியாய் ஏதாவது கப் பல்கள் வருமாகில் அதுகளை இவ்விடத்திலே தானே முழுகடித்துப் போடுங்களென்று கட்டளை யிட்டிருக்கிருள். அதனல் நாங்கள் இவ் விடத்தில் காவலிருக்கிறோம். ஆகையால் அவ்வேலையை உங்களிடத் திற் செய்ய எங்களால் எவ்வளவுமாகாது. இப்போது நீங்களெல்லாம் கப்பல் மேலேறிக் கொள்ளுங்கள், நாங்கள் உங்கள்கூட வருகிறோம். உங்களை யெல்லாம் அப்பட்டணத்திற் கொண்டுபோய் விடுகிறோ மென்று சொல்ல, உடனே மறுபடியுங் கப்பலேறிப் போகும்போது அக்கரை யாயினது பட்டணமுந் தெரியலாயினது. அவ்விடத்தில் கப்பலை நிறுத்தி யெல்லோரும் கீழேயிறங்கி கூடாரங்களடித்து அதற் குள்ளிருந்தார்கள். அவ்வேளையில் கூடவந்த காவலாளிகளெல்லாம் ஜைத்தூனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ஷாஹ்பரி யிடத்திற்குப் போய் வந்த சங்கதிகளை ஆதியோடந்தமாகத் தூதர்கள் சொல்லக் கேட்டு உடனே ஷாஹ்பரி தன்னுடைய மந்திரியை யழைத்து நீ போயவர்களை யிங்கழைத்துவா வென்று விடைகொடுக்க உடனே மந்திரி ஜைத்தூனுடைய கூடாரத்தின் கிட்டேபோய் உள்ளே நுழையப்போனர்.

அப்போது வாசற்படிக்குக் காவற்காரராகிய உமர் நீ யார்? உத்திரவில்லாமல் உள்ளேபோகத் துணிந்தாயென்று கேட்க அதற்கு மந்திரி நான் ஷாஹ்பரியினுடைய முதல் மந்திரி இவரையழைத்து வரும்படி உத்திரவாயினது. அதற்காக நான் வந்தேனென்று சொல்ல அதற்கு உமர் நீ மறைவின்றிப் போகலாகாதென்று சொல்ல அதற்கு மந்திரி பரிகளுக்கு மறைவு ஒன்றுமில்லையென்று சொல்ல அதற்கு உமர் நீ வெளியே நில்லு, நான்போய் உத்திரவு பெற்றுவருகிறே னென்று சொல்லி நிறுத்திவிட்டு இச்செய்தியை ஜைத்தூனுக்குப் போய்ச் சொல்லினர். அச்செய்தியை ஜைத்தூன் கேட்டு, சீக்கிரமாக முழுகி பெண்ணுடைகளை யெல்லாமெடுத்தணிந்து நகைகளுமணிந்துக் கொண்டு தலைமேல் துப்பட்டியிடாமல் வந்த மந்திரியின் கூடச் சேர்ந்து இருவருமாய் அரசன் சிம்மாசனத்திற்கு இன்பமாகப்போய் ஷாஹ்பரியைக்கண்டு ஜைத்தூன் சலாஞ்செய்யவும், அப்போது ஷாஹ் பரி பார்த்து உன்பெயரென்னவென்று கேட்க, அதற்கு என்பெயர்

ஜைத்தூன், நான் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய மரு மகள் என்னை அலிறலியல்லாஹு தங்களிடத்திற்கனுப்பி வைத்தா ரென்று சொல்ல, ஷாஹ்பரி கேட்டு ஸர்வரே ஆலத்தின்பேரில் தறா தோதி, ஓ ஜைத்தூனே! உன் தலைமேல் என் துப்பட்டியிடவில்லை திறந்த தலையாக வந்தாயென்று கேட்க அதறகு ஜைத்தூன் என் தலையை மூடும் துப்பட்டி உன் மகள் வீட்டிலிருக்கிறதென்று சொன் னார்கள். அதை ஷாஹ்பரிகேட்டு அதிக கோபங்கொண்டு உடனே தன்மகளையழைத்து நீ என்ன காரணத்திற்காக மனிதனை எடுத்து வந்தாய் ஆகையால் அவரைச் சீக்கிரமாக இங்கு கொண்டுவாவென்று கண்டிப்பான உத்திரவு கொடுத்தான். இங்கே கரியாபரி முஹம்மது ஹனிபை யெடுத்துக்கொண்டுபோய் என்ன செய்தாளெனில், கொண்டு போன நாள் முதலாக நாள்தோறுந் தவறாமல் நீ யென்னுடன் சேர் வாயாகில் ஒடிந்துபோன காலுக்கு மருந்திட்டு சொஸ்தப்படுத்துவே னென்று கலைத்துக்கொண்டே யிருப்பாள், அதற்கு முஹம்மது ஹனிபு இவ்வேலை யென்னாலாகாதென்று ஒப்பாமலே தடுத்துக்கொண்டே யிருந்தார். அதற்காகவேண்டி முஹம்மதனிபுக்கு நாளுக்கு நாள் வருத்தம் அதிகமாகிக்கொண்டே யிருந்தது.

முஹம்மதனிபை மீட்டுவருகுதல்.

இன்னமதனால் உடலெல்லாமுருகி நிரம்பவும் கரைந்து போ னார்கள். பின்பு கரியாபரி தகப்பன் சொல்லியபடி கட்டிலின்மேல் முஹம்மது ஹனிபை வைத்துத் தகப்பனுக்கு முன்னாகக் கொண்டு வந்து வைத்தாள் உடனே பாதுஷா முஹம்மது ஹனிபை ஜைத்தூ னிடத்தில் ஒப்பித்துவிட்டு நீ உன் புருஷனைச் சுகமாக அழைத்துக் கொண்டு போவென்று சொல்ல, ஜைத்தூன் முஹம்மதனிபிருக்கிற ஹாலைப்பார்த்து மனங்கலங்கிப் பெருமூச்சுவிட்டு அறைந்துமோதி அக்கட்டிலின்மேல் போய்விழுந்து புரண்டழுது ஷாஹ்பரியைப் பார்த்து உலகத்தில் இதற்கு மருந்தில்லையாவென்று கேட்க அதற்கு ஷாஹ்பரி இரங்கி இங்கே மருந்திருக்கிறதென்று சொல்ல, அதைக் கேட்டு ஜைத்தூன் இப்புண்ணை யாற்றுவது உன்பேரில் கடனா யிருக்கு மென்று சொல்லிப் பின்னும் ஸர்வரே ஆலத்தி னுடைய கிருபையும், அலியாருடைய கிருபையு முண்டாகுமென்று சொல்ல அப்போது பரிகளுடைய அரசனாகிய ஷாஹ்பரி பரிகளைப் பார்த்து இன்னகாட்டில் இன்னபுல் லிருக்கின்றது, அதை கொண்டு வந்து சீக்கிரமாக மருந்துசெய்து புண்ணின்மேல் கட்டுவீர்களா கில் ஹக் தஆலாவினுடைய கிருபையினாலுடனே அவர் குஹத்துப்

பெருவார் அம்மருந்தை மூன்றுநாள் வரைக்கும் ஒரு கட்டாகக் கட்டி அதை அவிழ்த்தெரிந்து விட்டு பின்னும் மூன்று நாள்வரைக் கும் வேறு மருந்தைக் கட்டி அதையு மவிழ்த்தெரிந்து விட்டுப் பின்பு மூன்றுநாள் வரைக்கும் அதே மருந்து வைத்துக்கட்டினுல் சதை தோல் முதலியதுங் கூடிப்போகுமென்று சொல்ல, உடனே ஷாஹ்பரி சொன்னபடியே அக்காட்டிற்போய் அம்மருந்தைக் கொண்டு வந்து விட்டு விட்டு மூன்று முறை கட்டவும் ஒன்பது நாளிற் குள்ளாக ஒடிந்த எலும்புகளெல்லாம் ஒன்ருய்க்கூடி சதையும் வளர்ந்து தோலும் மூடிக்கொண்டு புண்ணுலர்ந்து நன்ருய்விட்டது. பின்பு ஜைத்தூன் 40-நாள் வரைக்கும் அவ்விடமேயிருந்து முஹம் மது ஹனிபுக்கு வல்லமையும் முன்வடிவும் வரும்படியாக நல்லநல்ல சோறுகறிகளாக்கி உண்ணக்கொடுத்து பலமும் அழகும் வரும்படி செய்து பின்பு ஷாஹ்பரியிடத்தில் தங்கள் பட்டணம்போக விடை பெற்று முஹம்மதனிபு தன்னுதயுங்க ளெல்லாம் பூட்டிக்கொண்டு ஜைத்தூனே மறைவினுள் வைத்துவிட்டார். பின்பு சகல படைகளே யும் கப்பலேறச்சொல்லித் தானுங் கப்பலேறி மாலுமியைக் கூப்பிட்டு பாய்விரிக்கும்படி உத்திரவுசெய்ய உடனே மாலுமி பாய்விரித்துக் கப்பலே ஓட்டினுன். அக்கப்பல் ஓடிவந்து முதல் காவலாளிகளுள்ள மலேயின் கிட்டேவந்தது அப்பொழுது அக்காவலாளிகள் 7-பேரும் ஓடோடியும் வந்து எதிர்கொண்டார்கள் அப்பொழுது முஹம்மது ஹனிபு அவர்கள் படைப்பைக்கண்டு இதென்ன முசீபத்தாகிய புது மையாயிருக்கிறதென்று சொல்ல அதற்கு உமர் இமாமே! இவ்வேழு பேரையும் ஜைத்தூன் கீழேதள்ளி இவர்களே ஈமான் கொள்ளும்படி இஸ்லாமாக்கி யிருக்கிருர்கள் ஆனதாலிவர்கள் தங்களேக்காண வந் தார்களென்று சொல்ல அதுகேட்டு முஹம்மது ஹனிபு அதிசயப்பட் டார் பின்பு ஹக் தஆலாவைப் புகழ்ந்து என் நாயகனே! நீ ஜைத்தூ னுக்கு அதிக வல்லமையைக் கொடுத்தாயென்ருர் இன்னும் எத் தனேயோ அரசர்களே அடிமையாக்கி யிருக்கிருர்கள் ஆனுல் இந்த ஆட்டங்களெல்லாம் அல்லாஹு தஆலாவினுடைய குதரத்தா யிருக்கும். அப்பொழுது அந்த ஏழுபேரும் முன்னம் வந்து முஹம்ம தனிபாவிற்கு சலாஞ் சொல்லி அதிக மரியாதையுடனே நின்று ஓ பாதுஷாவே எங்களுடன் சில பேச்சுகள் பேசவேணும் தங்களுடைய முகத்தையுங் காண்பிக்க வேணுமென்று கேட்க அதற்கு முஹம்மது ஹனிபு உமரைப்பார்த்து இவர்களென்ன கேட்கிருர்களென்று சொல்ல அதற்கு ஓ இமாமே! திரும்பி வரும்போது முகத்தைக்

காண்பிக்கிறேனென்று ஜைத்தூனவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். ஆகையால் சந்திக்க வந்திருக்கிறார்கள் தங்கள் முகத்தைக் காட்டு மென்று சொல்ல அப்பொழுது முஹம்மது ஹனிபு தன் முகத்தின் மேல் இருந்த திரையை நீக்கி முகத்தை அவர்கள் பார்க்கும்படி காண்பித்தார். அந்த ஏழுபேரும் முகத்தைப்பார்த்து அதிக சந்தோஷங் கொண்டார்கள் பின்பு வேண்டிய முத்துமணி முதலிய நவரத்தினங்களைக் கப்பலில் கொண்டு வந்து நிரப்பினார்கள். அப்பொழுது உமர் அவர்களைப்பார்த்து நீங்கள் கொடுப்பதை யெல்லாம் என்னிடத்தில் கொடுங்கள் நான் பத்திரப்படுத்தி வைக்கிறேனென்று சொல்ல அவர்கள் அதேபடி கொடுத்தார்கள். அதுகளையெல்லாம் உமர் வாங்கி பட்டுவாக்குள்ளிட்டு முஹம்மதனிபாவின் முன்னங் கொண்டுவந்து வைத்தார். பின்பு அவர்களிடத்தில் விடை பெற்றுக் கொண்டு அவ்விடம் விட்டுப்பாய் விரித்துக் கப்பலையோட்ட நாடினார் கள். அந்த சமயத்தில் உமர் அவ்வெழுவரையும் பார்த்து உங்களுக்கு ஒருரகசியமான செய்திசொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லி னார். அதென்னவெனில் உங்களைக் கீழேதள்ளி கெலித்தது இவ்ரு டைய பெண்ஜாதி ஜைத்தூனென்று சொல்ல அதுகேட்டு அவர்கள் ஏழுபேரும் நாணங்கொண்டு ஆ ஹா நம்மைக் கெலித்தது பெண் பிள்ளையாயிருக்க இச்செய்திகளை நம்முடைய இனத்தார்கள் கேட்பா ராகில் இகழ்ச்சி செய்வார்களென்று நிரம்பவும் வெட்கித் தலை கவிழ்ந்து உமரைப் பார்த்து நீ இந்த சங்கதிகளை யாருக்குஞ்சொல்லி எங்கள் வெட்கத்தை வெளியாக்காதேயென்று சொல்லி வேண்டிய பணங்களைக் கொடுத்தார்கள். உமர் அவைகளை வாங்கிக்கொண்டு கப்பலை யோட்டினார்கள்.

இப்படிச் சிலநாள் வரைக்கும் கடல்மேல் கப்பலோடி வந்தது கடைசியில் கஹர்பாது ராஜாவினுடைய எல்லைக்குச் சரியாகக் கப்பல் வரவும் அங்கே லங்கர்செய்து கப்பலை நிறுத்தி அதிலிருந்தபேர் களெல்லாங் கப்பலை விட்டுக் கீழேயிரங்கிக் கரைவந்து சேர்ந்து இரண்டுநாள் வரைக்கும் நடந்து அந்த இராஜாவினுடைய கோட் டைக்குச் சமீபத்தில் கூடாரங்களடித்து சகல படைகளுடன் முஹம் மது ஹனிபு இறங்கினார் அப்போது தூதர்களோடு கஹர்பாது ராஜா விற்கு முஹம்மதனிபு இன்றுவந்து இறங்கினாரென்று சொன்னார் அச்செய்தியை அரசன் கேட்டு மிகுந்த சந்தோஷத்தோடு சந்திக்க வந்தார் அங்கு முஹம்மது ஹனிபை பார்த்து தாங்கள் என்னுடன் சில வசனங்கள்பேசி தங்கள் முகத்தை நான் பார்க்கும்படி காட்ட

வேணுமென்று இன்பூற்றுக் கேட்க அதற்கு முஹம்மது ஹனிபு உமரைப் பார்த்து இவரென்ன சொல்லுகிறுரென்று கேட்டார் அதற்கு உமர் இவ்வாசனைச் ஜைத்தூன் கீழேதள்ளி இவனைக் கெலித்தபடியால் அப்பொழுது இவர் ஜைத்தூனைப் பார்த்துத் தங்கள் முகத்தைப் பார்க்கவேணும் காட்டுமென்று கேட்க நான் திரும்பி வரும்போது காண்பிக்கிறேனென்று சொன்னுர்கள் ஆனதால் இப்பொழுது தங்கள் முகத்தை காட்டச் சொல்லுகிறுரென்று சொல்ல அப்பொழுது முஹம்மதனிபு தன் முகத்தை அவ்வாசனுக்குக் காண்பித்தார்.

அவ்வரசன் முகத்தைப்பார்த்து அதிக சந்தோஷங்கொண்டு தட்டுகளில் பொன் வெள்ளி முத்து மாணிக்கம் முதலியவைகளைக் காணிக்கையாய்க் கொண்டுவந்து எதிரில் வைத்தார் அவைகளை யெடுத்துக் கொண்டு ராஜனை போகும்படி உத்திரவு கொடுத்து விட்டார் அப்போது உமர் கஹர்பாதுக் கூடபோய் அவனுடைய காதில் மெதுவாக ஓ ராஜனே! உன்னேடு சண்டைசெய்து உன்னைக்கெலித்தத் இவருடைய மனைவி ஜைத்தூனென்று சொல்ல அதை கஹர்பாது கேட்டு அதிக வெட்கங்கொண்டு இச்சொல்லை யாருக்கும் சொல்லாதேயென அதற்கு உமர் ஏதாவது கொடுத்தால் யாருடனுஞ் சொல்லேனென்று சொல்ல அப்போது அவனுடைய பட்டுவா நிரைய ஐயாயிரம் தங்கக்காசு வாரிக்கொடுத்தான் அதை அவர் வாங்கிக் கொண்டு தன்னிருப்பிடத்திற்கு வந்துவிட்டார் பின்பு முஹம்மது ஹனிபு தன் சேனைகளோடு அப்பட்டணத்தை விட்டு தேராஜாவினுடைய பட்டணம் வந்து சேர்ந்து வெளியில் தன் படைகளோடு இறங்கினுர்.

இவர்கள் வந்ததைத் தூதர்கள் கண்டு ஓடோடியும்போய் தேராஜாவுக்குச் சொல்ல இராஜன் கேட்டு மிகுந்த மகிழ்வோடெழுந்து முஹம்மதனிபிடத்திற்கு வந்து சலாஞ்செய்து மிகுந்த அதபுடனே எதிரில் நின்று போய்த் திரும்பி வரும்போது இங்கு வருவேன் அப்போது என் முகத்தைச் காட்டுகிறேனென்று ஜைத்தூன் சொல்லி வந்தபடியால் இப்போது அவர்கள்தா னென்று தங்கள் முகத்தைக் காண்பித்திடுமென்று சொல்ல அப்போது முஹம்மது ஹனிபு தன் முகத்தின் வடிவை காட்டினுர் அதுகண்டு தேராஜன் அதிக சந்தோஷங்கொண்டு தட்டுகள் நிறைய நிதிகளை நிரப்பிக் காணிக்கையாக வைக்க அவைகளை முஹம்மதனிபு எடுத்துக்கொண்டு அதிக சந்தோஷமடைந்தார். பின்பு உமர் தேராஜாவின் கிட்டே போய் காதோடு

வாயை வைத்து உன்னோடு சண்டைசெய்து உன்னைக் கீழே தள்ளி கெலித்துக்கொண்டது இவருடைய பெண்சாதி ஜைத்தூனாயிருக்குமென்று சொல்ல அச்சொல்லைத் தோராஜன் கேட்டு நீ இப்பேச்சை வெளியில் யாருடனும் சொல்ல வேண்டாமென்று சொல்ல அதற்கு உமர் ஆனால் நீ இனாம் கொடுப்பாயாகில் நான் யாருடனும் சொல்லாமல் மறைத்து வைப்பேன் இல்லாவிடில் எல்லோருக்கும் சொல்லி விடுவேன் அதினால் உன் வெட்கம் வெளியாய்ப் போகுமென்று சொல்ல அதுகேட்டு தோராஜன் 40,000 தங்கக்காசு இனாமாகக் கொடுத்தான் அதை வாங்கிக்கொண்டு உமர் சந்தோஷமானார்.

பின்பு அவ்விடம் விட்டு விடுதி விடுதிகளாக இறங்கி நடந்து போய் மீஆது ராஜாவினுடைய எல்லை அடுத்து கோட்டைக்கு அடுத்தாப்போல் கூடாரங்களடித்து சகல பேருமாக இறங்கினார்கள் தூதர்கள் ஓடிப்போய்ச் சொல்ல மீஆது ராஜன் கேட்டு அதிக மகிழ்வோடு இங்குவந்து சலாஞ்சொல்லித் தாங்கள் திரும்பிவரும்போது முகத்தைக் காண்பிக்கிறதாகச் சொன்னீரே இப்போது நான் பார்க்கும்படி முகத்தைக் காட்டவேணுமென்று சொல்லவும் அப்போது முஹம்மது ஹனிபு தன் வதனத்தை காண்பிக்கக் கண்டு அதிக சந்தோஷமாயினர் பின்பு தட்டுகள் நிறப்பி அளவற்ற பணங்களைக்காணிக்கையாக எதிரில் வைக்கவும் அவைகளை முஹம்மதனிபு எடுத்துக் கொண்டு அதிக மகிழ்வடைந்தார் பின்பவரிடத்தில் போக விடை பெற்றுக்கொண்டார். அப்போது உமர் மீஆதுடனே பின்தொடர்ந்துபோய் அவன்காதில் தன்வாயை வைத்து உன்னோடெதிர்த்து சண்டைசெய்து கீழேதள்ளி உன்னைக் கெலித்தது இவருடைய பெண்சாதி ஜைத்தூனாயிருக்குமென்று சொல்ல அதுகேட்டு மீஆது அதிக விசனங்கொண்டு முகம்வாடி ஓ உமரே ! நீ இப்பேச்சை யாருடனும் வெளிப்படுத்தாதேயென்று சொல்ல அதற்கு உமர்நீ என் மனதை சந்தோஷிக்கும்படி செய்வாயாகில் நான் யாரோடும் சொல்லேனென்று சொன்னார் உடனே வேண்டுமான இனாம்கள் கொடுத்தார் அதை உமர் வாங்கிக்கொண்டு தன்னிருப்பிடமாகப் போய் சேர்ந்து அன்று அவ்விடம் விட்டு நடந்தார்கள். இப்படி சிலநாள் வரைக்கும் விடுதி விடுதியாக கழிந்து போகையில் இங்கு இரண்டு வழி பிரிவாயினது. ஒன்று மதீனதிற்குப் போகிற பாதை மற்றொன்று இறமெனும் பட்டணத்திற்குப் போகிற பாதை அவ்விடத்திற் போயிறங்கி தாங்கள் வந்தநாளைக் கணக்கிட்டுப் பார்க்கையில் சரியாக 7-வருஷம் நிறப்பமாய்விட்டது அப்பொழுது அஸ்ஹாபுகளெல்லாம் முஹம்மது

ஹனிபைப் பார்த்து நாம்வந்து வெகுநாளாய் விட்டது இனி மதீனத்திற்குப் போவோம் வாருமென்று சொன்னார்கள் அதற்கு முஹம்மது ஹனிபு நான் இறமுக்குப் போகாமல் மதீனம் போகிறதில்லையென்று சத்தியஞ் செய்து கொண்டிருக்கிறேனென்று சொன்னார் அதை அஸ்ஹாபுமார்கள் கேட்டு தாங்கள் மதீனம்போக நாடியிருந்த நினைப்பு களைமாற்றி இறமென்னும் பட்டணம் எப்படி இருக்கின்றதோ அதையும் போய்ப்பார்த்து வருவோமென்று எல்லாரும் ஒருமித்து ஒரே மனதாயிருந்தார்கள். அப்பொழுது எல்லாருங்கூடி ஆளுக்கொரு கடிதமெழுதி உமர்கையில் கொடுத்து மதீனத்திற்கு அனுப்பிவைத்தார்கள். முஹம்மது ஹனிபு தன் தகப்பனுக்குமொரு கடிதமெழுதி யனுப்பினர் உமர் இக்கடிதங்களெல்லாம் வாங்கிக் கொண்டு கடுக நடையாக நடந்து சில நாளிற்குள்ளாக மதீனம் வந்து சேர்ந்து அவரவர் காயிதங்களை அவரவர் வீட்டில் கொடுத்து விட்டார். எல்லோரும் கடிதங்களை அவிழ்த்து வாசித்து அதிலுள்ள ப்யன்களை அறிந்து சந்தோஷப்பட்டார்கள். பின்பு உமர் எல்லோருக்கும் :வாய் விசளமாக அங்கே நடந்த சங்கதிகளெல்லாம் ஒன்றுந் தவறாமல் ஆதியோடந்தமாகச் சொல்லினர்.

முஹம்மது ஹனிபு இறமுக்குப் போகுதல்.

உமரை மதீனத்திற்கு அனுப்பிவைத்துவிட்டுப் பின்பு முஹம்மதனிபு தன்னுடைய 12,000 அஸ்ஹாபுமார்களையு மழைத்துக்கொண்டு விடுதி விடுதியாகச் சென்று இறமின் கோட்டைக்கு அடுத்தாப்போல் கூடாரங்களடித்து இருந்தார்கள். அவர்களைக் காவலாளிகள் கண்டு ஓடோடியும்போய் பாதுஷாவின் முன்னமாக நின்று மிகுந்த சங்கையுடனே முன்னல் காலொடிந்துப்போனவன் தன் கால்களைச் சுத்தி செய்து கொண்டு 12,000 குதிரைப்படையுடனே நம்முடைய கோட்டையினருகில் கூடாரங்களடித்து இறங்கி இருக்கிறார்களென்று சொல்ல, அதை பாதுஷாகேட்டு நல்லது நல்லது காலையில் யாதொரு வேலையும் பார்ப்போமென்று தூதர்களுக்குச் சொல்லிப்பின்பு மந்திரிமார்களைப்பார்த்து பொழுதுவிடிவதற்குள்ளாக நம்முடைய படைகளையெல்லாம் தயார் செய்புங்களென்று கட்டளையிட்டான். அதேபடி மந்திரிமார்கள் பொழுதுகிளம்புவதற்கு முன்னகத் தன் படைகளையெல்லாம் சேர்த்து தயார் செய்துவிட்டார். பின்பு பொழுதுவிடிந்தவுடனே சண்டை வாத்தியங்கள் முழங்கும்படி கோட்டையைவிட்டு வெளியில் வந்து மைதானில் அணியணியாக நின்றார்கள். அப்போது முஹம்மது ஹனிபு தன் படைகளையெல்லா மொன்றாகச் சேர்த்து

தானும் மைதானில் வந்து அணியணியாகப் படைகளை வகுத்து நின்றார்.

அலங்காரக்கண்ணி.

இரண்டு படைகளும் சமுத்திரம்போல எதிர்த்து நிற்கையிலே
இறமின் படையிலிருந் தொருவீரன் எழுந்தான் புலிபோல
ஆங்காரங்கொண்டு படைமுன் வந்தான் ஆண்மை மிகப்பேசி
அந்த வேளையில் முஹம்மது ஹனீபின் அஸ்ஹாபுமாரொருவர்
பந்தயங்கூறிப் பாவிமுன்னாகத் பரியைத்தான் விட்டார்
பூமியதிர்ந்திட விட்டார் குதிரையைப் பெரிய சிங்கம்போல
வந்ததைக்கண்டு எதிர்தான் பாவி வலியபுலி போல
ஒருவருக்கொருவர் வல்லமை செய்து ஓங்கிவாளாலே
விட்டாரிரண்டு துண்டாய் வீழ்ந்தான் வீரசூரபுலி
அதன் பின்னொருவன் வந்து எதிர்த்தா னங்காரம்பேசி
அவனையும் வெட்டி நரகிற்கிரையா யனுப்பினாரப்போது
பின்னுமொருத்தன் வந்தானங்கே புலிபோல் தான்சீறி
துண்டாய் விழுந்திட வெட்டினாரவனை சூரர்கைவாளால்
இப்படியாக வந்தோரெல்லா மிறந்தார் கைவாளால்
ஒருவருந்தப்பிப் போகவேயில்லை உயிரை யிழக்காமல்
இப்படி அஸ்ஹாபு மாரால்மாண்டதைக் கண்டு இறமின்ராஜன்
கடித்தான் பல்லை நெறநெறவென்று கண்கள் நெருப்பாகி
கண்கள் ரெண்டும் சிவந்துபோச்சுது இறமின் ராஜர்க்கு
மீசைகள் படபடவென்று துடித்தது இறமின் ராஜர்க்கு
கைகளை முறித்தான் கோபங்கொண்டு கனத்தமுடி ராஜன்
இப்படி நம்மிட படைகளைக் கொன்றார் இரக்கங்களில்லாமல்
ஆனலாகட்டு மெப்படித் தப்புவார் அறபு தேசத்தார்கள்
என்று சொல்லிப் பல்லைக்கடித்தான் இறமின் ராஜாவும்
மந்திரிமார்களே இந்த வேளையில் மனது துணியவேணும்
பிந்திப் போவோ மானலிப்போ பேடியாகவேணும்
நமது படைகளை ஒன்றாய்க்கூட்டும் நல்ல தருணவேளை
ஒரேமுகமாய்த் தாக்கிடவேணும் ஓடியவர்கள் போக
அந்தச் சொல்லை காதிலேகேட்டு அப்போ படைவீரர்
விழுந்தாரெல்லா மொன்றாய்க்கூடி வெள்ளக்கடல் போல
அந்த வேளையி லென்னசெய்தார் அறபுப்படை யோர்கள்
நாலுமூலையும் புலிபோல் புகுந்தார் நடத்த பெரியசண்டை
ஒருபுறம் உமரலி புகுந்தார் வெட்டஉருவி கையில்கத்தி

ஒருபுறம் ஜைத்தூன் புகுந்தாள் புலிபோல் உருவிகையில்கத்தி
இருபுறம் அஸ்ஹாபுமார்கள் புகுந்தார் உருவிகையில் கத்தி
இப்படி நாலு புறமும் வெட்டினர் ஒன்றுந்தெரியாமல்
துண்டு துண்டா விழுகுது பிணங்கள் சூரர்கைவாளால்
குப்பல் குப்பலாகவே யெங்குங் குவித்தார் மலைப்போல
ஆறுயோடிப் போச்சுது ரத்தம் அவனி தெரியாமல்
கட்டுமரங்கள் போல பிணங்கள் மிதக்குது வெகுதூரம்
தயிரின் குடம்போல் மூளைகள் சிதறி தரையெல்லாஞ்சிந்த
வெட்டி வெட்டி குவித்தார் காபரை வம்படைத்தலைவீரர்
கையொரு பக்கம் காலொரு பக்கம் காணகுவிந்துபோச்சு
தலையொரு பக்கம் உடலொருபக்கம் தரையில் குவிந்துபோச்சு
குதிரைகள் துண்டுதுண்டாய்க் குவிந்தது கொற்றவர் கைவாளால்
காகம் பருந்துக்கு விருந்துகளளித்தார் கழுகு கொத்தித்தின்ன
தண்ட முறிந்தது கத்தி முறிந்தது சக்கரமுறிந்து போச்சு
சண்டைக்கி வந்த வீரர்கள்பேசிய தைரியம் ஓடிப்போச்சு
இனியென்ன செய்வோ மென்று நினைத்து எண்ணமிடுவாரும்
பெண்டு பிள்ளைகள் தன்னை நினைத்துப் புலம்பிஅழுவாரும்
எங்கே யோடிப் பிழைப்போமென்று யோசனை செய்வாரும்
படைகளெல்லாம் மாண்டு போச்சுதே போவோ மென்பாரும்
வாய் நீர்காய்ந்து ஓடினரெல்லாம் வெட்ட முடியாமல்
எதிர்த்திட அஞ்சி யோடினரெல்லாம் ஏக்க மிகவாகி.

வசனம்.

இவ்விதமாக இரண்டு படைகளும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்கள் செய்யும் சமயத்தில் சூரியன் மேற்புறமாகப் போய் மறைய வும், இருள்வந்து மூடிக்கொண்டது. அப்போது இரண்டு படை களும் சண்டை நிறுத்தி அவரவிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்- அன்று முஹம்மது ஹனிபாவினுடைய சேனையில் ஒருவரும் மவ் தாகவில்லை. ஆனல் ஒருவருக்கு மாத்திரம் காயம்பட்டது. இரமின் சேனையில் அறுபத்தையாயிரம் பேர்கள் மடிந்து நரகமடைந்தார்கள். அன்றிரவு ஷாஹே இரம் தன்னுடைய மந்திரிமார்களையழைத்து நம்முடைய வெட்கம் மீறுமான யோசனைகள் செய்யுங்கள் இல்லா விடில் அவர்கள் ஆங்காரித்துப் போவார்களென, அதற்கு மந்திரி மார்கள் அரசருக்குத் தைரியம் வரும்படி அநேக வார்த்தைகளைச் சொல்லி அவர்களை நாம் ஒரு தந்திரத்தினல் கொல்லவேணுமென்று சொல்ல, அதற்கு பாதுஷா எவ்விதமாக வெல்லுவதென்று கேட்

டான் அதற்கு மந்திரிமார்கள் ஓபாதுஷா! அவர்கள் எச்சரிக்கை யின்றி இராக்காலங்களில் ஏமாந்து தூங்குவார்கள் அந்நேர வேளை யில் நாம் நம்முடைய படைகளையெல்லாஞ் சேர்த்துப்போய் வீழ்ந்து வெட்டுவோமாகில் அவர்களெல்லாம் மடிந்துபோவார்கள். நாம் கெலித்துக்கொள்ளலாமென்று சொல்ல, அரசன் கேட்டு சம்மதித்து அதேபடி உடனே தங்கள்சேனைகளெல்லாம் ஒன்றாகக்கூட்டி வெளியே புறப்பட்டார்கள். அன்றிரவு முஹம்மதனிபும், அவருடைய படை களும் சோறுண்டு இச்சூதுகளொன்றுந் தெரியாமல் ஏமாந்து எல்லாம் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். அந்நேரவேளையில் ஏககூட்ட மாய் போய் வீழ்ந்தார்கள். அப்போது முஹம்மதனிபுடைய படைக ளெல்லாம் காபருப்பட்டு தயிர்க்குடம் போல சிதறி நாலுதிக்கும் ஓடிப்போனார்கள். முஹம்மதனிபும் கோட்டை அகழில்போய் வீழ்ந்து அடிப்பட்டு அதனுள்ளிருந்தொரு சத்தமிட்டார். அப்போதொரு மலக்கு யாஅலியே! உன்னுடைய பிள்ளை முஹம்மதனிபு கோட்டை யின் அகழில் இன்றிரவு வீழ்ந்துவிட்டார். இது பொய்யல்ல உண்மை யாயிருக்கும். நீ சீக்கிரமாக இப்போதே வெளிபட்டுக் கூட உமரை யழைத்துக்கொண்டு இறமுக்குப் போகுமென்று சொன்னார். அச் சொல்லைக் கேட்டவுடனே அலிறலியல்லாஹு குதிரைக்கு ஜீனிகட்டி ஜுல்பக்கார் கத்தியைக் கையிற்பிடித்துக்கொண்டு குதிரையின்மே லேறி உமரையும் கூட அழைத்துக்கொண்டு மதீனத்தை விட்டு வெளியில் வரவும் அல்லாஹு தஆலா அவர்களுக்கு பூமியை சுறுக்கி விட்டான். அதனாலவர்கள் மின்னல் மின்னினாப்போல இறமுக்கு வந்து சேர்ந்து ஒரு சத்தமிட்டார். அந்தச் சத்தத்தினாலே அந்தப் பாதுஷா சிம்மாதனத்தின் மேலிருந்து துள்ளிப் பயந்து கீழே வீழ்ந்து விட்டான். இன்னம் அந்த சத்தத்தை அஸ்ஹாபு மார்க ளெல்லாங் கேட்டு இது அலியாருடைய சத்தமென்று சந்தோஷமாய் எல்லோரும் அங்குவந்து சேர்ந்தார்கள் முஹம்மது ஹனிபை அகழை விட்டு வெளியே யெடுத்து குதிரையின் மேல் ஏற்றினார். முஹம்மது ஹனிபும் ஜைத்தூனும் தாலிபலியும் உமர் அலியும் அலிறலியல் லாஹுவைக்கண்டு சந்தித்தார்கள்.

அதற்குள்ளே பொழுது விடிந்து விட்டது. அப்பொழுது அலி றலியல்லாஹு துல்துலின் மேலேறி ஜுல்பக்காரைக் கையில் வாங்கி அக் காபருடைய படைக்குட் புகுந்து கண்டங் கண்டமாகவும் தலை களும், உடல்களும் மலைபோல இரத்தத்தில் பிணங்கள் மிதக்கவும், ஆறுபோல இரத்தம் ஓடவும் வெட்டி நாசமாக்கினார்கள். அதனால்

அந்த பாதுஷா பயந்து 200-குதிரைக்காரருடனே கோட்டையை விட்டு விட்டு வெளியே ஓடிப்போய் விட்டான். அப்பொழுது அலி றலியல்லாஹு வெட்டுக்கு மிஞ்சின காபர்களை யெல்லாம் இஸ்லாமாக்கி விட்டார்.

பின்பு அஸ்ஹாபுமார்களுடன் வெற்றிப்பெற்று கோட்டையினுள்ளே போய் அவனை தேடிப்பார்க்க அவன் அகப்படவில்லை. உடனே அலிறலியல்லாஹு உமறைக் கூப்பிட்டு இவனெங்கேயோ ஓடிப்போய்விட்டான். ஆகையால் நீ அவனைக் கண்டுபிடித்து வா வென்று உத்திரவு கொத்தார் உடனே உமர் வெளிப்பட்டுக் காற்றைப் போல வேகமாக நடந்து வழியில் பாதுஷாவைக் கண்டு பிடித்தார் அந்த இறமின் பாதுஷா தன்னுடன் பிறந்த தம்பி மார் 4-பேர்கள் நாலு தேசத்தை ஆண்டுக் கொண்டிருகிறார்கள். அங்கேபோய் உதவி தேடிக் கொள்வோமென்று போனான், அவன் பின்னாலேயே அவனுக்கும் தெரியாமல் உமரும் கூடவேபோனார் அப்போது தன் தம்பியாகிய இம்லாக்குடைய பட்டணம் போய்ச்சேர்ந்து இரண்டு பேரும் தோப்பினுள் உட்கார்ந்து சில சங்கதிகளைப் பேசிக் கொண்டிருந்து பின்பு அண்ணாவைப் பார்த்து ஓ அண்ணா! என்ன முசிபத்து உன்னை வந்து பிடித்தது. உன்னுடைய அளவற்ற படைகளெல்லாம் எங்கே மறைந்து போய்விட்டது. நீ இக்கோலமாக வந்தீரென்று கேட்டதற்குத் தம்பியே! கேளும், என் மகளென்னை இக்கோலம் செய்து விட்டாள். என்னைக் கெடுத்துப் போட்டாள். இன்னம் இஸ்லாமானவர்களுடன் கூடி தானும் இஸ்லாமாய் விட்டாள். இன்னம் நம்ப தெய்வங்களைக் கொண்டு முகந்திருப்பினாள். இன்னம் தெய்வத்தை விட்டு விட்டோமே என்றும் கொஞ்சமும் வெட்கமில்லை. இன்னம் பிச்சைக்கார முண்டை என் மானத்தையும் போக்கினாள். அவளாலென் வெட்கமும் போய் விட்டது, இவள் இஸ்லாமாகிய என்னைப் பாழ்படுத்தியும் விட்டாள். இன்னம் மதீனத்தார்களைக் கொண்டு வந்து நான் ஊரை விட்டு ஓடும் படியாகவும் செய்தாள். இதனால் நான் இந்த ஹாலாக ஓடிவந்தேன் ஆனால் என் உயிருக்கு ஓரிடம் இருப்புமில்லை இதனால் என்னுயிர் கலக்கத்திலிருக்கிறது ஒருவேளை இங்கேயும் தேடிக் கொண்டு வருவார்கள் அப்போது நான் இவ்விடமும் விட்டு ஓடிப் போகவேண்டியதாய் வரும் அவர்களென்னை நிஜமாக வெட்டாமல் விடுகிறதுமில்லை எங்கே அவளுக்கு தகப்பனுடைய முஹப்பத்திருக்கின்றது அவளுக்கு இஸ்லாமானவர்களுடைய தோஸ்தியே பெரிதாயிருக்கின்றது எனக்கு அவள் பின்னால் இப்படிப்பட்ட பகை யெடுப்

பாளென்றறிவேனாகில் அப்போதே அவனை உயிரோடு வைக்காமல் கொன்று போட்டிருப்பனே இப்படிப்பட்ட வருத்தங்கள் வந்து என்னைப் பிடிக்காதே. இஸ்லாமானவர்கள் என்னை வந்து வருத்தஞ் செய்யார்கள் என்று நானாவிதமாகிய பேச்சுகளெல்லாஞ் சொல்ல, அதற்குத் தம்பியாகிய இம்லாக்கு நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் உன்னுயிருக்கு என்னுயிரைக் கொடுப்பேனென்று சொல்லி கழுத்தோடு சேர்த்துக் கட்டியணைத்து நீ ஒன்றுக்கும் எண்ணப்படாதே அவர்களுக்கு இங்குவர என்ன வல்லமையுண்டு, அண்ணா! வென்று சொன்னான். அவைகளெல்லாம் உமர் கேட்டுக் கொண்டிருந்து தன் தலைமேலிட்டிருந்த குல்லாவைக்கழற்றிக் கையிற்பிடிக்கவும் இவருடைய உருவம் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியலாயிற்று. அப்போது உமர் இறமின் ராஜனைப் பார்த்து நீ எதுவரைக்கும் எங்கள் கையிலகப்படாமல் தப்பித்துக்கொண்டு ஓடுவாய் நீ இப்படி ஓடுவதை நினைத்து உனக்கு வெட்கமும் வரவில்லையேயென்று சொல்ல உமரைப் பார்த்து கிடுகலங்கி வாய் நீருலர்ந்து ஓ தம்பியே! நான் இங்கு பயந்து வந்தும் இம்மூதேவி என்னை விடாமல் பின் தொடர்ந்தானே யென்று சொல்ல அப்போது இம்லாக்கு தன் கூட்டத்தார்களைப் பார்த்து இவனைவிடாமல் பிடியுங்கள் வெட்டுங்களென்று சொல்ல, அதை அவனுடைய சேவகர்கள் கேட்டு ஓடோடியும் பிடிக்கப் போனார்கள். அப்போது உமர் தன் கையிலிருந்த குல்லாவைத் தலையிலிட்டுக் கொண்டார். உடனே ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல் மறைந்துவிட்டார். அங்கிருந்து நடந்து ஓடி அலிறலியல்லாஹு இடத்திற்கு வந்து இறமின் அரசன் இன்னவூரில் அவன் தம்பியினுடைய பட்டணமிருக்கின்றது. அங்கு ஓடிப்போயிருக்கிறானென்று அங்கு நடந்த சங்கதிகளெல்லாம் ஒன்றுந்தவறாமல் ஆதியோடந்தமாகச் சொல்லினார் அவைகளையெல்லாம் அலியார் கேட்டு, நல்லது அவன் அவ்விடமாயிருக்கிறான். ஆகையால் நாம் அங்குப் போகவேண்டியதாயிருக்கும். பேரிகை அடியுங்களென்று உத்தரவுகொடுத்தார். அதேபடி அங்குப்போக பேரிகை யடித்தார்கள். எல்லாப்படைகளும் போகத் தயாராகிவிட்டார்கள். காலமேயெழுந்து வழிகளெல்லாம் தொலைத்து விடுதிவிடுதியாக இறங்கி அப்பட்டணத்தின் அருகிற்சென்றார்கள்.

அலங்காரக்கண்ணி.

காடுமலைகளைத் தாண்டி தாண்டியே கடுகநடந்து போனார்
இவர்கள் வருகிற செய்தியைத் தூதர்கள் ஓடிப்போய்ச் சொன்னார்
அந்த செய்தியைக் காதிலேகேட்டு அப்போ இம்லாக்கு

மந்திரிமார்களே தந்திரிமார்களே என் சொல்லைக் கேளும்
சீக்கிரமாகவே நம்மிட படைகளைச் சேகரமாய் செய்யும்
அறபுதேசத்தார் படைகளைக் கூட்டி வாரார் சண்டைக்கு
வீரியமாக வாரார் சண்டைக்கு வெல்லவே நம்மாலே
என்றசொல்லைக் காதிலே கேட்டு எல்லா மந்திரிமாரும்
படைகளைச்சேர பேரிகை அடிக்க பகர்ந்தார் அந்நேரம்
பேரிகைசத்தங் கேட்டார் வீரர்கள் பெரிய சண்டைசெய்ய
சமுத்திரம் போலக் கூடினரெல்லாம் சத்துவ மிகப்பேசி
கத்திக்காரர்களு மீட்டிக்காரர்களு கடுகஓடி வந்தார்
அம்புக்காரர்களு தண்டக்காரர்களும் அலறிஓடி வந்தார்
பட்டாக்காரர்களும் சக்கரக்காரர்களும் பதறி ஓடி வந்தார்
பெரும்படையாக கூடின ரெல்லாம் கோட்டைக் குள்ளாக
குமுகுமுவென்று குமுறுதுநகரா கோடையிடிபோல
வகைவகையான வாத்தியமாகுது வண்டர் படைக் குள்ளே
மேளவாத்தியம் முழங்குது மெத்த வேடிக்கை மிகவாக
சா்மிகளைப்போய் வரங்கள் கேட்டார் சத்ராதியை வெல்ல
புத்தை வரங்கள் கேட்டா ரெல்லாம் பொடிபொடியாய் மடிய
கோட்டையை விட்டு வெளியினில் வந்தார் கோடிபடையாக
வந்தபடைகளைக் கண்ணுற் கண்டார் வல்ல அஸ்ஹாபுகள்
அந்தவேளையி லென்ன செய்தார் ஆதி புலியல்லா
படைகளை அணியணியாக வகுத்தார் பார அலியுல்லா
பூமியதிர்ந்திடப் படைகளை நிறுத்தினர் பெரிய அலியுல்லா
அந்த வேளையில் இம்லாக்கோடு இறமின் ராஜாவும்
குதிரைமேலேறி இருவரும் வந்தார் கோபமிகக் கொண்டு
படைமுன் வந்து இம்லாக்கென்போன் பார இடிபோல
ஜைத்தூன் தன்னை சண்டைக்கழைத்தான் இம்லாக்கு ராஜன்
சிற்றப்பன் சண்டைக்கு அழைத்ததை கேட்டுசிறந்த ஜைத்தூனு
அலியார்கிட்டே ஜைத்தூன் வந்து அதபாய் கைகட்டி
என்னிட சிற்றப்பன் சண்டைக்கழைக்கிறுன் எனக்கு விடைதாரும்
என்ற சொல்லைக் காதிலேகேட்டு ஏகன் புலியலியார்
பெண்கள் சண்டைக்கு போவது சரியல்ல பேசாமல் நில்லும்
அவனை வெல்ல அஸ்ஹாபுமார்களை அனுப்புகிறேனனும்.

வசனம்.

இப்படி அலிறலியல்லாஹு ஜைத்தூனுக்குச் சொல்ல அதைச் ஜைத்தூன் கேட்டு ஓ பாதுஷாவே! என்னை இப்போது சண்டைக்கு

அழைக்கிறது என்னுடைய சிறிய தகப்பன் ஆகையினால் நான் அவனுடனெதிர்க்க எனக்கு விடைதர வேணுமென்று கேட்க அச் சொல்லைக் கேட்டு அலிபுலி போக விடை கொடுத்தார். உடனேஜைத் தூன் குதிரையின் மேலேறித் தன் சிறிய தகப்பனாகிய இம்லாக்கின் முன்னில் போய் மிகுந்த ஆங்காரத்தோடு நிற்க அதுகண்டு இம்லாக் கும் எதிரில் வந்து நின்று ஓ மகளே! யென்று அதிகக் கோபத்தோடு நீ யென்ன விதத்திற்காக உன் தாய் தகப்பனுடைய பட்டணத்தை யழித்துக் கெடுத்துப் போட்டாய் இன்னம் நம்முடைய பெரிய சாமியைக் கொண்டும் உனக்கு வெட்கம் வரவில்லையா? இன்னம் அதனுடைய பயமில்லையா? இன்னம் நீ உங்கள் பெரியவர்களுடைய நடத்தைகளையும் விட்டுவிட்டாய் இன்னம் நீ உன் மார்க்கத்தை விட்டு இஸ்லாம் மார்க்கத்தைக் கைக்கொண்டாய் இன்னமெங்களை மோசஞ் செய்து அவர்களுடன் அங்குபோய் கூடியதனால் நீ பார்த்தாயா, உன்னை நம்முடைய பெரியசாமி இங்கேயிழுத்துக் கொண்டு வந்து விட்டது அது எதினாலெனில் நீ குற்றவாளியான படியினாலே இங்கு வெட்டுண்டு போகக் கொண்டு வந்து விட்டது. நீ இன்று என் கை யால் வெட்டுண்டு போவாய் தண்டாயுதத்தாலுன்னை யடிக்கிறேன் நீ தப்பித்துக் கொள்ளென்று உடனே தண்டாயுதத்தால் தலைமே லோங்கி யடித்தான் அவ்வடியை ஜைத்தூன் தன் கையிலிருந்த கேட கத்தினால் தாங்கிக் கொண்டார் பின்னுமடித்தான் அதையும் தாங்கிக் கொண்டார் பின்பு மூன்றாவது தரம் அவன் பெலமெல்லாங் கூட்டிக் கத்தியையுருவி தன்னுடைய பெரிய சுவாமியை மனதில் நினைத்து ஓங்கி வெட்டினான். அவ்வெட்டு எப்படி விழுந்ததெனில் மாசியில் நின்று இடி வீழ்ந்தாற்போ லிருந்தது அவ்வெட்டையும் ஜைத்தூன் தப்பித்துக்கொள்ள அவன் பெரு மூச்சுவிட்டு நம்முடைய அடி மூன்றும் விருதாவாய்ப் போயிற்றே யென்று ஆச்சரியப்பட்டு மெய் மறந்து திகைத்து நின்றுவிட்டான் அப்பொழுது ஜைத்தூன் தன் னுடைய வல்லமையை அவன் பேரில்காட்ட கோடையிடிபோல ஒரு வெட்டு வெட்டி பின்பு அவனுடைய இடுப்பில் கையைப் போட்டு ஜீனோடு மேலுக்குத் தூக்கிக்கொண்டு அலிறலியல்லாஹு விடத் திற்குக் கொண்டு வந்து நீ கலிமாச் சொல்வாயாகில் உன்னுயிரோடு பிழைத்துப் போவாய் இல்லாவிடில் இப்படியே அடிப்பட்டு போவாு யென்று சொல்ல அதற்கவன் என்னுயிர் போனபோதிலும் ஒரு பொழுதும் நான் கலிமா ஓதமாட்டேனென்று சொன்னான். அவன் சொன்னதை ஜைத்தூன் கேட்டு உடனே தன் கத்தியையுருவி இரண்டு

துண்டாகத் தலையை யறுத்து அவனை நரகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்

2-வது தம்பியினிடத்திற்கு ஓடிப்போகுதல்.

இம்லாக்கு வெட்டு பட்டுப்போனதை இறமின்பாதுஷா கண்டு, பயந்து இனி நாம் இங்கிருக்கக்கூடாது இருக்கில் உயிருக்குச் சேதம் வருமென்று பயந்து தன்கூட சில குதிரைகளைச் சேர்த்துக்கொண்டு அவ்விடம் விட்டு இன்னொரு தம்பியினுடைய பட்டணத்திற்கு ஓடிப் போய்விட்டான். பின்பு அலிறலியல்லாஹூ அப்பட்டணத்தைப் பிடித்துக் கொண்டு எல்லோரையும் தீனிலாக்கி ஈமான் கொள்ளும்படி செய்து அவ்விடமிருந்து உமரைக் கூப்பிட்டு இறம் பாதுஷா எங்கே ஓடிப்போயிருக்கிறான். அவன் போயிருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து வாவென்று சொல்ல, அதைக்கேட்டு உமர் சீக்கிரமாக வெளிப்பட்டு அவன் பின் தொடர்ந்துபோய் இடைவழியிற் கண்டு பிடித்து அவனுக்குத் தெரியாமல் கூடவே போனார். அப்போதவன் தம்பியினுடைய பட்டணமருகாகித் தான் வந்த செய்தியைத் தூதர்களால் தம்பிக்குத் தெரியப்படுத்த, உடனே தம்பி எதிர்கொண்டு வந்து அண்ணனை யழைத்துப்போய் ஒரு தோப்பினிடமாக உட்கார்ந்து இருவரும் பேசுகையில் தம்பி அண்ணனைப் பார்த்து உனக்கு என்ன மிடிமைப் பிடித்தது? இன்று பெரிய முசீபத்து வந்த வகையைச் சொல்லென்று கேட்டான் அதற்கு அவன் தம்பியைப் பார்த்து என் மகளால் எனக்கு இப்படிப்பட்ட பலா முசீபத்து வந்து பிடித்தது. என்னுயிரையு மிழக்கும்படி நேரிட்டது இன்னம் இஸ்லாமான படைகளைக் கூட்டிவந்து என்பேரில் விட்டாள். அவர்கள் என்னூரையும் பிடித்துக்கொண்டார்கள் இன்னம் இம்லாக்கையுங் கொன்று அவ்வூரையும் பிடித்துக் கொண்டார்கள். அதனால் நான் அங்கிருந்து இங்கு உன்னிடத்திற்கு ஓடிவந்து விட்டேன் என்னுயிரைத் தப்பித்துக் கொண்டேனென்று நானாவிதமாகிய பேச்சுகளெல்லாஞ் சொல்ல, அதற்குத் தம்பி நீ ஒன்றுக்கு மஞ்சவேண்டாம். அவர்களிங்குவர என்ன வல்லமையுண்டு. நீ பயப்படாமலிருமென்று சொல்ல, அப்பொழுது உமர் தன் தலைமேலிருந்த குல்லாவைக் கழற்றவும், எல்லார் கண்ணுக்குந் தெரியலானார். அப்போது ஷாஹே இறம் உமரைக்கண்டு ஹா வென்று சத்தமிட்டான். பின்பு இந்த பலா முசீபத்து என்னை விடவேயில்லை பின்றொடர்ந்து வருகிறதேயென்ன, அதற்கு உமர் ஓ பாதுஷாவே, உனக்கு இவைகளெல்லாஞ் சொல்ல கொஞ்சமும் வெட்கமில்லையே, ஓடி ஓடி அலைகிறாயேயென அது

கேட்டு ஷாஹே இறம் தம்பியைப்பார்த்து இந்தப்பாவி கால் நடையாக நானெங்கே போகிறேனே அங்கெல்லாம் வந்து கண்டு பிடிக்கிறான் எல்லாப் பலாவும் இவனைக் கொண்டே வருகிறதென்று சொல்ல, உடனே உமரைப் பிடிக்கும்படியாக உத்திரவு கொடுத்தான்.

அப்போது உமர் தன் கையிலிருந்த குல்லாவை யெடுத்துத் தலையிலிட்டுக் கொண்டார். உடனே யார் கண்ணுக்குந் தெரியாமல் மறைந்துவிட்டார். அங்கிருந்து ஓடிவந்து சகல சங்கதிகளும் அவ் விடம் நடந்தவை யெல்லாம் ஒன்றுந் தவறாமல் உமர் அலிறலியல் லாஹு விற்குச் சொன்னார். உடனே அலிறலியல்லாஹு தன்னுடைய படைகளோடு அவ்விடம் விட்டெழுந்து அவனோடி ஒளிந்திருக்கும் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது அவன் அலியார் வந்த செய்தியைக்கேட்டுத் தன்னுடைய படைகளெல்லாம் கோட் டையைவிட்டு வெளியே கொண்டு மைதானில் அணியணியாக நிறுத் தினர். உடனே அலி றலியல்லாஹு தன்னுடைய படைகளையும் அணியணியாக நிறுத்தினர் அப்போது இரண்டு படைகளு மொன்றோடொன் றெதிர்த்து இறத்த ஆறு வோடிவிட்டது. எங்கே பார்த்தபோதிலும் பிணங்கள் மலைமலையாகக் குவிந்துவிட் டது. இன்னம் கால்வேறாகவும், தலைவேறாகவும், உடல்வேறாக வும், கைவேறாகவும் வெட்டுண்டு பிணக்காடாய் விட்டது. அப் போது ஷாஹே இறமினுடைய தம்பியானவனுக்குக் கண்களிரண் டும் சிவந்து நெருப்புப் பறக்கும்படியாக இரண்டு படைக்கும் நடு வில் வந்து நின்று ஓ அறபுகளே, நீங்கள் யாரும் என்னோடெதிர்க்க வரவேண்டியதில்லை. ஜைத்தூனென்பவள் வரவேணுமென்று கூப் பிட்டுச் சொன்னான். அந்தச்சொல் எல்லார் காதிலும் விழுந்தது. அப்போது ஜைத்தூன் விடைபெற்றுக் கொண்டு தன் குதிரையின் மேலேறி மிகுந்த ஆரவாரத்தோடு அவன் முன்னாகப்போய் நின்று நீயேன் என்னை யழைத்தாயென்று கேட்க அதற்கவன் நீ இஸ்லாமாகி அந்த மார்க்கத்திலாய் உன் தகப்பனை ஊரைவிட்டுப் பறக்கும்படி செய்தாய். இன்னம் உன் சிறிய தகப்பனாகிய இம்லாக்கையும் கொன்று போட்டாய் நீ கேடுகெட்ட வழியே யெடுத்து இன்று என் பேரிலும் சண்டைக்கு வந்தாய் என்று சொல்லி ஆங்காரத்தோடு அதிக கோபங்கொண்டு கத்தியை யுருவி வெட்டினான் அவ்வெட்டை ஜைத்தூன் தன் கேடகத்தால் தாங்கிக்கொண்டு அவனுடைய இடுப் பில் கையைப் போட்டு தலைக்குமேல் தூக்கிக்கொண்டு இப்போது நீ சீக்கிரமாகக் கலிமா ஓதி ஈமான் கொள்வாயாகில் உன்னை உயிரோடு

விட்டு விடுகிறேன் இல்லாவிடில் இப்படியே தூக்கி பூமிமேல் அடித்து விடுகிறேனென்று சொல்ல அவன் பயந்து சந்தோஷத்தோடு கலிமா வோதி ஈமான் கொண்டு இஸ்லாமாகினான்.

மூன்றாவது தம்பியிடத்திற்கு ஓடிப்போகுதல்.

